www.padippakam.com

# பரமானந்தம் நூற்றாண்டு நிறைவு மலர்




குரும்பசிட்டி

## பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம்

படிப்பகம்

www.padippakam.com

With Best Compliments
From



Karumarie Motors

Importers Exporters & Distributors for Motor Spares

S-54 FIRST FLOOR, CENTRAL SUPERMARKET COMPLEX, COLOMBO 11.
PHONE : 94-1-344229 TELEFAX : 94-1-333343

*Branch :*
J/S. 281, STANLEY ROAD, JAFFNA
PHONE : 94-21-2130.

படிப்பகம்

www.padippakam.com

உ

சிவமயம்

# குரும்பசிட்டி
# பொன். பரமானந்தர் மகா வித்தியாலயம்
# நூற்றாண்டு நிறைவு மலர்

# பரமானந்தம்



வெளியீடு 01-07-2001

1900 2000

www.padippakam.com

வாழ்த்தியல்



# தமிழ்மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே

– சுப்பிரமணியபாரதியார்



படிப்பகம்

www.padippakam.com

உ

அம்பாள்துணை



" குரும்பசிட்டி எனும் பொற்பதி தன்னில்
விரும்பி அமர்ந்து இன்னருள் சுரந்து
கருணை பொழிந்திடும் மாரி அம்பிகை
திருவடி நிழலே தஞ்சம் எமக்கு "

**மலர்க்குழுவினர் :—**

திரு.ஆ.சி. நடராஜா,
திரு. ஏ.ரி பொன்னுத்துரை ,
திரு.ஆ. மகாதேவன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்

**1900**ஆம் ஆண்டில்
தமது இருபதாவது வயதில்
இவ் அரும் பேராலயத்தை நிறுவி,
நாற்பது ஆண்டுகள் அதிபராய் அமர்ந்து
எமது நற்பதியாம் குரும்பசிட்டியின்
கல்வி, கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு
ஆதார நாயகராக விளங்கிய
பேராசான் அமரர்

**பொன் பரமானந்த சற்குரு**

அவர்களது
பொன்னடிகளில் இம்மலரினைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

www.padippakam.com

# வித்தியாலயக் கீதம்

பொன்பர மானந் தர்புகழ் வித்தி
யாலயம் வாழிய வாழியவே
மன்பதை போற்ற வளர்ந்து சிறந்து
நிறைந் தென்றும் வாழியவே - பொன்பர

எண்ணு மெழுத்து மளாவுமு யர்பயன்
எய்து கலை பலவும்
வண்ண வளத்தொழில் முன்னிலைக் கல்வி
வள்ர்நெறியும் புகட்டி

மாணவ மலர்களின் புலன்களைத் திறன்களை
மனங்களைக் களித் தினிது
காணுயர் நெறிமுறை பேணி வளர்த்திடும்
கற்பகக் கலைக் கோயில் - பொன்பர

எண்ணிய வாக்குநர் புண்ணிய நோக்குநர்
எங்கள் தவப் பயனார்
கண்ணிகர் சான்றவர் பொன்பர மானந்தர்
கருத்தினிற் பணிபுரிந்து

புத் தெழில் வீரரைப் புகழ்கலை வாணரைப்
பொதுப் பணியாளர்களை
எத்திசை யும்மதித் தேயெழப் பெற்றிடும்
எங்கள் நலக் கோயில் -பொன்பர

**கவிஞர் வி.கந்தவனம்**

படிப்பகம்

www.padippakam.com

# நிறுவுநர்



ஆசிரியர் திலகம்

**பொன். பரமானந்தர் அவர்கள்**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நுழைவாயில்

நாம் பிறந்தமண் மனிதவாடையற்ற பிரதேசமாகிப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில், ஊரின் உடன் பிறப்புக்கள் உருக்குலைந்து உலகெலாம் சிதறிவிட்ட இவ்வேளையில் ஒரு வரலாற்றுக் கடமை விடுத்த அழைப்பு இம்மலராக முகிழ்த்தெழுந்து தங்கள் கரங்களில் விரிகின்றது.

குரும்பசிட்டியின் கல்வி வளர்ச்சிக்கும் கலை எழுச்சிக்கும் பண்பாட்டு உயர்ச்சிக்கும் வித்தாகி விருட்சமாகித் தண்ணிழல் தந்து இன்னறுங்கனிச் சோலையாக வளர்ந்து நின்ற எமது அறிவாலயம் போரின் கொடுமையால் இன்று நைந்து நசிந்து தள்ளாடுகின்றது. இவ்வேளையிலே இந்த மலர் மலர்வது பலரது மனங்களிலும் ஒருவித சலனத்தை ஏற்படுத்துவது எமது மனக்கண்ணிற் தெரிகின்றது.

குரும்பசிட்டி மண்ணிற் பிறந்த ஒவ்வொருவரும் அங்கு வாழ்ந்த காலத்தில் இப்பாடசாலையிற் பயின்றவர்களே ஆவர். நாடு போற்றும் நல்ல கல்விமான்களாக புலமைசால் அறிஞர்களாக, கலை ஆர்வலர்களாக, கமத்தொழில் வல்லோராக, கைத்தொழில் விற்பன்னர்களாக, வணிகச் செல்வர்களாக வாழையடி வாழையாக வளர்ந்தோங்க மேலோங்க வித்தியாரம்பம் செய்து வைத்தது இவ்வித்தியாலயமன்றோ. எனவேதான் எதிர்ப்பட்டுவரும் எல்லா இடர்ப்பாடுகளினையும் மறந்து எமது அறிவாலயத்தின் நூற்றாண்டு நிறைவைப் பூசிக்க வேண்டியவர்களாகவுள்ளோம். அதன் வெளிப்பாடே இந்த மலராகும்.

நீண்டு செல்லும் யுத்தக் கொடுமையால் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கிராமமே அஸ்தமித்துவிட்டதனாற் பல்லாண்டுகளாக வளர்ந்து வந்த எமது கிராமத்தின் பாரம்பரியங்கள் இடையறுந்துவிட்டன. சந்ததி இடைவெளி நாளுக்கு நாள் அகன்றகன்று செல்கின்றது. இப்பாடசாலையினது மட்டுமல்ல, கிராமத்தினது வரலாற்றினையும் எடுத்தியம்பவல்ல ஆவணங்கள் பலவும் மங்கிமறைகின்றன. எனவே, தற்போது கிடைப்பனவற்றையாவது பேணிப்பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்க வேண்டும் என்ற வேணவாவும் இம்மலர் உருப்பெற மற்றொரு காரணமாகும். இப்பணி எமது பாடசாலையினதும் கிராமத்தினதும் வரலாற்றினை எதிர்காலத்தில் செம்மைப்படுத்தும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும். வரலாற்றுச் சங்கிலி இடையறுந்துள்ள இன்றைய நிலையில் இந்தமலர் எம்மவர் இதயங்களைப் பிணைக்கட்டும்.

மலரின் இதழ்களைப் புரட்டும் எமது அன்பு நெஞ்சங்களே! ஒரு சொற் கேளீர்! மூலாதாரங்கள் முற்றுமுழுதாகக் கிடைக்காமை, தகவல்களைத் தரவல்லோர் உலகெலாம் சிதறிவிட்டமை போன்ற காரணிகளால் நிறைவாக இம்மலரை உருவாக்க முடியாதிருந்தது. எமது ஆற்றலுக்குட்பட்ட வகையில் முயன்று தகவல்களைப் பெற்றுள்ளோம். எனினும் ஏதாவது தவறுகள், தவிர்ப்புக்கள், திரிபுகள் காண்பீர்களாயின் தயங்காது சுட்டிக்காட்டி எமது பணிக்கு உற்சாகந் தரும்படி தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவை நிறைவு செய்ய வழிசமைக்கும்.

***மலர்க்குழுவினர்***



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்த்துரை

## குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம் நூற்றாண்டு நிறைவு

மேற்படி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை இடம்பெயர்ந்த நிலையிலும் கொண்டாடுவதற்கு முன்வந்துள்ளனர் இப்பாடசாலைப் பழைய மாணவர்கள். போர்க்காலச் சூழ்நிலையில் இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரியில் இயங்கிவரும் இப்பாடசாலை நூறு ஆண்டுகளை நிறைவேற்றியுள்ளது. உரியமுறையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடமுடியாமல் இருப்பது குறித்து இப்பாடசாலைச் சமூகத்தினர் விசனப்படுகின்றனர். எனினும் நூற்றாண்டு விழா நினைவாக மலர் ஒன்றை அச்சிட்டு வெளியிட இருப்பது மகிழ்ச்சியான நிகழ்வாகும்.

பொன். பரமானந்தர்மகாவித்தியாலயம் அறிஞர்கள் பலரையும் பரோபகாரிகள் பலரையும் சமூக நலன்விரும்பிகள் பலரையும் உருவாக்கிய பெருமையைத் தனதாக்கிக் கொண்டது. இடம்பெயர்ந்தும் தமது கிராமத்துப் பணிகளை நல்லபடி ஆங்காங்கு நடாத்திவருகின்ற சிறப்பும் குரும்பசிட்டி வாழ் மக்களுக்கு உண்டு. ஈழகேசரி பொன்னையா அவர்கள், கவிஞர் கந்தவனம் அவர்கள், கனக. செந்திநாதன் அவர்கள் போன்ற அறிஞர்களால் அறிவுவளம்பெற்ற இவ்வூரில் அமைந்த பரமானந்தர் வித்தியாலயப் பழைய மாணவர்களை வாழ்த்தி இவர்கள் மேற்கொள்ளும் பணிகள் ஓங்கி உயரவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.**
சமாதான நீதிபதி
தலைவர்



படிப்பகம்

www.padippakam.com

# சகல சௌபாக்கியமும் பெற வாழ்த்துகிறேன்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற அமுதவாக்கிற்கிணங்க வலிகாமம் வடக்கில் குரும்பசிட்டியூரில் தவப்புதல்வனாக அவதரித்த பொன். பரமானந்தரின் அரிய சேவையின் நினைவாலயமாக, நினைத்ததை நிறைவேற்றிய ஆலயமாக, ஆயிரம் ஆயிரம் ஆசிரியர்களையும், அரசாங்கத்தில் வெவ்வேறு நிலையில் பதவிவகிக்கும் உத்தியோகத்தர்களையும், உருவாக்கிய, உயர வைத்த வாழவைத்த குரும்பசிட்டி பொன். பரமானந்த மகாவித்தியாலயம் தான் உயிர்பெற்ற உலகில் ஒரு நூற்றாண்டுப் பூர்த்தியை, நிறைவை - நூற்றாண்டுவிழாவாகக் கொண்டாடும்பொழுது வெளிவரும் "பரமானந்தம்" மலருக்கு என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

காலத்தின் தேவையறிந்து, கல்வியின் பெருமையுணர்ந்து எந்த உன்னத நோக்கத்தோடு பொன். பரமானந்தர் தன்னலமற்றுத் தமிழையும் தன்னவர்களையும், தன் ஊரவர்களையும் வாழவைக்கும் நோக்கில் இப்பாடசாலையை நிறுவினாரோ அந்நோக்கம் இன்றுவரை நிறைவேறிக்கொண்டுதான் வந்திருக்கிறது. காலநேரச் சூழ்நிலை காரணமாக இப்பாடசாலை இடம்பெயர்ந்தபோதும் இன்னும் இயங்கிக்கொண்டு இருப்பது அதன் ஸ்தாபகரின் ஆன்மாவிற்குச் சாந்தியைக் கொடுக்கும். குரும்பசிட்டி மக்களும், இப்பாடசாலைப் பழைய மாணவரும் நன்றி மறக்கவில்லை. தம் அறிவாலயத்தை மறக்கவில்லை என்பதற்கு நூற்றாண்டுவிழாவும் பரமானந்தம் மலரும் சான்றுபகரும். குரும்பசிட்டி மக்களும், பொன் - பரமானந்தர் வித்தியாலயமும் மீண்டும் சொந்தஇடம்சென்று நிலைபெறவும், எழுமைக்கும் பயனளிக்கும் கல்விப் பணியைத் தொடரவும், சகல சௌபாக்கியங்களைப் பெறவும் ஆண்டவனைப் பிரார்த்தித்து மீண்டும் என் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

**பத்தினியம்மா திலகநாயகம்**
பிரதேச செயலர்.
வலிகாமம் வடக்கு.

# வளர்க எமது அறிவாலயம்

1982 ஆம் ஆண்டில் இப் பாடசாலைக்கு இடமாற்றம்பெற்று ஆசிரியப் பணிபுரிந்த நான் 04.04.2000 முதல் அதிபருக்குரிய கடமைகளையும் ஏற்று நடத்துகின்றேன். என்னை வளர்த்தெடுத்த இவ்வறிவாலயத்திற் கடந்த 18 ஆண்டுகளாகப் பணிசெய்யக் கிடைத்தமையைப் பெரும்பேறென்றே கருதுகிறேன்.

போரினால் அல்லற்பட்டு மீகாமன் இல்லா மரக்கலம் போல எமது பாடசாலை இயங்கிவரும் இவ்வேளையிலே பழைய மாணவர்கள் வெளியிடும் இந்நூற்றாண்டு நிறைவு மலர் இதன் எதிர்கால வளர்ச்சிக்குக் கொழுகொம்பாக அமையுமென எண்ணுகின்றேன். எமது பாடசாலை சொந்த இடத்தில் இயங்குகின்ற காலம் வரும். அப்பொழுது எமது மக்கள் உற்சாகத்துடன் உதவிட ஓர் உந்து சக்தியாக இம் மலர் அமையும் என்பது எனது நம்பிக்கை.

‘கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகுக’ என்ற விருது வாசகத்தைத் தாங்கி நிற்கும் எமது பாடசாலை, ‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’ என்ற முதுமொழியைப் போற்றி எமது மக்களை நெறிப்படுத்திய இப்பாடசாலை, திரு.பொன்.பரமானந்தரின் இலட்சியக் கனவுகளைச் சுமந்துநிற்கும் எமது பாடசாலை எதிர்காலத்தில் ஆயிரங்காலத்துப் பயிராக வளர்ந்தோங்க இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**“வாழ்க எமது பழைய மாணவர்கள் பணி**
**வளர்க எமது வித்தியாலயம்.”**

பொன்.பரமானந்தர் ம.வி,
மருதனார்மடம்

**க.சிவதாசன்,**
**அதிபர்**

www.padippakam.com

# எங்கள் அதிபர்



திரு.க.சிவதாசன் அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க
# திரு. பொன். பரமானந்தர் கல்லூரி.

கவிஞர் ~ வி. கந்தவனம்

வாழ்த்தி வணங்குதற் குரியவர்
உபாத்தியாயர் பொன் பரமானந்தர்
'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'
என்பதால்

எத்தனை அறிஞர் எத்தனை எழுத்தாளர்
எத்தனை கலைஞர் பிறந்தனர் எழுந்தனர்
அத்தனை அற்புதத் தொட்டில் அவர் நிறுவிய
கல்விக்கோயில்.

உதய சூரியனுக்கு மற்றொரு பெயர்
அதிபர் பொன் பரமானந்தர்
அறியாமை இருளை அகற்றியவர்
என்பதால்

அட்டூழியத்தால் அது சிதைந்து விட்டாலும்
கெட்டழியாது, அழிக்க முடியாது —
அதிசக்தி மிக்க அமுதசுரபிக்கு
அழிவில்லை.

சொல்லால் செயலால் மனத்தால்
எல்லோரும் காண வாழ்ந்த வள்ளுவர்
குரும்பசிட்டிக்கு ஒழுக்கத்தை வகுத்தவர்
என்பதால்

பொதுவானவர் புரிவது கடமை கண்ணியம்
பதுமானவர் பதிவது பொதுநலம் புண்ணியம் —
எது கூறினும் இவர் சேவைக்கு
இணையில்லை!

அறிவும் ஆற்றலும் மிகுந்த
குரும்பசிட்டிக்குத் தந்தையானவர்
அதன் வளர்ச்சிக்குப் பிள்ளையார் சுழி போட்டவர்
என்பதால்

நூறு வயது — கொண்டாடப்பட வேண்டியதுதான்
நூறுகள் பல காணவுள்ள ஒரு கல்விக் கூடத்தின்
முதல் நூற்றாண்டைக் கொண்டாடுபவர்கள்
கொடுத்து வைத்தவர்கள்!

விரும்பி உலகம் போற்றும் வகையிற்
குரும்பசிட்டியைப் பொன்வயலாக்கிய உழவர்
உன்னத கலைகளுக்கு வித்திட்டவர்
என்பதால்

வாழ்க கற்பகமாகிய குருமணி
வளர்க நம் கண்மணி குரும்பைநகர்!
வாழ்க திரு. பொன். பரமானந்தர் கல்லூரி
சூழ்க இன்பம்!



படிப்பகம்

www.padippakam.com

# இந்த மலரில்


| | |
|---|---|
| **I வாழ்த்தியல்** | பக்கம் |
| 1. தமிழ்மொழி வாழ்த்து | II |
| 2. சமர்ப்பணம் | III |
| 3. வித்தியாலய கீதம் | IV |
| 4. நுழைவாயில் | V |
| 5. வாழ்த்துச் செய்திகள் | VI |
| 6. வாழ்க பொன். பரமானந்தர் கல்லூரி | XI |
| **II. பரமானந்த இயல்** | |
| 7. நூற்றாண்டுப் பாதையில் குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகாவித்தியாலயம் | 1 |
| 8. அதிபர் பெருந்தகைகள் | 8 |
| 9. அன்றும் இன்றும் | 23 |
| 10. ஆசிரிய மணிகள் | 25 |
| 11. நாற்பதின் முற்பகுதிகளில் மகாதேவ வித்தியாசாலை - ஓர் எழுத்தாளனின் மனப்பதிவுகள் | 32 |
| 12. என்னை வளர்ந்தடுத்த எமது வித்தியசாலை | 36 |
| 13. பரமானந்தர் வித்தியாலயத்துப் பசளை | 41 |
| 14. நானும் திரும்பிப் பார்க்கிறேன் | 44 |
| 15. குரும்பசிட்டியின் வரலாற்றில் பொன்.பரமானந்தர் மகாவித்தியலயத்தின் இடம் | 48. |
| **III. பொதுவியல்** | |
| 16. யாழ்ப்பாணத்துக் கல்விப்பாரம்பரியம் | 52 |
| **IV. குரும்பசிட்டியியல்** | |
| 17. குரும்பசிட்டியின் வரலாற்றுப்பின்புலம் | 59 |
| 18. பொதுப்பணி மன்றங்களும் சமூகஎழுச்சியும் | 61 |
| 19. கலை மலிந்த பூமி | 74 |
| 20. நூற்றாண்டை அணிசெய்த அன்றோர்கள் பன்னிருவர் | 83 |
| 21. எங்கள் மத்தியில் ஏந்தல்கள் ஐவர் | 95 |
| 22. எழுத்துலகில் எம்மவர்கள் | 100 |
| 23. அருள்சுரக்கும் ஆலயங்கள் | 102 |
| 24. வளம் பெருக்கிய வணிகச் செல்வர்கள் | 103 |
| 25. கழகம் பல கண்ட விளையாட்டு வீரர்கள் | 104 |
| 26. மத்திய விளையாட்டு மைதானம், குரும்பசிட்டி இடம்பெயர்ந்தோர் நலன் காப்புக்கழகம் | 105 |
| 27. நலிவுற்றோர் நலன்நோம்பு நிலையம் குரும்பசிட்டி நலன்புரிச் சபை -கனடா | 106 |
| 28. வற்றாத நீர்சுனை | 107 |
| 29. நன்றியுரை | 108 |


படிப்பகம்

II பரமானந்த இயல்

# நூற்றாண்டுப் பாதையில் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம்.

ஆ.சி.நடராஜா

1910 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய இவ்வறிவாலயம் கடந்த நூற்றாண்டு காலத்தில் ஏற்படுத்திய சாதனைகள், எதிர்கொண்ட சோதனைகள், அடைந்துவந்த வேதனைகள், அவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்த சக்திகள்பற்றிய செய்திகளை நாம் அச்சொட்டாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய பல ஆவணங்கள் இன்று இழக்கப்பட்டுள்ளன. கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு இப் பாடசாலையின் வரலாறு இங்கு ஆராயப்படுகிறது,

**வரலாற்றுப் பின்புலம்:**

இலங்கையை ஆட்சிசெய்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் சுதேச மதங்களை அடக்கி ஒடுக்கித் தமது கிறிஸ்தவ மதப்பிரிவுகளை வளர்க்கும் மதத்தீவிரவாதிகளாக விளங்கினர். பிரித்தானியர் ஆட்சி ஏற்பட்டதும் அவர்கள் கடைப்பிடித்த சமய சமரசக் கொள்கை காரணமாகச் சுதேச மதங்களான பௌத்தமும் சைவமும் 19 ஆம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி காணத்தொடங்கின. யாழ்ப்பாணத்தில் சைவசமய மறுமலர்ச்சியின் பிதாமகராக விளங்கிய ஆறுமுகநாவலர் தமது பிரசங்கங்களாலும் துண்டுப்பிரசுரங்கள், நூல்களினாலும் சைவசமயிகளை விழிப்படையச் செய்தார்.

பிரித்தானியர் ஆட்சியின்போதும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பப் பல மதக் குழுக்கள் இலங்கைக்கு வந்தன. இக்குழுக்கள் தமது மதத்தைப் பரப்புவதற்கு வாய்ப்பாகப் பாடசாலைகளை நிறுவின. அங்கு கல்வி கற்கவரும் மாணவர்கள் கிறிஸ்வத மதத்திற்குச் சேரும்படி வற்புறுத்தப்பட்டனர். யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த இவ்வாறான மதக்குழுக்களில் அமெரிக்கன் மிசன் முதன்மைபெற்றது. 1816 இல் தெல்லிப்பழையில் முதல் அமெரிக்கன் மிசன் பாடசாலை (இன்றைய யூனியன் கல்லூரி) நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து, குரும்பசிட்டியைச் சூழவுள்ள மயிலிட்டி, ஏழாலை, வறுத்தலைவிளான், புன்னாலைக்கட்டுவன் முதலான இடங்களிலும் இந்த மிசன் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

குரும்பசிட்டியிலும் 19 ஆம் நுற்றாண்டின் அந்திமப் பகுதியில் ஜோன் என்னும் பாதிரியார் பேய்க் கிணற்றின் வடதிசையில் 'நின்ற ஒரு புளியமர நிழலில் போதனைகளை ஆரம்பித்திருந்தார் எனவும் அதனைத் தொடர்ந்து குரும்பசிட்டிச் சந்தியிலிருந்து குப்பிளான் செல்லும் வீதியில் சுமார் 150 மீற்றர் தூரத்தில் வீதியின் கிழக்குப் புறத்தில் ஒரு

கிறிஸ்தவப் பாடசாலை அமைக்கப்பட்டது என்றும் அறிய முடிகிறது. அது 'மேரி பாடசாலை' என அழைக்கப்பட்டது. ஜோன் கற்பித்த புளியடிசார்ந்த காணியின் உறுதியில் 'மேரி வளவு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேரி பாடசாலையில் ஈழகேசரி நா.பொன்னையா அவர்கள் கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவப் பாதிரிமார்கள், மக்களை மதம்மாற்றப் பலம்மிக்க ஆயுதமாகப் பாடசாலைகளை அமைத்துச் செயற்பட்டமையைக் கண்ட ஆறுமுகநாவலர், சைவப் பாடசாலைகளை நிறுவுவதே இவ்வச்சுறுத்தலை எதிர்கொள்ள வழி என்று தீர்மானித்தார். 1848இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியசாலையை ஆரம்பித்தார். கிராமங்கள்தோறும் சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்கும்படி பிரசாரம் செய்தார். இதனால் சைவப்பாடசாலைகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. பேராசிரியர் சு.வித்தியானந்தனது பாட்டனார் சின்னத்தம்பியுடையாரால் வீமன்காமம் டச்சு வீதியில் 1891 ஆம் ஆண்டில் 'சுப்பிரமணிய வரோதய வித்தியசாலை' (தற்போதைய வீமன்காமம் மகா வித்தியாலயம்) ஆரம்பிக்கப்பட்டது. அதுவே குரும்பசிட்டிக்கு அண்மையாக அமைந்த முதற் சைவப் பாடசாலையாகும்.

**எமது பாடசாலையின் ஆரம்பம்:**

பொன்.பரமானந்தர் இவ் வீமன்காமப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று முதன்மை மாணவராக விளங்கினார். அங்கு சிலகாலம் ஆசிரியராகவும் கடமையாற்றினாரென்பது செவிவழிச் செய்தியாகும். உடையார் குடும்பத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவர் குரும்பசிட்டியிலும் ஒரு சைவப் பாடசாலையை அமைக்கப் பரமானந்தருக்கு உதவினார். தமது மாமனார் தருமசாதனம் செய்த காணியில் ஒரு கட்டடத்தை அமைத்துப் பரமானந்தர் இப்பாடசாலையை ஆரம்பித்தார். இது **மயிலிட்டி தெற்குச் சைவத்தமிழ்க் கலவன் பாடசாலை** என அழைக்கப்பட்டது.

**பெயர் மாற்றம்:**

மயிலிட்டி தெற்கு என்பதே எமது கிராமத்திற்கு வழங்கப்பட்ட பழைமையான பெயராகும். குரும்பசிட்டி என்னும் பெயர் சட்டரீதியாக ஏற்கப்பட்டது, 1965 - 1970 காலப்பகுதியிலேயே ஆகும். எனினும் கிராமியஎழுச்சி காரணமாகப் பொது நிறுவனங்களது பெயர்கள் குரும்பசிட்டி என்ற பெயருடன் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தே வழங்கப்பெறத் தொடங்கியமையும் காண்கிறோம்.

சைவத்தமிழக் கலவன் பாடசாலை என்ற பெயர் சில காலத்தின் பின் **மகாதேவா வித்தியாசாலை** என்று பெயர்மாற்றம் பெற்றது. பரமானந்தரது மகனின் பெயர் மகாதேவன் என்பதும் அவர் 1919 இல் பிறந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1975 இல் '**மகாதேவா வித்தியாசாலை**' என்ற பெயர் கைவிடப்பட்டு '**பொன் பரமானந்தர் வித்தியாலயம்**' என அழைக்கப்படலாயிற்று. இப்பாடசாலையின் வளர்ச்சி நிலையை அவதானித்த கல்வித் திணைக்களம் 1982 இல் வழங்கிய தரஉயர்வின் பேறாகப் '**பொன். பரமானந்தர் மகாவித்தியாலயம்**' என்ற இன்றைய பெயர் ஏற்படலாயிற்று.

**மேரி பாடசாலை மறைவு:**

தமிழ் சைவப் பற்றுக்களினால் உந்தப்பட்ட திரு. பரமானந்தர் அவர்கள் தாம் ஆரம்பித்த பாடசாலையை நல்லபடி நடத்திச் சென்றமையால் கிறிஸ்தவப் பாடசாலையான 'மேரி பாடசாலை' நீண்டகாலம் நிலைக்க முடியவில்லை. மக்கள் எழுச்சிகொண்டு எதிர்ப்புத் தெரிவித்தமையால் அப்பாடசாலை மூடப்பட்டது. இது பரமானந்தரது இலட்சியத்திற்குக் கிடைத்த வெற்றியாகும். குரும்பசிட்டி ஒரு தனிச்சைவக் கிராமமாக விளங்கிவரலாயிற்று.

**தரமாற்றங்கள்:**

1900 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1902 இல் உதவி நன்கொடைபெறும் பாடசாலையாக மாறியது. தரம் 8 வரை இருந்த இப்பாடசாலையில் 1920 ஆம் ஆண்டளவில் ஆசிரிய தராதரப் பத்திர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. முதலாம் வருடம், இரண்டாம் வருடம், மூன்றாம் வருடம் என விளங்கிய அவ்வகுப்புக்கள் காலகதியில் நீக்கப்பட்டு 9ஆம், 10ஆம், 11ஆம் தரங்களென மாற்றியமைக்கப்பட்டன.

1946ஆம் ஆண்டு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆரம்பமாகியது. அதனால் ஆரம்ப வகுப்புக்கள் மட்டும் பரமானந்தரது பாடசாலையில் நடத்த அனுமதிக்கப்பட்டு, ஏனைய மேல் வகுப்புக்கள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டன. இதனால் மாணவர், ஆசிரியர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. 1928 இல் 296 மாணவர்களும் 9 ஆசிரியர்களும் காணப்பட்டனர். 1946 இல் 164 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் காணப்பட்டனர். 1960 ஆம் ஆண்டில் அரசாங்கம் தனியார் பாடசாலைகளை அரசுடமையாக்கமுற்பட்டது. இதனால் 01.02.1962 இல் இப்பாடசாலையும் அரசபாடசாலை ஆகியது.

புதிய கல்விக் கொள்கைப்படி இப்பாடசாலையில் மீண்டும் மேல்வகுப்புக்களை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டது. 1969இல் தரம் ஆறு ஆரம்பிக்கப்பட்டுப் படிப்படியாக ஏனைய வகுப்புக்கள் உருவாகி 1977இல் 10 ஆம் வகுப்பும் ஏற்படுத்தப்பட்டது. இதன் பயனாக மாணவர், ஆசிரியர் தொகை மீண்டும் இங்கு அதிகரித்தது.

| வருடம் | மாணவர் | ஆசிரியர் |
|---|---|---|
| 1970 | 335 | 10 |
| 1977 | 525 | 19 |
| 1984 | 776 | 21 |
| 1985 | 815 | 25 |

**முகாமையாளர்கள்:**

1900 ஆம் ஆண்டு முதல் 1962 இல் அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை இப்பாடசாலையில் 7 பேர் முகாமையாளர்களாகக் கடமையாற்றியுள்ளனர். அவர்கள் முறையே திரு. பொன்னம்பலம் உடையார், திரு.சின்னத்தம்பி (சின்னச்சட்டம்பியார்),

www.padippakam.com

திரு. T.R.நல்லையா, திரு.பொன்.பரமானந்தர் (ஓய்வுபெற்ற பின்), திரு. R.R.நல்லையா, திரு.ப.மகாதேவா, திரு.P.S. நடராசா ஆகியோராவார்.

**அரும்பணியாற்றிய அதிபர்கள்:**

கடந்த நூற்றாண்டுக் காலத்தில் 12 அதிபர்கள் இங்கு கடமையாற்றியுள்ளனர்.

| | பெயர் | முதல் - வரை | வருடம் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.பொன்.பரமானந்தர் **குரும்பசிட்டி** | -05-1900 - 08.12.39 | 40 | 07 |
| 2. | திரு.சீ.கணபதிப்பிள்ளை **குரும்பசிட்டி** | 01-01-40 - 25-10-60 | 20 | 09 |
| 3. | திரு.சீ.வைத்திலிங்கம் **குரும்பசிட்டி** | 26.10.60 - 31.01.62 | 01 | 03 |
| 4. | திரு.த.கனகசபை **மட்டுவில்** | 01.02.62 - 31.01.66 | 04 | 00 |
| 5. | திரு.சீ.தம்பிப்பிள்ளை **குரும்பசிட்டி** | 01.02.66 - 07.01.68 | 01 | 11 |
| 6. | திரு.மு.க.சுப்பிரமணியம் **குரும்பசிட்டி** | 19.01.68 - 26.03.77 | 09 | 02 |
| 7. | திரு.சி.தாமோதரம்பிள்ளை **புன்னாலைக்கட்டுவன்** | 28.03.77 - 26.07.77 | 00 | 03 |
| 8. | திரு.வை.பொன்னையா **பன்னாலை** | 27.07.77 - 19.09.78 | 01 | 01 |
| 9. | திரு. சி.கனகசுந்தரம் **குரும்பசிட்டி** | 20.09.78 - 18.02.86 | 07 | 04 |
| 10. | திரு. த.சிவராசா **கட்டுவன்** | 01.03.86 - 01.01.90 | 03 | 10 |
| 11. | திரு.சு.தளையசிங்கம் **கட்டுவன்** | 02.01.90 - 14-04-00 | 10 | 03 |
| 12. | க. சிவதாசன் **குரும்பசிட்டி** | 14-04-2000 - | | |

மேலே கண்ட விபரங்களை நோக்கும்போது 12 அதிபர்களில் 7 பேர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் சுமார் 80 வருடங்கள் பதவி வகித்துள்ளனர். இதில் பரமானந்தர் அவர்கள் சுமார் 40 ஆண்டுகளும், கணபதிப்பிள்ளை அவர்கள் 20 வருடங்களும் பணிபுரிந்துள்ளனர். சிவதாசன் தவிர்ந்த ஏனைய ஐவரும் பரமானந்தரது மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பரமானந்தரது அர்ப்பணிப்பும் ஆளுமையும் அயரா உழைப்பும் இவ் ஐவரிலும் செறிந்து துலங்கியதில் வியப்பில்லை. இவர்கள் தமது சற்குருவுக்குச் செய்யும் நன்றிக்கடன் என்று அல்லும் பகலும் பாடசாலையின் உயர்ச்சிக்கு உழைக்கலாயினர். ஏனைய அதிபர்களும் இங்கு சிறப்புடன் செயற்பட இச்சூழல் துணைபுரிந்தது என்று கொள்வதிற் தவறில்லை. பாடசாலையின் உயர் விழுமியங்களை உள்வாங்கித் தமது ஆளுமைக்கு ஏற்ற பாங்கில் அவர்கள் செயற்பட்டுள்ளனர்.



படிப்பகம்

**வள அபிவிருத்தி:**

பரமானந்தர் அவர்கள் பொன்னம்பலம் உடையாரினதும் (சின்னச்சட்டம்பியார்) சின்னத்தம்பியினதும் உதவிகளைப் பெற்றுப் பாடசாலையை ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் அவர் அமைத்த பாடசாலை மண்டபம் சுமார் 80' x 40' கொண்டது. கண்ட கற்களால் சுண்ணாம்புச் சேர்வையில் அது கட்டப்பட்டது. 20' x 20' மதிக்கத்தக்க ஒரு மேடை அதனுள் அமைந்திருந்தது. சுமார் 2' x 2' சதுர நெடுந் தூண்களில் அமைந்த இம் மண்டபம் முப்புறம் அரைச்சுவர் உடையது; கிடுகினால் வேயப்பட்டிருந்தது. தென்புறத்து மேடைக்கப்பால் அமைந்த சுவரினை அடுத்து அலுவலக அறை இருந்தது. இம்மண்டபத்தின் மேற்கில், கிழக்கு மேற்காக ஒரு கொட்டில் அமைந்திருந்தது.

1960இல் திரு. கணபதிப்பிள்ளை அதிபர் காலத்தில் இப்பழைய மண்டபம் அகற்றப்பட்டு 90' x 35' கொண்ட மேடையுடன்கூடிய நாலு மூலைகளிலும் அறைகளையுடைய இன்றைய மண்டபம் அமைக்கப்பட்டது. ஊர் மக்களது நிதியில் இது உருப்பெற்றது.

1966இல் அதிபராகிய திரு.சீ.தம்பிப்பிள்ளை ஓட்டினால் வேயப்பட்டிருந்த இப்பிரதான மண்டபத்துக்குரிய கதவு, யன்னல்களைப் பொருத்துவித்து, எஞ்சிய பூச்சு வேலைகளையும் அரச நிதியில் நிறைவு செய்வித்தார்.

1968 இல் அதிபராகிய திரு.மு.க.சுப்பிரமணியம் மேற்குப் புறத்தமைந்த தற்காலிகக் கட்டடத்தை அகற்றி 60' x 20' கொண்ட 3 அறைகளுடனான நிரந்தர கட்டடத்தைப் பொதுமக்களது நிதியுதவியில் அமைப்பித்தார். இக்கட்டடத்துக்குச் சமாந்தரமாக 60' x 20' கொண்ட கட்டடமொன்றை 1971இல் அரசாங்க நிதிமூலம் பிரதான மண்டபத்தின் கிழக்குப்புறத்திற் கட்டுவித்தார். 1976 - 1977 இல் 70' x 25' அளவுடைய மாடிக்கட்டடம் ஒன்றையும் அரச செலவில் அமைப்பித்தார். ஆறு வகுப்பறைகள் கொண்ட இக் கட்டடம் கிழக்கு மேற்காகப் பிரதான மண்டபத்தின் கிழக்குப் பக்கத்தில் அமைந்தது. கொழும்பிற் செயற்பட்ட குரும்பசிட்டி நலன்புரிச் சங்கத்தின் மூலம் பாடசாலைக்கு மின்னிணைப்பு இவர் காலத்தில் செய்விக்கப்பட்டது.

1977இல் திரு. வை.பொன்னையா அதிபராக விளங்கியபோது நீர் விநியோகத்துக்கு இன்றியமையாத தண்ணீர்த்தாங்கி ஒன்றை உரிய முறையில் பொதுமக்களிடம் நிதி சேகரித்து அமைப்பித்தார்.

அதிபர் திரு.சி.கனகசுந்தரம் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பெருந்தடையாக இருந்த காணிப்பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுத்துத் தென் எல்லையிலிருந்த காணியைச் சுவீகரிப்புச் செய்வித்தார்.

அதிபர் திரு.த.சிவராசா அவர்கள் சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணியின் தென்புறத்தில் கிழக்கு மேற்காக 50' x 25' கொண்ட மாடிக்கட்டடம் ஒன்றை அரச நிதியில் அமைப்பித்தார். பிரதான மண்டபத்தின் தென்புறத்தமைந்த கட்டடத்தின் எஞ்சிய வேலைகளையும் நிறைவு செய்தார்.

**முதல் இடப்பெயர்வு:**

1986 யூன் மாதம் உள்நாட்டு யுத்தக்கொடுமையால் குரும்பசிட்டி மக்கள் முற்றாகவே இடம்பெயர்ந்தனர். அதனால் முதலில் ஏழாலை மகாவித்தியாலயத்திலும்

பின்பு குப்பிளான் விக்கினேஸ்வர வித்தியாலயத்திலும் இப்பாடசாலை இயங்கியது. இப் போர்ச்சூழலில் பாடசாலையின் கூரை ஓடுகள் அனைத்தும் முற்றாகவே அகற்றப்பட்டுக் கட்டடத்துக்கும் பெருஞ் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**பிரஜைகள் குழு உதவி:**

இந்திய அமைதிப்படை நிலைகொண்டபோது மக்கள் மீண்டும் கிராமத்துக்குத் திரும்பமுடிந்தது. ஆனால், பாடசாலை இயங்காமையால் தமது சிறார்களது கல்வி வசதியைக் கருத்திற் கொண்ட மக்கள், மீளக் குடியேறுவதில் ஆர்வம் காட்டவில்லை. பாடசாலைப் புனரமைப்புக்குக் கல்வித் திணைக்களமும் உடன் உதவிவழங்க முடியாத நிலையிலிருந்தது. இந் நிலையில் குரும்பசிட்டிப் பிரஜைகள் குழு பொதுமக்களிடம் கடன்பெற்று ரூபா 75,000 செலவில் ஓடுகளினால் அனைத்தையும் வேய்வித்துத் திருத்த வேலைகள் பலவற்றையும் சிரமதானமாக மேற்கொண்டது. இதனால் 1987 விஜயதசமியன்று மீண்டும் பாடசாலை குரும்பசிட்டியில் இயங்க ஆரம்பித்தது.

**இரண்டாவது இடப்பெயர்வு:**

1990 யூன் மாதத்தில் ஏற்பட்ட போர்ச்சூழலால் குரும்பசிட்டி மக்கள் இரண்டாவது முறையாக முற்றாக வெளியேறிவிட்டனர். இன்றுவரை தமது சொந்த மண்ணுக்கு ஒருவராவது திரும்பமுடியாதநிலை காணப்படுகிறது. 1998இல் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஐவர் உரிய அனுமதியுடன் ஊருக்குச் சென்றபோது பாடசாலைக் கட்டடங்களது சுவர்கள் மட்டும் இருப்பதனை அவதானித்துள்ளனர்.

1990இல் ஏற்பட்ட இவ்விரண்டாவது இடப்பெயர்வின் பின் பாடசாலை மயிலணி மகாவித்தியாலயம், மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் என்பவற்றில் மாறிமாறி இயக்கப்பட்டு, இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்திற் செயற்படும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியுடன் சேர்ந்து இயங்குகின்றது. ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்கள் மட்டும் இன்று உள்ளன. 24 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். வகுப்புக்கள் யூனியன் கல்லூரியின் வகுப்புக்களுடன் இணைக்கப்பட்டமையால் ஆசிரியர்களைக் கல்வித் திணைக்களம் வேறு பாடசாலைகளுக்கு இடம்மாற்றிவிட்டது. 2000.04.14 இல் அதிபர் திரு.சு.தளையசிங்கம் அவர்கள் ஓய்வுபெறப் பதில் அதிபராகத் திரு.க.சிவதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பரமானந்தர் பாடசாலையின் பழைய மாணவர்; 1982 முதல் இங்கு ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இவருடன் மேலும் ஒரு ஆசிரியரே கடமையாற்றுகின்றார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக் கல்விச் சமூகம் காட்டும் அரவணைப்பில் இன்று எமது பாடசாலை இயங்குகின்றது.

**முடிவுரை:**

தமது இருபதாவது வயதில் இப்பாடசாலையை ஆரம்பித்த பொன்.பரமானந்தர் குரும்பசிட்டியின் தலைமகன்; தவப்புதல்வர்; பாமரர்களாக விளங்கிய எமது ஊர் மக்கள், பண்பட்ட கல்வியாளர்களாக எழுச்சி பெற வித்திட்டவர்; தமது வாழ்நாளை ஊருக்காகவே அர்ப்பணித்த மாமனிதர்; வீடுவீடாகச் சென்று மாணவர்களை வரவழைத்துத் தமது பாடசாலையை வளர்த்தவர். இரவிற்கூட மாணவர்களைப் பாடசாலையிற் தங்கவைத்துப் போதித்தவர்.

ஆரம்பகாலத்தில் இப்பாடசாலையை அரசாங்கம் அங்கீகரிப்பதைத் கிறீஸ்தவர்கள் தடுத்துவந்தனர். எனவே முதல் ஈராண்டுகள் எவ்வித வருமானமும் இன்றிப் பாடசாலையை நடாத்தினார். 1902 இல் அரசாங்க அங்கீகாரம் கிடைக்கப்

பெற்றாலும் ஆண்டுக்கு ஒரு முறையே அரசநன்கொடை கிடைக்கலாயிற்று. அதனைக் கொண்டு ஆசிரியருக்குச் சம்பளம் வழங்கல், தளபாடங்கள் செய்தல், கட்டடத் திருத்தம், வேலிகளை அடைத்தல் முதலான சகலபணிகளையும் வருடம்முழுவதும் செய்ய வேண்டியிருந்தது.

கல்வித்தரம் உயர உயர, வகுப்புக்களின் தரங்கள் அதிகரிக்க அதிகரிக்கப் பல கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து சைவச்சூழலில் கல்வி பயிலராயினர். குப்பிளான், கட்டுவன், வயாவிளான், பலாலி, காங்கேசன்துறை மற்றும் நாவற்குழி, சாவகச்சேரி, பூநகரி, அச்சுவேலி போன்ற இடங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கற்றதாக அறியமுடிகிறது. உதாரணமாக பண்டிதர் வ.நடராஜா ஆசிரியர் திரு.மு.இராமலிங்கம் ஆகியோர் நாவற்குழியிலிருந்து வந்து இங்கு கற்றுப் பின்பு குரும்பசிட்டிவாசிகளாயினர் என்பது குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலையின் பங்களிப்பினால் 1970 களில் ஐந்து வீட்டுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை குரும்பசிட்டியில் காணப்பட்டுள்ளது. பரமானந்தரிடம் கல்விபயின்று இங்கேயே மிகநீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரிய மணிகளின் பங்களிப்பை நாம் என்றென்றும் மறக்க முடியாது, இவர்கள் அர்ப்பணிப்புடனும் தியாக சிந்தனையுடனும் ஊர் அபிமானத்துடனும் மிகமிக நீண்டகாலம் இங்கு பணிசெய்துள்ளனர்.

| | |
|---|---|
| திரு. சீ.கணபதிப்பிள்ளை | - 38 வருடங்கள் |
| திரு. சீ.வைத்திலிங்கம் | - 38 வருடங்கள் |
| திரு. நா.சிவசாமி ஐயர் | - 25 வருடங்கள் |
| திரு. த. இராசரத்தினம் | - 20 வருடங்கள் |
| திருமதி.க.தனேஸ்வரி (இவர் மட்டும் இப்பாடசாலை மாணவியல்லர்) | - 33 வருடங்கள் |
| திரு. மு.இராமலிங்கம் | - 38 வருடங்கள் |
| திருமதி.சி.மங்களேஸ்வரி | - 37 வருடங்கள் |
| திருமதி.செ. கனகசுந்தரம் | - 21 வருடங்கள் |
| திருமதி.யோ. நவரத்தினம் | - 24 வருடங்கள் |

கடந்த நூற்றாண்டு காலத்தில் குரும்பசிட்டி மண்ணிற் பிறந்த ஒவ்வொரு வரும் பொன்.பரமானந்தர் பாடசாலையில் கல்விகற்றவர்களாவர். சிறப்பாக இங்கு ஆரம்பக் கல்வியைக் கற்காதவர்கள் எவருமில்லை என்றே சொல்லலாம். அதன் பின் வேறு பாடசாலைகளில் சென்று கற்று உயர்ந்தோர் அனைவரினதும் உயர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது இவ்வறிவாலயமே. எனவேதான் கிராமத்திலுள்ள அருளாலயங்களைப்போல இவ்வறிவாலயத்தையும் எமது மக்கள் மதித்து வந்தனர். மதித்து வருகின்றனர்.

குரும்பசிட்டி மக்களிடம் பல தனித்துவமான திறமைகள், பண்புகள், உயர் விழுமியங்கள் காணப்படுகின்றன என்றால் அதற்குக் காரணம் இவ்வறிவாலயமேயாகும் எனக் கூறுதல் பொருந்தும் கலை, இலக்கியத் துறைகளிலே இந்நாட்டில் குரும்பசிட்டிக்குத் தனியான ஓர் இடமுண்டு. நாடறிந்த பல எழுத்தாளர்கள் கலைஞர்கள் இங்கு உருவாக வழிவகுத்தது இவ்வறிவாலயமே ஆகும்.

www.padippakam.com



# திரு. பொன் பரமானந்தர் அவர்கள்.

தமிழிலே 'உரு' என்ற ஒரு சொல் இருக்கிறது. அந்த 'உரு' என்ற பண்புக்கு வரைவிலக்கணம். கூறுதல் எளிதன்று. பற்பல குணங்களும் ஒன்றாய் அமைந்து கிடப்பது அது. அந்த 'உரு' என்ற பண்புடையவர் நாவலர் பெருமான் எனப் பலர் சொல்ல நாம் கேட்டிருக்கிறோம். நாம் நாவலர் பெருமானைக் காணவில்லை.ஆனால் அவரைப்போன்ற 'உரு' உள்ளவர் ஒருவரைக் கண்டிருக்கிறோம். அவரை நமது ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, வழிகாட்டிய ஆசிரியராகப் பெற்றிருக்கிறோம். அவர்தான் திரு. பொன். பரமானந்தர் அவர்கள்.

நாவலர் என்ற சொல் எப்படி ஆறுமுக நாவலரைத் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதிலும் குறிக்கிறதோ, அப்படியே 'உபாத்தியாயர்' என்ற சொல் எம்மூரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் ஆசிரியர் பரமானந்தரையே குறிப்பதாயிற்று. உண்மையில் அவர் ஒரு உதாரணங்காட்டக்கூடிய உபாத்தியாயர்; ஆசிரியத் தொழிலுக்காகவே பிறந்த ஆசிரியர்.

நூறு வருடங்களுக்கு முன் சைவம் - தமிழ் என்று கிராமங்களிற் பேச முடியாது. எங்கும் கிறிஸ்தவ மயம்; ஆங்கில மோகம். நாவலர் அவர்களால் தொடங்கப்பட்ட சைவப்பாடசாலைகள் கட்டும் பணியை- ஆசிரியர்மாரைச் சைவச்சூழலில் ஆக்கும் பணியை - ஒரு 'வெடிகுண்டு' வைத்துக் கிறிஸ்தவர்கள் தகர்த்துவிட்டார்கள். 'சேட்டிவிக்கற்'- தராதரபத்திரம் உள்ள ஆசிரியர் இருந்தாற்றான் பாடசாலைக்கு உதவி நன்கொடை கிடைக்குமென்ற விதியை ஏற்படுத்தச் செய்துவிட்டு ஆசிரியகலாசாலைகளைத் தங்கள்வசம் வைத்துக்கொண்டார்கள். ஒரு சைவன் கிறிஸ்தவன் ஆகாமல் உபாத்தியாயர் ஆக முடியாது. நாவலர் பாடசாலையிலேயே தலைமை ஆசிரியர் ஒரு கிறிஸ்தவர் என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 1900 ஆம் ஆண்டு எங்கள் ஊருக்கு ஒரு சைவப்பாடசாலையைக் கட்டிச் சைவமுறைப்படி நடாத்த ஆசிரியர் பொ. பரமானந்தர் முன்வந்தாரென்றால் அவர் துணிவும், சைவப்பற்றும் எப்படி இருந்திருக்க வேண்டும்? யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கலாச்சாலைகள் அக்காலத்தில் இருந்தன. அவை கிறிஸ்தவச் சூழ்நிலையில் இருந்தமையால் - சமயமாற்றத்தை விரும்பாத 'பொ.ப.' அவர்கள் கொழும்புக்குப் போய் ஆசிரிய பயிற்சி பெற்றார்கள். பின்னர் தாம் உண்டாக்கிய மகாதேவ வித்தியாசாலையிலேயே தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் அந்தவழியைப் பின்பற்றியதாற்றான் இன்றுவரை எங்கள் ஊரில் ஒரு மாணவனாவது கிறிஸ்தவனாகி ஆசிரியராகப் பிரியப்படவில்லை. வெறும் உடலை



படிப்பகம்

www.padippakam.com

# அதிபர் பெருந்தகைகள்


திரு.பொன்.பரமானந்தர்


திரு.சீ.கணபதிப்பிள்ளை


திரு.சீ.வைத்திலிங்கம்


திரு.த.கனகசபை


திரு.சீ.தம்பிப்பிள்ளை


திரு.மு.க.சுப்பிரமணியம்


திரு.சி.தமோதரப்பிள்ளை


திரு.வை.பொன்னையா


திரு.சி.கனகசுந்தரம்


திரு.த.சிவராஜா


திரு.மு.தளையசிங்கம்


திரு.க.சிவதாசன்



படிப்பகம்

www.padippakam.com

























படிப்பகம்

ஓம்புவதற்காகத் தான்மெய்யென நம்பும் சமயத்தைவிட்டுப் பிறசமயம் சேர நினைக்கவில்லை. ஒரு கிறிஸ்தவகோவிலோ, ஒரு கிறிஸ்தவ மனிதன்கூட இல்லாத சுத்தச் சைவக் கிராமமாகக் குரும்பசிட்டி மிளிர்கிறது என்றால் அப்பெருமையில் பெரும் பங்கு திரு. பொ. பரமானந்தரவர்களையே சாரும்.

மகாதேவ வித்தியாசாலை அக்காலத்திலே மிகப்பிரசித்தமாயிருந்தது. கட்டுவன், குப்பிளான் , வயாவிளான், பலாலி முதலிய ஊர்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வந்து பயின்றார்கள். அரிவரி வகுப்புத் தொடக்கம் ஆசிரிய மாணவர்வகுப்பு வரைக்கும் வகுப்புக்கள் இருந்தன. அது ஓர் உயர்தரக் கலாசாலை போன்று விளங்கியது. அதன் நடுநாயகமாகச் சகலபொறுப்பும் அவருடையதாக ‘பொ.ப.அவர்கள் விளங்கினார்கள்.

அவருடைய உருவம் தமிழாசிரியர் வர்க்கத்துக்கே ஓர் எடுத்துக் காட்டு. எப்போதும் நெற்றியில் திரிபுண்டரம்; நடுவிலே சந்தனப்பொட்டு; எடுப்பான தோற்றம்; அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் குரல். ஆசிரியர் தெருவில் வருகிறாரென்றாற் பாடசாலை எங்கும் நிசப்தம். குண்டுசி விழுந்தாற்கூடச் சப்தம் கேட்கும். அக்கால வழக்கப்படி சிறுபிழைக்கும் நல்ல தண்டனை. ஆசிரியர் பொ. பரமானந்தர் இக்கால ஆசிரியர்களைப் போலத் தராதரப் பத்திரம் பெற்ற அன்றே புத்தகங்களை மூட்டைகட்டி வைத்தவர் அல்லர். உபதொழிலாகக் கமத்தையோ வேறு தொழில்களையோ செய்தவரும் அல்லர். சதாபடித்துக்கொண்டும் மாறிவரும் கால மாற்றத்திற்கேற்பத் தானும் வளரவேண்டும் என்னும் எண்ணத்தோடு புதிய விடயங்களைக் கற்றுக்கொண்டிருந்தார். பாடசாலையை வளர்த்தார். இதுதான் அவரின் பெருஞ்சிறப்பு. அட்சர, கேத்திர கணிதங்களா? அவர் தானே படித்துப் படிப்பித்தார். நாட்டுச் சீவன சாஸ்திரமா? அவர் தானே படிப்பிக்கத் தயாரானார். தானே ஆங்கிலம் கற்று ஓரளவு எழுத, வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

அவர் பாடசாலையிலே பாடங்களைமட்டும் படிப்பிக்கவில்லை. எதிலும் ஒரு சுத்தம், ஒழுங்கு இருக்கவேண்டும் என வற்புறுத்தினார். எழுத்து, வரைதல், இலக்கணம் என்ற பாடங்கள் எப்போதுமே உயர்தரமாய் இருக்கப் பார்த்துக்கொண்டார். இன்று வரை குரும்பசிட்டியிற் படித்த மாணவர்களது எழுத்து அருமையாகவே இருக்கிறது. அநேகர் சித்திரப் பாடத்தில் தராதரம் உடையோராய் இருக்கின்றனர். செய்கின்ற வேலை சிறியதாக இருந்தாலும் சுத்தமும் ஒழுங்கும் காணப்படுகின்றன.

இப்போது சில பாடசாலைகளிற் கோலாட்டம் அடிக்கப்படுவதை நாம் காண்கிறோம். அதைப் பெண்பிள்ளைகள் (டான்ஸ்) ஆடுவதுபோல அடிக்கிறார்கள். திரு.பரமானந்தர் அதை ஒரு கலையாகப் பழக்குவித்தார். அண்ணாவி கந்தப்பிள்ளை என்ற பிரபல அண்ணாவியாரின் துணையோடு ஆண்பிள்ளைகள் அதை அடித்தார்கள். அதற்கேற்ற பாடல்களையும் ஆசிரியர் அவர்களே இயற்றினார். ***கயிற்றுக் கோலாட்டம்*** என்ற புதுமையான கலை ஒன்றைப் பரமானந்தர் அவர்களே கண்டுபிடித்துப் பழக்கினார்கள். அது மிக நுட்பமும் கடினமுமான கோலாட்டம். கயிற்றிலே உறி, கூடை, சங்கிலி, அரைஞாண்கயிறு, என்பவற்றைக் கோலாட்ட மூலம் பின்னுவது அது. பன்னிரண்டு மாணவரில் ஒருவர் தவறு செய்தாலும் கயிறுகளெல்லாம் குழம்பிச் சின்னாபின்னப்படும். ஆசிரியரவர்கள் மகாத்மாகாந்தி யாழ்ப்பாணம் வந்தபோதும் வேறு பிரபல நிகழ்ச்சிகளிலும் எத்தனையோ வருடமாகஅதை அடிப்பித்தார். ஒரு இடத்திலாவது

www.padippakam.com

கல்வியானது 'தொட்டாற் தோழன் விட்டாற் பகைவன்' என்பதைப் போதனை சாதனை இரண்டானு முணரச் செய்தவர் ஆசிரியர் அவர்களேயாவர். கடமை தவறாமை, காலந் தவறாமை என்பவற்றை மாணவருளத்தில் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற் பதியச் செய்தவரும் ஆசிரியர் அவர்களே. 'பரமானந்த சற்குரு' என அரசினர் ஆசிரியகலாசாலை அதிபர், திரு. அ. பொன்னையாவின் பாராட்டுப் பெற்றுக்கொண்டவரும் இவர் ஒருவரே. எண், எழுத்து, சமயம், சாத்திர பாடங்களாயவற்றை மாணவர்கத்திற் பதியச்செய்யுமாறு பல வகுப்புக்களை ஏககாலத்தில் கற்பிக்க முன்னின்றுழைத்த உயரிய நல்லாசிரியரும் இவராவர். மாணவரை வற்புறுத்தி எழுத்துவழு, சொல்வழு, வாக்கியவழு, குறியீட்டுவழு. ஆதியன நிகழாதபடி துணைசெய்துயர்ந்தார் இவர். சுத்தம், அழகு, அடிப்படை ஒழுக்கம் முதலாயவற்றைப் போதனா முறைகளாற் திருத்துவதிற் கண்ணுங்கருத்துமாயிருந்த உத்தம சேவையாளர் இவர்.

பொன். பரமானந்தர் அவர்கள் முற்காலத்திலே இந்து வாலிபர் சங்கத்தை நிறுவிக் கிராமங்களிலுள்ள சமயாபிமானப் பெரியார்களை உறுப்பினராக்கித் தாம் தலைவராயிருந்து தொண்டுபுரிந்தார். மயிலிட்டிக் கிராமசபை அங்கத்தவராகவும், தாம் முயன்று தாபித்த ஐக்கிய சங்கத் தலைவராகவும் சேவைபுரிந்தார். மாணவரது விளையாட்டுக் களியாட்டிற்காகத் தாளவறுதி இசையொடு சிவணிய கோலாட்டம் முதலிய நாட்டுக் கலையாடல்களை மாணவருக்குப் பயிற்றிப் பொது விழாக்களிற் பரிசுகளும் பெற்றார். 'கதிர்காமக் கந்தவேள் பதிக' மென்னும் பக்திததும்பும் நூலையும் ஆக்கினார். நன்னூலிலக்கண நூலிற் கூறிய "குலனருள்" முதலாய பன்னிரு அம்சங்களும் நிரம்பிய நல்லாசிரியராய் விளங்கினார். குரும்பசிட்டித் தேவாலயங்களிற் புராணபடனங்களும் நிகழச்செய்தார்.

குறித்த வித்தியாலயத்தின் அதிபராகத் திரு. மு. க. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் நியமிக்கப்பெற்ற பின், குறிப்பிடப்பட்ட பொன். பரமானந்தர் அவர்களுக்கு நன்றிசெலுத்திப் பாராட்டும் முகமாகவும், என்றும் நிலைத்து நிற்றற்பொருட்டும் "மகாதேவ வித்தியாசாலை" என்னும் பெயரைப் "பொன் . பரமானந்தர் வித்தியாலயம்" என மாற்றியமைத்தமை மிக்கபொருத்தமானதேயாம். இவ்வித்தியாலயம் வயிரவிழா, நூற்றாண்டு விழா வாதியனவும். பெற்று ஊழிதோறும் நிறைவு நிலைபெற்றுயருமாறு எல்லாம் வல்ல 'அம்மையப்பர்' திருவருள் பாலிப்பாராக.

"ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.



படிப்பகம்

www.padippakam.com



# திரு. சீ. கணபதிப்பிள்ளை அவர்கள்



திரு. பொன். பரமானந்த ஆசிரியருக்குப்பின் 01-01-1940 இல் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்று, இவ்வித்தியாலயத்தைச் சுமார் 20 வருட காலம் திறம்பட நடாத்தியவர் திரு. சீ கணபதிப்பிள்ளை அவர்களாவார். இவர் 1900 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி பிறந்தார். அதிகாலையிற் சத்தியாவந்தனம் முடித்து, அம்பாள் ஆலயத்திற் பூசை தரிசனம்செய்த பின்பே பாடசாலைக்குச் சென்று தமது கடமையைச் செய்வது அவரது வழக்கம். பாடசாலைச் சேவையையும் ஒரு தெய்வப் பணியாகவே கொண்டு தமது சக்தி முழுவதையும் அப்பணிக்கே அர்ப்பணித்தார்.

இனிய குரல்வளம் பெற்றவர் இவர்; சங்கீதம், சித்திரம், நாடகம் ஆகிய துறைகளில் வல்லவர். மாணவருக்குக் கல்வியில் ஆர்வத்தை ஊட்டுவதற்கும் உயர்ந்த குணங்களை அவர்களிடம் பதிய வைப்பதற்குமாக மேலோர் வாழ்க்கையையும் அடியார் சரித்திரங்களையும் நாடகங்களாக்கி அவற்றை மாணவருக்குப் பழக்கி மேடையேற்றுவது அவரது மிக விருப்பமானசெயலாக இருந்தது. அதற்கு வேண்டிய காட்சித் திரைகளையும் தமது சித்திரத் திறமையால் தாமே ஆக்கிக் கொள்ளுவார். இச்செய்கையினால் மாணவரை மட்டுமன்றிப் பெற்றோரையும் நல்லவராக்க அவரால் முடிந்தது.

மாலைநேரத்திற் தவறாது ஆலய வழிபாடு செய்வார். அப்பொழுது பக்தி வசப்பட்டுநின்று அவர் ஓதும் அருட்பாடல்கள் ஆலய தரிசனத்துக்கு வரும் அனைவரையும் பரவசப்படுத்தின. மக்களிடையே தெய்வபக்தியை வளர்க்க வேண்டும் என்ற பெரு விருப்பத்தினால் பக்தர்களின் சரித்திரங்களை இனிய பாட்டுக்களாக்கி, கதாப்பிரசங்கம் செய்வதும் இவருக்குச் சிறப்பான இயல்பாக இருந்தது. இப்பிரசங்கங்களை இவ்வூரில் மட்டுமன்றி, பிற ஊர்களிலுள்ள ஆலயங்களிலும் நிகழ்த்தினார்.

பண விஷயத்தில் மிகமிகச் சிக்கனமாக வாழ்ந்தார். ஒவ்வொரு சதத்திற்கும் அவரிடம் கணக்கு இருக்கும். எந்தப் பொருளையும் வீணாக்கக் கூடாது. கவனமாக உபயோகிக்க வேண்டுமென்பதை மாணவருக்கு அடிக்கடி கூறுவார். இவர் போதிக்கும் ஆசிரியராக மாத்திரமல்லாது, போதனைப்படி முன்மாதிரியாக வாழ்ந்து மாணவரை நல்வழிப்படுத்தி, சற்குருவாகவே விளங்கினார்.

இவரது பெருமுயற்சியினாலேயே இப்போதுள்ள பெரிய மண்டபமும் மேடையும் அறைகளும்கொண்ட புதிய பாடசாலைக் கட்டடம் அமைக்கப்பட்டது. இவர் முப்பத்தெட்டு ஆண்டு ஆசிரிய சேவையின்பின் 1960 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இருபதாந்திகதி சேவையிலிருந்து இளைப்பாறினார்.



படிப்பகம்

www.padippakam.com

# திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்கள்

-இரசிகமணி கனக.செந்திநாதன்.-

அதிபர் மு.க.சுப்பிரமணியம் அவர்களை இளமையிலேயே எனக்கு நன்கு தெரியும். இந்த ஊரில் மிகப்பிரபல ஆசிரியராகவிருந்த திரு.வ.பொன்னுக்குமாரு அவர்களிடம் கரபந்தாட்டம் பயின்று திறமையான கரபந்தாட்ட வீரராக விளங்கினார். அப்போது இவரிடம் தலைமைக்கு வேண்டிய பணிவு, கூட்டுறவு உணர்ச்சி, கட்டுப்பாடு, சுத்தம் என்பவை இருப்பதைக் கண்டேன்.

இவரிடம் யான் உதவியாசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் இளமையிலே அவர் பயின்றுகொண்ட விடாமுயற்சியும், பலரை அணைத்துச்செல்லும் திறமையும், எதிலும் சுத்தமாக இருக்கவேண்டும் என்ற எண்ணமும், கட்டுப்பாடாக மாணவர் ஒழுகவேண்டும் என்ற வற்புறுத்தலும் விளங்கியதைக் கண்டேன். 1946ஆம் ஆண்டில் வயாவிளான் மத்தியமகாவித்தியாலயம் தொடங்கியதும் இப்பாடசாலை ஆரம்ப பாடசாலையாக மாறியது. ஐந்து ஆசிரியர்களே சேவை செய்யக் கூடியதாக இருந்தது. இந்த நிலை இந்த அதிபர் வித்தியாலயப் பொறுப்பேற்றதும் மாறத் தொடங்கியது. நான் இவ் வித்தியாலயத்துக்கு மாற்றலாகி வரும்போது இவரின் முயற்சியால் 6ஆம் 7ஆம் வகுப்புகள் வைக்கப்பட்டு 263 மாணவர்களையும் 9 ஆசிரியர்களையும் கொண்டதாக இவ் வித்தியாலயம் வளரத் தொடங்கியது.

நான் கண்ட தலைமை ஆசிரியர்களிற் சிலர் நன்றாகக் கல்வி கற்பிக்கக்கூடியவர்கள், சிலர் இருப்பதை வைத்துக்கொண்டே நல்ல நிர்வாகமாக நடைபெறவேண்டுமென்று விரும்புகிறவர்கள், இன்னும் சிலர் அரசாங்கம் அனுப்பும் சுற்று நிருபங்களை, அறிவித்தல்களைக்கூட, அலட்சியப்படுத்துபவர்கள், சிலர் ஒழுங்காக எதையும் வைத்திருப்பதில் திறமையற்றவர்கள். எல்லா அம்சங்களும் பொருந்திய தலைமை ஆசிரியர்கள் மிகமிகக் குறைவு. இந்த அதிபர் வித்தியாலயத்தின் வளர்ச்சியை அவதானித்து, "இந்த ஊரிற்பிறந்த நான் எனது சேவையின் இறுதிக் காலத்திலே இந்தக் கிராமத்துக்கு இவ் வித்தியாலயம் மூலம் ஏதாவது நன்மை செய்யவேண்டும்," என்ற துடிப்போடு சேவைசெய்தார் என்பது உண்மை. அதனால் பின்னர் எட்டாம், ஒன்பதாம் வகுப்புகள் வைக்கப்பட்டு இன்று மாணவர் தொகை 397 ஆகவும் ஆசிரியர் தொகை 17 ஆகவும் உயர்ந்திருப்பதை நாம் கண்ணாரக் காண்கின்றோம்.

சிலர் சனப்பெருக்கத்தினால் இயற்கையாகவே மாணவர் தொகை கூடுவதும் ஆசிரியர் தொகை அதிகமாவதும் உண்டென்று நினைக்கலாம். ஆனால் இவ்



படிப்பகம்

வித்தியாலயத்தின் கல்வித் தேர்ச்சி, ஒழுங்கு, ஆசிரியர்களின் முயற்சி, சமய ஆர்வம், நிர்வாகம் இவற்றை அவதானித்து அயல் கிராமங்களிலிருந்தும் மாணவர்களைப் பெற்றோர் இவ் வித்தியாலயத்திற்கு அனுப்பியதாற்றான் இவ் வளர்ச்சி ஏற்பட்டது. இவ் வித்தியாலயத்தில் படிக்கும் மாணவர்கள் இவற்றை அவதானித்துப் பிற பாடசாலைகளிற் சேர்வதைவிட்டு இவ் வித்தியாலயத்தில் தொடர்ந்து படித்து வருவதும் ஒரு காரணமாகும்.

இவ்வதிபரின் முயற்சி இவ்வளவோடு நிற்கவில்லை. மாணவர்களின் தொகைக்கேற்ப பாடசாலைக் கட்டடங்களையும் கட்டிமுடிக்கவேண்டும் என்று செயல்படத் தொடங்கினார். கனிஷ்ட வித்தியாலயமாக இருந்தாலும் மகாவித்தியாலயங்களில் மாணவர்களுக்குரிய வசதிகள் போல சாரணர் குழு, குருளைச் சாரணர் குழு, முதலுதவி வகுப்புகள், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றை ஆரம்பித்து மாணவர்களுக்குச் சேவை மனப்பான்மையையும் கூட்டுறவு உணர்ச்சியையும் உண்டாக்கினார். வட்டாரத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, சங்கீதப் போட்டி எதுவாக இருந்தாலும் இவ்வித்தியாலய மாணவர்களைப் பங்குபற்றச் செய்து பாராட்டுக்களைப் பெற்றார். புத்தகப் படிப்புடன் நில்லாது மாணவர்கள் நேரிற்கண்டு அறிவைப் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டு சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து அறிவை வளர்க்க வழி வகுத்தார்.

வயதுக்கும் அறிவுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கை உடைய இவர் நம்மவரை நாம் மதிக்கும் பழக்கம் வரவேண்டும் எனப் பல இடங்களில் வற்புறுத்துவதுண்டு. வித்தியாலயத்தில் நடைபெறும் விஷேச நிகழ்ச்சிகளின்போது நமது கிராமத்தவர்களுக்கு மதிப்புக்கொடுத்துவந்ததை யான் அறிவேன்.

இவரது நிர்வாகத் திறமையை 1974 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14, 15 16ஆம் திகதிகளில் வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறந்த பொருட்காட்சியின்போது யாவரும் காணக்கூடியதாக இருந்தது. கல்வி அதிகாரிகளும் பொறுப்புணர்ச்சி மிக்க சிறந்த நிர்வாகி என்பதை அறிந்து வட்டார மெய்வல்லுநர் போட்டி அமைப்பாளராகவும், வட்டாரப் பரீட்சைக் காரியதரிசியாகவும் நியமித்தனர். ஒன்றைச் செய்யவேண்டுமென எண்ணிவிட்டால் எந்தக் கஷ்டத்தின்மத்தியிலும் அதைச் செய்துமுடிக்கும் ஆற்றல் இவருக்குண்டு.

தன்னுடைய வீடு, குடும்பம் முதலியவற்றைப்பற்றி அதிகம் அக்கறை செலுத்தாது வித்தியாலயத்தைப்பற்றியும் பிறருக்கு உதவிசெய்வதைப் பற்றியும் சிந்திக்கும் இந்த ஆசிரியருக்கு அவரது குடும்பப் பொறுப்புகளைத் தாங்கக்கூடிய மனைவியாகவும், திறமையான ஆசிரியராகவும் விளங்கும் திருமதி செல்வரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் மனைவியாக வந்தமை இவரது நற்பேறேயாகும். அவரின் முயற்சியை வாழ்த்துகின்ற யாவரும் அவரது பாரியாரையும் வாழ்த்தக் கடமைப்பட்டவர்கள்.

# திரு. த. சிவராசா அவர்கள்.

திருமதி செ.கனகசுந்தரம்

திரு.சி.கனகசுந்தரம் அவர்கள் அதிபராகவிருந்து ஓய்வுபெற்றதும் எமது பாடசாலையிலிருந்தோ அல்லது ஊரிலிருந்தோ ஒரு அதிபரைப் பெறமுடியவில்லை; எவரும் முன்வரத் தயங்கினர்; காரணம் 1983ஆம் ஆண்டு முதல் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட போர்ச்சூழல் எமது கிராமத்திலும் அசாதாரண நிலைமைகளை ஏற்படுத்தியிருந்தது.

பலாலி இராணுவ விமானத்தளம் ஊடாக 17.01.86 இல் ஏழாலைப்படையெடுப்பு 23.01.1986இல் மேற்கொண்ட தெல்லிப்பழைப் படையெடுப்பு என்பன குரும்பசிட்டி வழியாக மேற்கொள்ளப்பட்டன. எனவே இங்கு அதிபர்பதவியை ஏற்பது, அதுவும் தற்காலிகமாக ஏற்பது வீண்பிரச்சினையை தலைமேற் சுமப்பதாகும் என்று அனைவரும் கருதினர். கல்வித் திணைக்களமும் இங்கு எவரையும் அனுப்பிவைக்க முடியாத நிலையிலிருந்தது. எனவே எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஓர் அதிபரைத் தேடி அலைந்தது.

திரு.சிவராசா அவர்கள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் அப்போது ஆசிரியராக விளங்கினார். எமது கிராம மேற்கெல்லையில் (கட்டுவனில்) வாழ்ந்த அவர் தினமும் எமது கிராமமூடாகத் தனது பாடசாலைக்குச் செல்வார். அவரை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அணுகிச் சம்மதம்பெற்று அதிபராக அழைத்து வந்தது.

ஒரு துடிப்புள்ள இளம் பட்டதாரி எமக்கு அதிபராகக் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சியடைந்தோம். இனிய சுபாவமும் இரக்க உணர்வும் மிக்கவராக, அறிவு ஆற்றல் மிக்கவராக அவர் காணப்பட்டார். "இக்கிராமத்தை எனது சொந்தக் கிராமமாக நான் கருதுபவன். நல்ல நண்பர்கள் பலர் இங்கெனக்கு உள்ளனர். எனவேதான் இன்றைய இக்கட்டான சூழலிலும் இப் பொறுப்பை ஏற்க நான் உடன்பட்டேன்." என்று தனது முதல்நாள் உரையில் அவர் குறிப்பிட்டார்; உற்சாகமாகத் தனது பணிகளை மேற்கொண்டார்.

போர்ச் சூழல் மேலும் கொடுமையானது. அவர் பதவியேற்ற மூன்று மாதங்களுள் எமது பாடசாலைவீதி வழியாக முன்னேறிய இராணுவம் 1986 மே மாதம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்குச் சென்று பெரியதொரு இராணுவ முகாமை அமைத்துக்கொண்டது. ஊரவர்கள் அச்சத்தினால் தொடர்ந்து வெளியேறலாயினர்.

www.padippakam.com

பின்பு ஊரவர்கள் முழுமையாகவே வெளியேற்றப்பட்டதால் முதலில் ஏழாலை மகா வித்தியாலயத்திலும் பின் குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாலயத்திலும் அதிபர் தனது தற்துணிவில் பாடசாலையை நடத்தினார். தனிமனிதனாக நின்று அவர் அக்காலத்தில் பட்டகஷ்டங்கள் எண்ணிறந்தவை.

1987 இல் இந்திய அமைதிப்படை வந்து ஊருக்கு மக்கள் திரும்பக்கூடியதாக இருந்தது. ஆனால் எமது பாடசாலைக் கட்டடங்கள் சகல ஓடுகளும் அகற்றப்பட்டுச் சிதைக்கப்பட்டிருந்ததால் தமது பிள்ளைகளுக்கு கல்விவசதி கிடைக்காது போகும் என்று கருதிய மக்கள் ஊர்திரும்ப ஆர்வம் காட்டவில்லை. அதை உணர்ந்த எமது ஊர் ஆசிரியர் ஆ.சி.நடராஜா அவர்கள் செய்த கைங்காரியத்தை இங்கு குறிப்பிடவேண்டும்.

திணைக்கள அனுமதியை எதிர்பாராது ஊரவர்கள் ஐவரிடம் ரூபா 75,000 பெற்றுப் பாடசாலையை உரிய முறையில் அவர் புனரமைப்புச் செய்தார். எனவே 1987 விஜயதசமி அன்று பாடசாலை சொந்த இடத்தில் செயற்படலாயிற்று. திரு, நடராஜாவின் செயற்பாட்டைப் பாராட்டிய கல்வித் திணைக்களம் நடந்து முடிந்த வேலையை ஒப்பந்தமாகப் பதிவுசெய்து 1988 யூலை மாதமளவில் அவர் பெற்றிருந்த கடனைத்தீர்க்க வழிசெய்தது.

மீளப் பாடசாலையைப் பழைய நிலைக்குக் கொண்டுவரச் சிவராஜா அவர்கள் அல்லும் பகலும் உழைத்தார். அவருடைய செயற்பாட்டால் மாணவர் தொகை முன்னைக் காலங்களைவிட மேலும் அதிகரித்தது. எனவே திணைக்கள நிதியில் தெற்கெல்லையில் 50' x 25' புதிய மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பித்தார்.

போரினால் மாணவர்கள் இழந்த கல்வியை நிறைவுசெய்யப் பரிகாரக் கற்பித்தல், விடுமுறை வகுப்புக்களை ஏற்படுத்தினார்; தனது கடமைகளை மறந்து தானே பாடங்களைக் கற்பிப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார்; அதிகாரத்தொனியின்றி ஆசிரியர்களை அரவணைத்துத் தனது பண்பான நடத்தைமூலம் உற்சாகப்படுத்தினார்.

கொத்தணி அமைப்புமுறை செயற்பட்ட காலமது. தூர உள்ள யூனியன் கல்லூரியை மூலாதாரப் பாடசாலையாகக் கொள்வதைவிட வயாவிளான் ம.ம.வியை கொள்வது வளப்பயன்பாட்டுக்கு நன்மைதரும் என்று கருதிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இதற்கான நடவடிக்கை எடுக்க முற்பட்டது. அதன் விளைவு அதிபர் இடமாற்றத்துக்கு உட்பட்டார். ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்களது அபிமானத்துக்குரிய இவ்வதிபரை அநியாயமாக இப்பாடசாலை இழக்க நேரிட்டது. நல்லதைச் செய்யப்போன அதிபர் அதற்காகத் தண்டனைபெற்ற இத் துரதிஷ்டச் சம்பவம் இப்பாடசாலை வரலாற்றில் ஒரு' கறைபிடிந்த நிகழ்வாகும்.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இடம்பெயர்ந்த நிலையில் இன்றுவரை எமது ஊர் அதிபர் ஒருவர் தலைமையில் சீறப்பாக நடைபெற்று வருகிறது. எமது பாடசாலை அன்று வயாவிளான் கொத்தணியில் இணைக்கப்பட்டிருந்தால் அவரது ஒத்துழைப்புடன் எமது பாடசாலையின் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்காதா? என்று ,எம்மைச் சிந்திக்கவைக்கிறது.



படிப்பகம்

# திரு. சு.தளையசிங்கம் அவர்கள்

திருமதி. வ. பத்மநாதன்

அசாதாரணமான சூழ்நிலை நிலவிய ஒரு காலகட்டத்தில் யா/பொன். பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்று அந் நிறுவனத்தைத் தாங்கிநின்றவர் தளர்வறியாத் தளையசிங்கம் அவர்கள். அண்டை நாட்டின் அமைதிப்படை யாழ்.மண்ணில் ஆதிக்கம் கொண்டிருந்தவேளை பலாலி விமானத்தளத்தை அண்டிய அதிஉயர்பாதுகாப்பு வலயத்தினுள் எம் வித்தியாலயம் மிகுந்தகஷ்டங்கள் மத்தியில் இயங்கிக்கொண்டிருந்தது. தாளாத கெடுபிடிகள். நாளாந்தம் ஆசிரியர் மாணவர் வரவில் தளம்பல், பாடசாலை நேரத்தில் இடையிடையே மாற்றம், இருக்கும் சொற்பவளத்தையும் பயன்படுத்தமுடியாத சிரமம், இத்தனைக்கும் ஈடுகொடுத்து இயல்பானநிலையில் இவ் வித்தியாலயம் இயங்கியது என்றால் அது அயராது உழைத்த அதிபர் சுப்பிரமணியம் தளையசிங்கம் அவர்களின் ஆர்வமும் ஆக்கமும் ஊக்கமுமே. காரணம் ஆகும்

09-01-1990 அன்று அதிபர் பொறுப்பைஏற்ற அன்னார் நிறுவன வளர்ச்சியில் ஈடுபாடும் பற்றுங்கொண்டு சிரமப்பட்டு, பாடுபட்டு ஊரவர் பயன்பெற உழைத்தார். ஓரோர் வேளை இடம் பெயர்ந்தும் மீண்டும் வந்தும் ஊசலாடிக் கொண்டிருந்த இவ்வித்தியாலயத்தைச் சொந்த இடத்தில் இயக்கி அதன்மூலம் மாணவர் உலகம் நன்மையடைய உதவியவர். அவரின் சஞ்சலமோ சலிப்போ இல்லாத நல்லெண்ணமும் பேரார்வமுமே இத்தகைய செயற்பாட்டிற்கு உறுதுணை என்றால் மிகையாகாது. போர்க்காலச் சூழ்நிலை ஏக்கமும் தவிப்பும் இல்லாமையும் விரக்தியும் மக்களைச் சொல்லொணாத துயரில் ஆழ்த்தின. நாட்டின் இக்கட்டான சூழ்நிலை வித்தியாலயச் செயற்பாட்டை மழுங்கடித்து அழிவும்நலிவும் அடைந்துத் எழிலும் பொலிவும் குன்றச் செய்து இருப்பிடத்தையும் இழக்கவைத்தது. இடமிழந்து வளமிழந்த நிலையிலும் அதன் செயற்பாட்டைத் தளரவிடாது பேண ஊக்கமும் உறுதியுமுள்ள நிர்வாகம் அரும்பாடுபட்டது. இன்னல்களைக் களைந்தெறிந்து இளம் சிறார்களை நெறிப்படுத்தி நன்மாணாக்கரை உருவாக்க வேண்டுமென்ற சீரிய நோக்கில் அயலார் உதவியை நாடி யா/சுன்னாகம் மயிலணி வித்தியாலயதில் மாலை நேரப் பாடசாலையாக ஆரம்பித்தார்.

இக் காலப்பகுதி நிர்வாகத்தின் மனோநிலையில் மாத்திரமன்றி மாணவர். பெற்றார், ஊரவர் மனங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. எனினும் கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளவற்றைக் களையும் பொருட்டும் அதன் விருத்திக்கு உழைக்கும் நன்னோக்குடனும் தேவையறிந்து சேவையாற்றினார்.

அல்லலும் அவலமும் தொடர்ந்த வேளையிலும் செயல் வீரராக நின்று தன் சீரிய பணியில் தளம்பாது மாணவரை நல்வழிப்படுத்தி நற்றொண்டாற்றிய அதிபர் தளையசிங்கம் அவர்களுக்கு மீண்டும் சோதனை. கைகொடுத்த மயிலணியை விடுத்து யா/யூனியன் கல்லூரியுடன் தன்னை இணைத்துக்கொண்டார். இதுவே வித்தியாலயம் வாழ, வளர, மாணவர் நலன்பெற ஏற்றவழி எனத்துணிந்தார். இதன்மூலம் இவ்வித்தியாலயத்தை நூற்றாண்டு காண வைத்த நிர்மையரானார்; பழமையும் பெருமையும் மிக்க இவ்வித்தியாலயம் புகழ்பரப்பி உயர்ந்து நிற்க, அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். பாட இணைபாடவிதான செயற்பாடுகள் யாவிலும் ஒன்றிணைந்து, தானும் ஒருவராய் நின்று ஊக்கமும் உற்சாகமும் வழங்கினார். திறமையும் விடாமுயற்சியும் கொண்ட இவரது சேவை, இவர் 2000-04-14 அன்று இளைப்பாறும்வரை தொடர்ந்தது. இன்னும் தொடர இறையருள் கிட்டுவதாக.

www.padippakam.com

# அன்றும் இன்றும்.

க.சிவதாசன் (அதிபர்)

குரும்பசிட்டி அம்பாள் ஆலயக் கண்டாமணி அதிகாலையில் ஒலிக்கும். அந்த ஓசை கேட்டதும் இறை சிந்தனையோடு துயிலெழுந்து எமது மக்கள் தமது அன்றாடக் கருமங்களில் உற்சாகமாகச் செயற்படத் தயாராவர். அடுத்தடுத்து ஏனைய ஆலயங்களது மணிகளும் ஒலிக்கும் நேரந்தவறாது கேட்கும் இவ்வாலய மணி ஓசைகளின் தொடர்ச்சியாக எமது அறிவாலயத்தின் மணியோசை அங்கு குழுமும் மாணவச் செல்வங்களை அமைதியடையச் செய்யும். தெய்வீகக்களையோடு எமது ஆசிரியப் பெருந்தகைகள் நேரந்தவறாது வகுப்பறைகளுட் பிரவேசிப்பர். எழுந்து நின்று அவர்களைக் கரங்கூப்பி வணங்குவோம். அன்பொழுகக் கற்பிப்பார்கள். இதுவே அன்றாட நிகழ்ச்சி. பிற்காலத்தில் இவ்வாசிரியத் தெய்வங்களை நாம் காணும்போதெல்லாம் அவர்களை வணங்கவேண்டுமென்ற உணர்வுமேலிடுகின்றது. எம்மை, எமது கிராமத்தை உருவாக்கிய சிற்பிகள் அல்லவா அவர்கள். எமது கல்விக்காலத்தில் அதிபராக இருந்த திரு.சீ.கணபதிப்பிள்ளை அவர்களது தோற்றம் எனது மனக்கண்ணிற் தெரிகின்றது. சிவசின்னங்கள் அணிந்த சாந்த சொரூபியாகத் திகழ்ந்தார். 'சிவசிவ' என்ற சொல்லைப் பலபோதும் உச்சரிப்பார். அன்பே உருவான அவரது தலைமையில், ஆன்மீக நெறிநின்று பாடசாலையைப் புனித ஆலயமாகக் கொண்டு ஆசிரியர்கள் எமக்குக் கல்வி போதித்தனர். கலை வல்லாளராக விளங்கிய திரு.சீ.கணபதிப்பிள்ளை அவர்கள் நடாத்திய கலை நிகழ்வுகள் எமது பிஞ்சு உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருந்தன.

பாடசாலையின் 75ஆவது ஆண்டு நிறைவுக் காலத்தின் முன்பின்னாக அதிபராக விளங்கியவர் திரு.மு.க.சுப்பிரமணியம் அவர்கள். அவரது அர்ப்பணிப்பும் அயரா உழைப்பும் பாடசாலையை உன்னத நிலைக்குக் கொண்டுவந்திருந்தன. ஆரம்ப வகுப்புகளுடன் செயற்பட்ட நிலைமாறி, இடைநிலை வகுப்புக்களை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியது. வேண்டியநேரத்தில் பொருத்தமான ஒரு அதிபர் கிடைத்தார் என்றே சொல்லவேண்டும். மாணவர், ஆசிரியர்களது தொகை பெருகியது. கட்டிடங்கள் பெருகின. கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் மேலோங்கின. இணைப் பாடவிதான செயற்பாடுகள் சிறப்படைந்தன. அவரது திறமையைப் புலப்படுத்தும் வகையில் 75ஆவது ஆண்டு நிறைவு விழா மூன்று நாட்களாக நடந்தேறியது. அறிஞர் கருத்துரைகள், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் பாடசாலை வரலாறுகாணாத வகையில் நடந்தேறின.

1982இல் இப்பாடசாலைக்கு இடமாற்றம்பெற்று நான் வந்தபோது திரு.சி.கனகசுந்தரம் அவர்கள் அதிபராக விளங்கினார். அவரது பாரியாரும் இங்கு கற்பித்தார். பாடசாலையில் மட்டுமல்ல வீட்டிலே றோட்டிலே எங்கென்று இல்லாது எந்நேரமும் பாடசாலை பற்றிய கதையாகவே இருக்கும். பாடசாலை வளர்ச்சிக்காக ஒருநேரம் சும்மா இருக்கமாட்டார். கல்லூரி நிலையிற் கருமங்களைச் செய்ய விரும்புவார். ஆண்டுக்காண்டு பரிசளிப்புவிழா விளையாட்டுப் போட்டிகள் சிறப்படையும்.



படிப்பகம்

பாடசாலைக்கென மைதானமில்லை. பிள்ளையார் ஆலய வீதியிலே முன்பு மெய்வல்லுநர் போட்டிகள் சிறியஅளவில் நடைபெறும். திரு.சி.கனகசுந்தரம் அவர்கள் குரும்பசிட்டி பொது விளையாட்டு மைதானத்தில் இதனைச் செயற்படுத்தத் திட்டமிட்டார். பரமானந்தர் இல்லம், கணபதிப்பிள்ளை இல்லம், சின்னத்தம்பி இல்லம் என மாணவர்களை வகுத்துச் சிறப்பாக நடாத்தி எல்லோரினதும் பாராட்டுதலைப் பெற்றார். 1986 இல் திரு.சி.கனகசுந்தரம் ஓய்வுபெறத் திரு.த.சிவராசா அவர்கள் அதிபரானார். போர் வலுவடைந்து மாணவர்களது கல்வி கேள்விக்குறியாகத் தொடங்கிய தொடக்க காலம் அதுவாகும். காலத்தின் தேவையை உணர்ந்த அதிபராகத் திரு.த.சிவராசா விளங்கினார். கற்றல் கற்பித்தலுக்கு முதன்மையளித்துத் தானும் நிர்வாகக் கடமைகளை ஒதுக்கிவிட்டுக் கற்பிக்க ஆரம்பித்தார். மிகக்குறுகிய காலத்தில் மாணவர்களின் கற்றல் இழப்புக்களைச் சீர்செய்து மேம்பாடடையச் செய்வதில் வெற்றிகண்டார். பாடங்களை வாரரீதியாகத் திட்டமிட்டு முடிக்கச் செய்தார். பாடசாலை முதல் இடப்பெயர்வைச் சந்தித்தபோதிலும் இவரது தலைமைத்துவம் பாடசாலையின் கட்டமைப்பைச் சிதையாது பாதுகாத்தது.

1990இல் திரு.சு.தளையசிங்கம் அதிபராக வந்தார். இவரது நிர்வாகத் திறமையால் பாடசாலை சிறப்பாக இயங்கியபோதிலும் குறுகியகாலத்தில் போர்ச்சூழல் பாடசாலையின் இரண்டாவது இடப்பெயர்வுக்கு வழிவகுத்தது. குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் எமது ஊர் மக்கள் சிதறிவிட்டமையினால் எமது மாணவர்களை இழக்க நேரிட்டது. தூக்கி வீசப்பட்ட பாடசாலையை எங்கு இயக்குவது? எப்படி இயக்குவது என்று எவருமே சிந்திக்க முடியாத அவலநிலை ஏற்பட்டது. மயிலணி மகாவித்தியாலயத்தின் அதிபர் திரு.துரைசிங்கம் எமக்குக் கைகொடுத்தார். மாலைநேரப் பாடசாலையாக இயங்கச் செய்தோம். சுமார் 150 மாணவர்கள் வந்துசேர்ந்தனர். படிப்படியாக மாணவர் தொகை குறைய ஆசிரியர் தொகையும் குறைக்கப்பட்டது, ஏனவே க.பொ.த. சாதாரண வகுப்பு வரை சொற்ப மாணவருடன் செயற்பட்ட எமது பாடசாலையை இயக்குவது சிரமமாகியது. ஆசிரியர் பற்றாக்குறையால் சகல பாடங்களையும் கற்பிக்க முடியவில்லை. இதனால் ஆண்டு ஐந்துக்குட்பட்ட மாணவர்களை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்துடனும் ஆறாம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்களை யூனியன் கல்லூரியுடனும் இணைத்தோம். இதனால் ஆசிரியர் தொகை மேலும் குறைக்கப்பட்டது.

யூனியன் கல்லூரியுடன் எமது பாடசாலை இணைக்கப்பட்ட போதிலும் நிர்வாக ரீதியாகத் தனித்தியங்கும் ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு பாடசாலையின் பெயர் அஸ்தமிக்காது பாதுகாத்த பெருமை திரு.சு.தளையசிங்கத்தையே சாரும். வலிவடக்கின் பாடசாலைகள் சில மூடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. எமது மாணவர்கள் யூனியன் கல்லூரி வகுப்புகளில் ஒழுங்காகக் கற்று வருவதுடன் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் பங்குபற்றி வருகின்றனர். 1995 இல் தென்மராட்சி இடப் பெயர்வின்போது மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் யூனியன் கல்லூரியுடன் இணைந்தே எமது பாடசாலையும் இயங்கியது. 27 மாணவருடன் இன்று செயற்படும் எமது பாடசாலையில் என்னுடன் விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர் திரு.ம.ரவீஸ்வரன் அவர்களும் இன்று பணியாற்றுகின்றார். 14-04-2000 த்தில் திரு.சு.தளையசிங்கம் ஓய்வு பெறப் பாடசாலைப் பொறுப்பை நான் ஏற்கவேண்டியேற்பட்டது. யூனியன் கல்லூரி அதிபர் திரு.சு.புண்ணியசீலன் அவர்களும் உபஅதிபர் திரு.வில்லவராஜா அவர்களும் எமக்கு வேண்டிய உதவிகள் வழங்கிவருகின்றனர். நான் கற்ற பாடசாலையில் 18 ஆண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றி வருவதைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

www.padippakam.com

# 20 ஆண்டுகளுக்கு மேல் அரும்பணி ஆற்றிய ஆசிரியமணிகள்


திரு.நா.சிவசாமி ஐயர்




திரு.மு.இராமலிங்கம்


திரு.த.இராசரத்தினம்


திருமதி.தனேஸ்வரி கணபதிப்பிள்ளை


திருமதி.மங்களேஸ்வரி சின்னத்துரை


திருமதி.செல்லம்மா கனகசுந்தரம்




திருமதி.யோகேஸ்வரி ~~கனக~~ரத்தினம்



படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியமணிகள்

# ஆசிரியர் திரு. நா. சிவசாமி ஐயர் அவர்கள்

திரு. நா. சிவசாமி ஐயர் அவர்கள் குரும்பசிட்டியில் 16-09-1914 இல் பிறந்தார். இவர் 01-03-34 தொடக்கம்ஆசிரியராகி குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயத்தில் 25 வருடங்களுக்குமேல் ஆசிரியசேவைசெய்து வெள்ளிவிழாக் கண்டுகளித்தவர். அவர் உயர்ந்த மனிதர் உயர் நோக்கங்களைக் கொண்டு வாழந்தவர். அவர் ஓர் ஆசிரியர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். நீதி, நேர்மை, தர்மம் தொண்டு முதலானவை அவரிடம் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

இவ்வுத்தமர் சிவபூசை எழுந்தருளப்பெற்ற சைவ நன்மகன். நாவலர் பெருமானின் எண்ணக் கருத்துக்கள் உருவெடுத்தாற்போன்று வாழ்ந்துகாட்டிய நல்லாசிரியர்; அவருடைய வாழ்க்கை நன்மாணாக்கர்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக இருந்தது. ஆசிரியர் சிவசாமி ஐயர் நம் மனதைவிட்டு விலகாதிருப்பது இக் காரணங்களால் மட்டுமல்ல. அவர் நமது பாடசாலையில் ஒழுக்கத்தோடுசேர்ந்த கல்விக்கு வித்தாக இருந்து உழைத்துவந்தார். பொதுமக்களுக்கு நல்வாழ்வளிக்க, ஒரு உத்தம கூட்டுறவாளராகப் பயன்கருதாது உழைத்தார். குரும்பசிட்டியிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள் தோன்றவும் அவை நற்சேவை செய்யவும் அயராது உழைத்துவந்தார். மற்றவர்கள் பொறுப்பேற்கப் பின்னின்றபோது பொறுப்பான பதவிகளை ஏற்றுத்திறம்பட அரசாங்க உத்தியோகத்தர்களாலும் பாராட்டப்படக்கூடிய வகையிற் பணிபுரிந்து காட்டினார். இப்போது குரும்பசிட்டியில் உள்ள பலநோக்கு விளைபொருள் சேமிப்பு மண்டபம் அவரது உழைப்பின் சின்னமாகும்.

அவர் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைமையை வகித்து, சிவதீட்சை வைப்பித்தல், நால்வர் குருபூசைகள் ஒழுங்காக நடாத்துதல், சைவசித்தாந்த வகுப்பு நடாத்துதல், (இருபது வருடங்களுக்கு மேலாக) சைவப் பிரசங்கங்களை நடாத்துதல் என்பவற்றோடு பெரிய தெரு, தபாற்கந்தோர். மத்தியகல்லூரி, சன்மார்க்க சபை தம்பியையா ஞாபக விளையாட்டு மைதானம், மத்திய வைத்தியசாலை, மயிலிட்டி தெற்கு புது எல்லை வகுப்புப் போன்ற ஒவ்வொன்றும் நிறைவேற்றப்படுதலில் ஈடுபட்டு உழைத்துக் குதூகலித்தார்.

அவர் மகாவித்துவான் கணேசையாவிடம் முறையாகத் தமிழ் கற்று ஆசிரியப் பணிக்கு அணிசெய்தார். தலைமை ஆசிரியர் பதவிஉயர்ச்சி பெற்று தேவாரப்பாடல் பெற்ற புனித சிவத்தலமாகிய திருக்கேதீஸ்வர ஆலய திருவீதியில் அமைந்துள்ள் கௌரியம்பாள் வித்தியாலயத்தில் அமர்ந்து அரும்பணியாற்றினார். இச் சிவநெறிச்சீலர் நித்தியமும் நியமமாகச் சிவபூசை செய்து திருக்கேதீஸ்வர நாதனின் திருவடிகளைப் பற்றிநின்று வழிபாடியற்றிய காரணம் போலும், அவரது பூவுலக வாழ்வை திருக்கேதீஸ்வர நாதன் ஆலய சூழலிலே நீக்கி அமரரானார்.



படிப்பகம்

# ஆசிரியர் திரு. மு. இராமலிங்கம் அவர்கள்

ஆசிரியர் இராமலிங்கம் அவர்கள் 25-05-1972ல் எங்கள் வித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெற்றவர். இவர் நாவற்குழியூரைத் தமது பிறப்பிடமாகக் கொண்டாலும் ஆரம்பக்கல்வியில் இருந்து இவ்வித்தியாலயத்திற் கல்விபயின்றவர். 26-05-1917 இல் பிறந்த இவர் 01-09-1934இல் ஆசிரியர் பதவியேற்றுத் தமது ஓய்வுகாலம் வரை இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். இன்றைய குரும்பசிட்டி மாணவர்கள் பலரும் பெற்றோரிற் பலரும் இவரின் மாணவர்களே."எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்னும் முதுமொழியை நிலைநிறுத்தியவர் ஆசிரியர் இராமலிங்கம் அவர்கள். இவரிடம் கல்வி கற்றவர்களின் கையெழுத்தே இதை நிரூபித்துக் காட்டும்.

இவர் படிப்பித்தற்கென்றே பிறந்தவர்; ஒரு நேரமும் சும்மா இருக்கமாட்டார். மாணவர்களையும் சும்மா இருக்கவிடமாட்டார். ஒரே நேரத்தில் மூன்று நான்கு வகுப்புக்களுக்குப் பாடம் நடக்கும். ஒரு வகுப்பில் கணிதம். இன்னொரு வகுப்பில் வாசிப்பு. மற்றொரு வகுப்பில் எழுத்துப்பாடம். ஓர் புறத்தில் வாய்பாடு மனனம். காலை வகுப்பு மாலை வகுப்பு மாணவர்களும் ஆர்வத்துடன் கல்வி கற்பர். தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் கற்பிப்பதற்கென்றே அர்ப்பணித்தவர்.சமய வாழ்வை மாணவரிடையே புகுத்தவேண்டுமென விரும்பி மாணவரோடு தாமும் ஒரு மாணவர்போலவே நின்று தோத்திரப் பாடல்கள் பாடிக் காலை மாலை ஆராதனைகள் நடாத்துங் காட்சியே கண்கொள்ளாக் காட்சி. ஆசிரியர் அவர்களின் தோற்றமே அவரின் சைவ வாழ்விற்கும் தமிழ்த் தொண்டிற்கும் எடுத்துக்காட்டு. காலையில் எழுந்து சந்தியாவந்தனம் முடித்துத் தூய வெள்ளையாடை அணிந்து நெற்றியில் நீறு துலங்கப் பாடசாலை செல்லுங் காட்சியே தனியழகு. " நீறில்லா நெற்றி பாழ்" என்பர் ஆன்றோர். ஆசிரியர் அவர்களின் நீறில்லா நெற்றியை நாம் காணவே முடியாது.

பொன் பரமானந்தர் ஞாபக மண்டபம், பாலர் வகுப்பறை என்பன ஆசிரியர் அவர்களின் அயரா முயற்சியின் பெறுபேறே. ஆசிரியர் அவர்களிடம் கல்வி கற்றவர்களிற் பலர் இன்று இலங்கையின் நாலா பக்கங்களிலும் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுள்ளனர். பாடசாலை முன்னேற்றத்திற்குமாத்திரமன்று கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுபவார். ஏழைக்கமக்காரரின் முன்னேற்றத்துக்காகக் காலஞ்சென்ற பொன் பரமானந்தர் ஆசிரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாணய சங்கத்தை 38 வருட காலமாகக் கட்டியெழுப்பிய பெருமையும் இவரையே சாரும். மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் அம்பாள் ஆலயத்தில் கற்றோரும் மற்றோரும் விளங்கும் வண்ணம் புராண படனஞ்செய்யும் அரிய தொண்டைப் பலகாலமாக ஆற்றிவருந்தார். எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வு சிறந்த சமய வாழ்வாக அமையவேண்டுமென்னும் பெருநோக்கத்தோடு தமது இல்லத்திலேயே திருமுறைப் பண்ணிசை வகுப்புக்களை நடாத்துவித்துவந்தார். சங்கீத ஆசிரியர் ஒருவரை ஒழுங்குசெய்து பலவருடங்களாக மாணவர்களுக்குத் தனது இல்லத்தில் சங்கீத வகுப்பை நடாத்திவந்தார். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" இத்தகைய பண்புகள் நிறைந்த ஆசிரியர் அவர்களும் குடும்பமும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் இனிதே வாழ்க என வாழ்த்துவோமாக.

www.padippakam.com

# ஆசிரியர் திரு.த. இராசரத்தினம் அவர்கள்

ஆசிரியர் திரு.த.இராசரத்தினம் அவர்கள். 25-12-1923இல் குரும்பசிட்டியில் பிறந்தார். இவ்வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்றார். பரமேஸ்வரா ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1943-44 ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். 01-06-1948 முதல் இவ்வித்தியாலயத்தில் ஆசிரிய சேவையை ஆரம்பித்தார். சிறுவயதிலேயே திரு. சீ.தம்பிப்பிள்ளை ஆசிரியர் அவர்களாலும் ஈழகேசரி நா.பொன்னையா அவர்களாலும் வழிநடத்தப்பட்டவர். அழகாக ஒழுங்காக எதையும் செய்யக்கூடிய திறமையுடையவர். இதனால் கல்வியதிகாரிகள் வட்டார நிகழ்ச்சிகளுக்கு இவரைப் பொறுப்பாளராக நியமித்துக் கொள்வது வழக்கம். விளையாட்டுப் போட்டி, தமிழ்த்தினவிழா, பொருட்காட்சி ஆகியவற்றைப் பொறுப்பேற்றுத் திறம்படநடாத்தும் திறமைசாலி.

இவ்வித்தியாலயத்தில் இருபது வருடங்கள்வரை சேவைசெய்து வித்தியாலய வளர்ச்சிக்குப் பெருந்துணைபுரிந்தவர். வித்தியாலய பரமானந்தர் ஞாபகமண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கு, சேகரிக்கப் பல இடங்களுக்கும் சென்றவர்களில் இவரும் ஒருவர். 01-01- 1968இல் தலைமை ஆசிரியராகப் பதவிஉயர்வு பெற்றுக் கேகாலைப் பகுதியிலுள்ள புலத்கோப்பிற்றிய அரசினர் பாடசாலைக்குச் சென்றார். பின்பு தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார்.

இவர் சிறந்த தொழிற்சங்கவாதி. ஆசிரிய சங்கங்களில் முக்கிய பதவிவகித்து, சேவை செய்தவர். குரும்பசிட்டிக் கிராமத்தில் சிரமதான வேலைகளை மேற்கொண்டு குறிப்பாக ஈழகேசரிப் பொன்னையா வீதியை அமைக்க உதவி கிராமத்துத் தொண்டாற்றியவர். சன்மார்க்க சபையின் பொதுக்காரியதரிசியாக நெடுங்காலம் இருந்து அதன் வளர்ச்சிக்காக உழைத்தவர். குரும்பசிட்டி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவைக் காலத்தில் நடைபெறும் சமயச்சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தவர். அம்பாள் ஆலய அழகிய சித்திரத்தேர் திருப்பணிக்காக முன்னின்றுழைத்தவர்.



படிப்பகம்

# திருமதி. தனேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள்

திருமதி தனேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் பொன்.பரமானந்தர் வித்தியாலயத்தில் (1936 - 1969) சுமார் 33 வருடங்கள்வரை ஆசிரியராகச் சேவை செய்துள்ளார். இவர் வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் குரும்பசிட்டியைப் புகலிடமாகவும் கொண்டவர். வேம்படி மகளிர் கல்லூரியில் முதன்முதலாக ஆசிரியராகக் கடமையாற்றியவர். இப்பாடசாலை ஆசிரியர் திரு.சீ.கணபதிப்பிள்ளை அவர்களை விவாகஞ் செய்தகாரணத்தால் இவர் இப்பாடசாலைக்கு உதவி ஆசிரியரானார்.

இவர் இப்பாடசாலைக்கு வருவதற்கு முன் பெண்கள் யாரும் மேற்கல்வி கற்காத காரணத்தினால் கல்வியில் நல்ல தகைமையுடைய ஆசிரியைகள் எவரும் இப்பாடசாலையில் இருக்கவில்லை. தையற்பாடம் படிப்பிப்பதற்கும் தராதரப் பத்திரமற்ற பெண்களே நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவரே தராதரப்பத்திரம் பெற்று நியமிக்கப்பட்ட *முதற்பெண் ஆசிரியராவார்.* இக்காரணத்தால் "தையல் வாத்தியார்" என்ற காரணப்பெயரையும் இவர் பெற்று விட்டார். இவருடைய அரிய சேவையே இப்பாடசாலையில் பலபெண்பிள்ளைகள் தையல் மனையியல் சுகாதார பாடங்களில் S.S.C. வகுப்புப் பரீட்சையிற் சித்திபெறவும் ஆசிரியர்களாக வெளியேறவும் காரணமாக இருந்தது எனலாம்.

"எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதை மந்திரமாக எண்ணி, தமது மாணவருக்கு எண் பாடத்தையும் எழுத்துப்பாடத்தையும் அதிகம் முக்கியப்படுத்திக் கற்பித்து எண்ணற்ற மாணவர்களை இப்பாடங்களில் திறமையடையச் செய்ததாற்றான் பலமாணவர் பல்கலைக்கழகம்வரை செல்ல உதவியாயிருந்தது எனலாம்.

இவரது குடும்பக் கலை இசைக்கலையாகும். இவர் பாட்டுக்களை இனிமையாகப் பாடும் ஆற்றல் படைத்தவர். இவரது இனிய பாடல்களைக் கேட்கவும் இவரைப்பின்பற்றிப் பாடவும் மாணவர் மிகஆவலாக இருப்பர். இவருடைய படிப்பித்தல் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு துடிப்பாகவும் அமைந்துவிடும். பலசிறு கதைகளை மாணவரைக் கொண்டு நடிப்பித்து உற்சாகமூட்டுவது இவரது வழக்கம்.

பாடசாலைகட்கிடையே நடைபெறும் போட்டிகளுக்குத் தாமே பாட்டுக்களை இயற்றி மாணவரைக் கொண்டு பாடுவித்து பரிசில்கள் பெற்று இப்பாடசாலைக்குப் பெரும்புகழீட்டித் தந்துள்ளார். பாடசாலை அலுவல்களுடன் மாத்திரம் நின்றுவிடாது மாதர் கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் ஐக்கிய சங்கம் இவற்றை ஆரம்பித்து நடாத்தி இக்கிராமத்தின் சிறப்புக்கும் பெண்களின் முன்னேற்றத்துக்கும் வழி காட்டியாக இருந்தவர்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமதி. மங்களேஸ்வரி சின்னத்துரை அவர்கள்

1928 ஆம் ஆண்டு குரும்பசிட்டியின் புகழ்பூத்த ஆசிரியர்களில் ஒருவரான மா. சின்னப்பு அவர்களது சிரேட்ட புத்திரியாகப் பிறந்தவர் மங்களேஸ்வரி அவர்கள். தமது ஆரம்பக்கல்வியை மகாதேவா வி-த்தியாசாலையிற் பெற்றுத் தந்தையார் கற்பித்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடைநிலைக்கல்வியைத் தொடர்ந்தார். அங்கு எட்டாம் வகுப்பு வரை கற்றபின் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் பயின்றார்.

1949 இல் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் ஆசிரியராகி 1950 - 51 இல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுத்திரும்பினார். தன் ஆசிரியப் பணியை 1985இல் முடித்துக்கொள்ளும்வரை இப்பாடசாலையிலேயே பணிபுரிந்தார்; பிற்காலத்தில் உப அதிபராகவும் சிலகாலம் கடமையாற்றினார்.

இப்பாடசாலையில் 37 ஆண்டுகள் கடமையாற்றிய மங்களேஸ்வரி அவர்கள் விசேடமாக ஆங்கில பாடத்தைப் போதித்துவந்தார். இக்கால கட்டத்திற் கற்ற மாணவர்கள் அனைவரும் அவரிடம் ஆங்கில போதனையைப் பெறத்தவறவில்லை என்றே கூறலாம். தந்தையாரிடம் கற்றுக் கொண்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இனிய சுபாவம், கிராமப்பற்று என்பன குரும்பசிட்டி கல்விச்சமூகத்தில் ஒரு தனியான இடத்தையும் மதிப்பையும் இவருக்குத் தேடித்தந்தன. கல்விசார் நிறுவனங்கள் நடத்திவந்த ஆங்கிலப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திப் பல வெற்றிகளையும் பெறச்செய்து பாடசாலைக்குப் பெரும்புகழை இவர் பெற்றுத்தந்தார்.

# திருமதி செல்லம்மா கனகசுந்தரம் அவர்கள்

திரு பொன். பரமானந்தரது பாடசாலையிலேயே ஆரம்பக்கல்வி கற்றுப் பின் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றுயர்ந்தவர் திருமதி செல்லம்மா அவர்கள். 1-1-1970 முதல் 31-12-1990 வரை சரியாக 21 ஆண்டுகள் பொன். பரமானந்தர் மகாவித்தியாலயத்திலே ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

இங்கு அவர் கடமையேற்ற காலத்திலிருந்து பாடசாலை நிர்வாகத்திற்கு மிகுந்த உறுதுணையாக இருந்துவந்தார். நேரசூசி, நிதிச்செயற்பாடுகள், கடிதத்தொடர்புகள், ஆவணங்களைப் பேணுதல் முதலான சகல விடயங்களையும் பொறுப்பேற்றுச் செய்தவர். தமிழ், சமூகக்கல்வி, கணிதம் முதலான பாடங்களைத் திறம்படக் கற்பிப்பார். ஆதலால் மாணவர் மத்தியில் நன்மதிப்புடையவராகக் காணப்பட்டார். பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கான செயற்குழுக்களில் மிகுந்த ஈடுபாடுகாட்டிய ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com

# திருமதி யோ. நவரத்தினம் அவர்கள்

திருமதி யோகேஸ்வரி நவரத்தினம் அவர்கள் 1935இல் எமதூரிற் பிறந்தார். இவ்வித்தியாலயத்திலே ஆரம்பக்கல்வியைக் கற்றுப் பின் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். 1958-59இல் கோப்பாய் மகளிர் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிபெற்றார்.

முதலில் நாவலப்பிட்டியிலும் பின் கொழும்பிலும் சுமார் எட்டு ஆண்டுகள் கடமையாற்றி 01-01-1972இல் இங்கு மாற்றலாகி வந்தார். ஓய்வுபெறும் காலம்வரை இங்கேயே கடமையாற்றிய இவர், 30-3-90 முதல் பிரதி அதிபராகவும் விளங்கினார்.

பாடசாலையின் புறவேலைகளில் உற்சாகமாகக் கலந்துகொள்வார். பரிசளிப்பு விழாக்குழு, விளையாட்டுக்குழுக்களில் முக்கிய உறுப்பினராகி அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றிவந்தார்.

கற்பித்தற்திறனும் கடமையுணர்வும்மிக்க இவர் தன்னை உருவாக்கியது இப்பாடசாலையே என்ற உணர்வோடு, நன்றிக்கடனாகப் பாடசாலை பலவித அல்லல்களை எதிர்கொண்டபோதெல்லாம் தனது பங்களிப்பைச் செய்துவந்தார். இரண்டாவதுமுறையாக இடப்பெயர்வைச் சந்தித்த இப்பாடசாலையின் உயிரோட்டத்திற்குத் தனதுநலன்களை மறந்து தன்னாலான கடமைகளைச் செய்து வந்தார். 24 ஆண்டுகள் இங்குசேவை செய்துள்ளனர்.

# குரும்பசிட்டி ஆசிரியர்கள்

**மறைந்த ஆசிரியர்கள்**

| | | |
|---|---|---|
| திரு.பொ.பரமானந்தர் | திரு.சி.கந்தையா | திரு.வ.இராமலிங்கம் |
| திரு.கோ.நமசிவாயம் | திரு.ப.கந்தையா | திரு.ப.வைத்தியலிங்கம் |
| திரு.வ.பொன்னுக்குமாரு | திரு.செ.தம்பிப்பிள்ளை | திரு.சீ.கணபதிப்பிள்ளை |
| திரு.க.சுந்தரமூர்த்தி | திரு.வ.கனகரத்தினம் | திரு.வை.துரையப்பா |
| திரு.சி.இராசிங்கம் | திரு.நா.சண்முகம் | திரு.மா.சின்னப்பு |
| திரு.நா.சிவசாமி ஐயர் | திரு.க.நாகலிங்கம் | திரு.சீ தம்பிப்பிள்ளை |
| திரு.வ.நடராசா | திரு.க.அருணாசலம் | திரு.கனக.செந்திநாதன் |
| திரு.தி.சின்னத்தம்பி | திரு.தி.சுப்பிரமணியம் | திரு.சி.கதிரவேலு |
| திரு.பொ.கந்தப்பு | திரு.வ.இளையதம்பி | திரு.த.க.செல்லையா |
| திரு.வ.கந்தையா | திரு.தா.இளையதம்பி | திரு.இ.குமாரதேவன் |
| திரு.நா.சிவசுப்பிரமணியம் | திரு.சி.இரத்தினம் | திரு.மு.க.சுப்பிரமணியம் |
| திரு.த.கதிரவேலு | திரு.து.தில்லைநடேசன் | திரு.நா.பத்மநாதன் |
| திரு.க.கணேசநாதன் | திரு.த.அரியரத்தினம் | திரு.நா.கிருஷ்ணானந்தன் |
| செல்வி.அ.சின்னம்மா | திருமதி.க.ஆச்சிமுத்து | திருமதி.ப.தம்பிப்பிள்ளை |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| செல்வி.நா.ஞானேஸ்வரி | திருமதி.ச.சுப்பிரமணியம் | திருமதி.ப.சுப்பிரமணியம் |
| திருமதி.ப.சாந்தராசா | திருமதி.சா.நடராசா | திரு.இ.அருமைநாயகம் |
| திருமதி.ச.மார்க்கண்டு | திருமதி.தி.சிவராசா | |

## சேவையிலிருந்து விலகிய ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| திரு.மு.இராமலிங்கம் | திருமதி.த.கணபதிப்பிள்ளை | திருமதிம.சின்னத்துரை |
| திருமதி.செ.கனகசுந்தரம் | திரு.தி.சிவராசா | திரு.க.கோபிநாத் |
| திரு.வி.புவநேந்திரன் | திருமதி.ச.சுப்பிரமணியம் | திருமதி.செ.சுப்பிரமணியம் |
| திருமதி.யோ.நவரத்தினம் | திரு.அ.பஞ்சலிங்கம் | திரு.சா.நடராசா |
| திரு.ம.மகாதேவி | திரு.பா.சிவகுரு | செல்வி.த.வேலுப்பிள்ளை |
| திரு.சி.இரத்தினம் | திரு.ச.சுப்பிரமணியம் | திரு.இ.நவரத்தினம் |
| செல்வி.ச.நடராசா | திரு.வி.கந்தவனம் | திரு.சி.சிவானந்தம் |
| திரு.க.சோமசுந்தரம் | திருமதி.சு.பத்மநாதன் | திருமதி.வி.சின்னத்துரை |
| திருமதி.ம.குணரத்தினம | திரு.செ.சின்னத்தம்பி | திருமி.ர.ஈஸ்வரகுமார் |
| திரு.A.T.பொன்னுத்துரை | திருமதி.ந.இராமலிங்கம் | திருமதி.ம.மகாதேவன் |
| திருமதி.விமலேஸ்வரி | செல்வி.ப.தில்லையம்பலம் | திரு.ந.யோகராசா |
| திருமதி.சா.சிதம்பரனாந்தன் | திருமதி.பா.சொர்ணராசசிங்கம் | திருமதி.க.சதாசிவசங்கரி |
| திருமதி.வி.சுப்பிரமணியம் | திருமதி.ச.அருமகசாமி | திருமதி.இ.கோபிநாத் |
| | திரு.சி.கனகசுந்தரம் | திருமதி.செ.தில்லைநடராசா |

## சேவையிலுள்ள ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| திரு.ஆ.சி.நடராஜா | திரு.க.பரிபூரணானந்தன் | திரு.ந.காளிதாசன் |
| திரு.க.சிவதாசன் | திரு.அ.ஜெயதாசன் | திருமதி.த.காளிதாசன் |
| செல்வி.வ.குமாரசாமி | செல்வி.ம.விசுவலிங்கம் | திரு.பொ.இரவிச்சந்திரன் |
| திரு.எஸ்.யோகராசா | திருமதி.அ.யோகராசா | திரு.கு.இராசநாயகம் |
| திருமதி.தயாநிதிமோகன் | திரு.ஆ.மகாதேவன் | திருமதி.த.தர்மரத்தினம் |
| திருமதி.வ.பத்மநாதன் | திருமதி.ம.உதயகுமார் | செல்வி.கி.கந்தையா |
| திருமதி.சி.சிவசுப்பிரமணியம் | திருமதி.வ.இளங்கோவன் | திருமதி.பு.இராசநாயகம். |
| திரு.அ.உதயகுமார் | திருமதி.ஜெ.தேவராசா | திருமதி.சு.செல்வநேசன் |
| செல்வி.யோ.இராசேந்திரம் | திரு.B.உதயகுமார் | திருமதி.ம.உதயகுமார் |
| திருமதி.ப.மகாதேவன் | | |

## பொன் பரமானந்தர் ம.வி.யிற் கற்பித்த பிறவூர் ஆசிரியர்கள்

திரு.த.நடராசா வயாவிளான் — திருமதி.சி.பொன்னம்பலம் குப்பிளான்
திரு.ச.அருமைநாயகம்- வறுத்தலைவிளான் — திருமதி.பு.இராசநாயகம்.
திரு.த.கனகசபை மட்டுவில் — திருமதி.தங்கமுத்து குப்பிளான்
திரு.சி.இரத்தினசிங்கம் குப்பிளான் — திரு.இ.நமசிவாயம் குப்பிளான்
திருமதி.ா.கணேசலிங்கம் குப்பிளான் — திருமதி.பேரின்பபாலசுப்பிரமணியராசா குப்பிளான்
திரு.இ.இராசசேகரம் குப்பிளான் — திருமதி.த. தம்பித்துரை கட்டுவன்
திரு.த.சிவராசா கட்டுவன் — திரு.எஸ்.அருள்தாஸ் கட்டுவன்
செல்வி.கு.கணபதிப்பிள்ளை — கட்டுவன் திரு.சி.சரவணபவான் ஏழாலை
திரு.சி.தாமோதரம்பிள்ளை புன்னாலைக்கட்டுவன் திரு.செ.வரதராசன் புன்னாலைக்கட்டுவன்
திரு.வை.கணேசமூர்த்தி தெல்லிப்பழை — திரு.செ.பத்மகாந்தன் தெல்லிப்பழை
திரு.பி.பெனடிக்ற் பலாலி — திருமதி.த. சிவலோகநாதன் மட்டக்களப்பு
திரு.சொர்ணலிங்கம் ஊரங்குணை — திருமதி.இ.இராசரத்தினம்
திருமதி.ஜா.நாகேந்திரம் — செல்வி.ம.வேலாயுதர் கட்டுவன்
திரு.க.கந்தசாமி நீர்வேலி — திருமதி கௌ.ஸ்ரீதரன் வீமன்காமம்
திரு.சு.தளையசிங்கம் கட்டுவன். — **தொகுப்பு:** திரு.க.இராமநாதன்



படிப்பகம்

www.padippakam.com

# நாற்பதின் முற்பகுதிகளில் மகாதேவ வித்தியாசாலை -ஓர் எழுத்தாளனின் மனப் பதிவுகள்

திரு. வேல். அமுதன்

பல்வேறு நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்த காலகட்டம் ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதின் முற்பகுதி. இலங்கையில் கிராமங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. கிராமங்களுக்குள் குரும்பசிட்டிக்கு மேலதிக அச்சுறுத்தல் இருந்தது.

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதின் முற்பகுதியில் இரண்டாம் உலக மகா யுத்தம் உக்கிரநிலையை அடைந்திருந்தது. இலங்கையைக் கட்டியாண்ட ஆங்கிலேயன் தன்னையும் இலங்கையையும் எதிரியின் தாக்குதலில் இருந்து காப்பாற்றப் படாதபாடு பட்டுக்கொண்டிருந்தான். பாதுகாப்பைப் பலப்படுத்தப் பலாலியிலும் விமான ஓடுபாதை தயாரித்து முகாமிட்டிருந்தான்.

ஒருநாள் முன்னிரவு என்று ஞாபகம். மறக்கமுடியாத ஒரு பயங்கரச் சம்பவம் நிகழ்ந்தது. வானமுகட்டில் பயங்கரச் சத்தத்துடன் எரிந்து வெடிக்கும் சத்தம் கேட்டது. அந்நேரம் இரவுச் சாப்பாட்டை நானும் எனது ஆச்சியும் (அந்நாளில் நாம் அன்னையை ஆச்சி என்று அழைப்பது வழக்கம்) சாப்பிட்டுக்கொண்டிருந்த நேரம்; சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக ஓடினோம். வீட்டிலிருந்து ஒன்றையும் கையோடு எடுக்கவில்லை; வீட்டைப் பூட்டவுமில்லை. உயிர் தப்பினால் போதும் என்ற எண்ணத்தோடு ஓடினோம். எரிந்து வெடித்த விமானம் எனது வீட்டிற்கு இருநூறு யார் தூரத்தில் விழுகுது விழமுன் நாம் அரை மைலைத் தாண்டிவிட்டோம். இவ்வளவு வேகமாகத் தலைதெறிக்க ஓடியதன் காரணம் விமானம் குண்டுகளைச் சுமந்துவந்தது என்ற புரளி. விமான நிலையம் குரும்பசிட்டியின் வடக்கெல்லை - பலாலியில் இருந்தமை யால், இப்படியான உயிர் ஆபத்து எப்பவும் எம் ஊரவருக்கு வரலாம் என அஞ்சிப் பல முன்ஆயத்தங்கள் எடுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்று அபாய அறிவித்தல் கேட்டதும் பதுங்குகுழியில் சென்றுபதுங்கும் பயிற்சி.

அக்காலத்தில் நான் 'பெரிய வாத்தியாரின்' மகாதேவா வித்தியசாலையில் ஆரம்பக்கல்வி பயின்றுகொண்டிருந்த காலம். எங்களுக்குப் பதுங்குகுழிப் பயிற்சி மகாதேவா வித்தியாசாலையிற் தரப்பட்டது. இப்பயிற்சிக்குப் பொறுப்பாசிரியராக வைத்திலிங்கம் வாத்தியார் இருந்தார். அவர் அபாய முரசு கொட்டுவதும், மாணவர் உடன் பறந்துகட்டி ஓடிப் பதுங்குகுழிக்குட் பதுங்குவதுமாகப் பயிற்சிதரப்பட்டது.

மகாதேவா வித்தியசாலையை ஸ்தாபித்தவர் பெருமகனார் திரு.பொன்.பர மானந்தர் அவர்கள். மகாதேவா வித்தியசாலைதான் குரும்பசிட்டியின் ஒரே சைவத்தமிழ் பாடசாலை. உயர்திரு.பொன்.பரமானந்தர் அவர்களே பாடசாலையின் தலைமை ஆசிரியராக நீண்டகாலம் கடமையாற்றியவர். குரும்பசிட்டியின் கல்வி, கலைப்



படிப்பகம்

பாரம்பரியங்களுக்கு வித்திட்டு முழுமைபெற்ற குரும்பசிட்டி தோற்றம் பெற அயராது உழைத்த காரணத்தால், பொதுமக்கள் திரு.பொன்.பரமானந்தரை ஆசையோடு 'பெரிய வாத்தியார்' என்று அழைத்தனர்.

நான் பிறந்தது 1938இல். நான் பிறந்து சில மாதங்களில் 'பெரிய வாத்தியார்' சிவபதமடைந்துவிட்டதால், அவரைக் காணும் பாக்கியம் எனக்கில்லை. ஆனால் அவரது Life Size புகைப்படத்தைக் காணும் வசதிஇருந்தது. மகாதேவா வித்தியசாலையின் பெரிய மண்டபத்தின் மத்தியின் நடுப்பகுதியில் இப்படம் தொங்கவிடப்பட்டு இருந்தது. புகைப்படத்தைத் தினசரி பார்த்ததினால், "பெரிய வாத்தியார். -நெடிய அழகிய நிமிர்ந்த உயரம்.சுமார் 5' 10" வரை உயரம் என நினைக்கிறேன். அருள் சுரக்கும் அகன்ற கண்கள்;நெற்றில் விபூதி; நெற்றி மத்தியில் சந்தனப்பொட்டு;அரையில் வேட்டி; முழு நீள சுதேசிய மேலணி, சால்வை. ஆரும் பார்த்தால் தாமாகவே பணிந்து போகும் ஆளுமை மிக்க தோற்றம்"என்ற படம் என் மனத்திரையில் வீழ்ந்துள்ளது.

எம் பிராந்தியத்திலேயே ஆசிரியர் தராதரப் பத்திரப் பயிற்சிவகுப்புவரை கல்வி கற்பித்த ஒரேயொரு பாடசாலை - மகாதேவா வித்தியாசாலை குரும்பசிட்டியில் இருந்தமையாலும், செயற்கரிய கருமங்கள் செய்த தேசபக்தன் சின்னச்சட்டம்பி அதாவது, உயர்திரு ந.சின்னத்தம்பி அவர்கள் குரும்பசிட்டி மேற்கைச் சேர்ந்தவர் என்பதாலும், ஈழத்தமிழ்ப் பத்திரிகை உலகிலேயே 'ஈழகேசரி' என்றொரு மிக உயர்தரப் பத்திரிகையை தந்த பத்திராதிபர் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்ததாலும் குரும்பசிட்டி பெருமைபெற்ற ஊராகவே என்றும் இருந்தது.

ஆனால்,பொதுப்படையாகக் குரும்பசிட்டியை நாற்பதின் முற்பகுதிகளில் அவதானித்தால் பொருளாதார ரீதியில் பின்தங்கிய கிராமம்தான். அன்றைய குரும்பசிட்டியில் போக்குவரத்து - அதாவது பிரயாணத்திற்கு பஸ் வசதி இல்லை; முழுமைபெற்ற வைத்தியசாலை இல்லை; தபாற்கந்தோர் இல்லை; அழுத்தம் திருத்தமான - தார் போடப்பட்ட வீதிகள் இல்லை. வீதி என்ற பெயரில் வெள்ள வாய்க்கால்கள் இருந்தன. எண்பதுகளில் ' ஈழகேசரி பொன்னையா வீதி' எனப் பெருமையோடு பெயரிடப்பட்ட அகன்ற அழகிய வீதியும் நாற்பதுகளில் மக்கி றோட்டே. திடலும்குழியும் மிதந்த சுண்ணாம்புக் கற்களுமான இந்த மக்கி றோட்டால்தான் நான் மகாதேவா வித்தியாசாலைக்குப் போய்வந்தேன். போய்வருவது பொடி நடைதான்!

பாடசாலைக்குப் போகும்வேளை அருளம்பலம் வீட்டுச் சந்தியில் சங்கக் கடையையும், 'நாமகள் வாசிகசாலையையும், நவீன குரும்பசிட்டியின் சந்தியில் சன்மார்க்க சபையையும் வாய்ப்பனுக்கும் கோப்பிக்கும் பிரபலமான வையாபுரி கடையையும், ஆ வர்க்கத்தை ஆறுதல் படுத்தும் ஆரோஞ்சு கல்லையும் பிரபல உப்பு வியாபாரி வைத்திலிங்கம் அவர்களின் வீட்டு வாசலில் றோட்டோரம் அமைக்கப்பட்டிருந்த நீரருந்த வசதி, தங்கிச் செல்ல வசதியுடைய தங்குமடத்தையும் குரும்பசிட்டி கிழக்கு கோயில் சதுக்கத்தையும் தாண்டியே பாடசாலை சென்றேன்.

பொறுக்குவதும் கண்மணி ஆச்சி நுரைக்க நுரைக்க ஊற்றித் தரும் பாலைக் குடித்துவிட்டுத் துள்ளித்துள்ளிப் பாடசாலைக்கு ஓடுவதும் ஆனந்தம் தரும் நீங்காத நினைவுகளே.

ஒரு நாட்டின் முன்னேற்றம் வானளாவி நிற்கும் கட்டடங்களிலோ அல்லது பௌதீக வளங்களிலோ தங்கியிருப்பதில்லை என்றும் கல்வி அறிவுபெற்ற மக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது என்றும் அடிக்கடி பேரறிஞர் அண்ணா கூறுவார். அந்தவகையில் குரும்பசிட்டியின் முன்னேற்றத்திற்கு அமரர் பரமானந்தர் என்றென்றும் நிலையாகநிற்கக்கூடிய வலுவான அத்திவாரத்தை இட்டுவைத்தார். குரும்பசிட்டி மக்கள் மட்டுமல்ல அயற் கிராமத்தவர்களும் தங்கள் அறிவுத்தாகத்தை தணித்துக்கொள்ள அன்றைய குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை வழிவகுத்தது.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையு மேமாப் புடைத்து"

ஒருவன் ஒரு பிறவியில் கற்றகல்வி ஏழு பிறவிவரை தொடர்ந்து வந்து அவனுக்கு உதவிபுரிகிறது. இவ்வாறு நிலைத்து நிற்கக்கூடிய கல்விச் செல்வத்தை நாம் பெற்றுக்கொள்ளும் களம் பாடசாலைகளே. தன்னலம் கருதாது நமக்கெல்லாம் கல்விச் செல்வத்தை அள்ளித் தருபவர்கள் ஆசிரியர்களே.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

இவற்றுக்கு ஈடாகக் கல்விக்கூடங்களையும் கொள்ளலாம். உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் எனது பாடசாலையின் பெயரைக் கேட்டதும் மெய்சிலிர்க்கும். உள்ளம் புளகாங்கிதம் அடையும்.

நான் நான்கு ஆண்டுகள் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையில் கல்வி பயிலும் பெரும்பாக்கியம் பெற்றேன். குறுகியகாலமாக இருந்தாலும் ஆரம்பக் கல்வியைப் புகட்டிய ஆசிரியர்களை நன்றியுணர்வோடு நினைவில் இருத்திவைத்திருக்கிறேன். ஆங்கிலப் பாடசாலை என நம்மவரால் பேசப்பட்ட தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் அனுமதி பெற்றுச்சென்ற நான் மாறுபட்ட சூழ்நிலைக்குப் பொருத்தப்பாடுடையவனேயென்றால் அதற்குரிய பெருமை எமது கிராம ஆரம்பப் பாடசாலையையே சாரும். குறிப்பாக வறுத்தவிளானைச் சேர்ந்த அருமைநாயகம் ஆசிரியரை மறக்கவேமுடியாது. காரணம் அவர் கற்றுத்தந்த ஆங்கிலம் என்றே கூறுவேண்டும். சிறுபராயத்திற் பிறமொழியான ஆங்கிலத்தை, கிராமச் சூழலில் வசித்த எங்களுக்கு, எங்கள் இளம் மனதில் இலகுவாகப் பசுமரத்தாணி போல் பதிய வைத்ததுமல்லாமல் அதில் ஒரு விருப்பத்தையும் ஏற்படுத்தினார். மூன்றாம் வகுப்பிலேயே ஆரம்ப இலக்கண அறிவைப் புகட்டினார். அவரது கற்பித்தல் எனது ஆங்கில அறிவுக்கு இறுக்கமான அத்திவாரமானது. எட்டாம் வகுப்பிலிருந்து (அன்றைய J.S.C.) விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்கும் துணிவைப் பெற்றேன்.

www.padippakam.com

திரு.இராசரத்தினம் ஆசிரியர் எனது கையைப்பிடித்துக் கலர்ச் சோக்கு மூலம் சித்திரம் வரைய வைத்து எனது ஆற்றலை வெளிக்கொணர்ந்தார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற அத்தனை பொருட்காட்சிகளிலும் எனது சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. தொடர்ந்து மகாஜனக் கல்லூரியிலும் ஒவ்வொருவருடமும் பரிசளிப்பு விழாக்களின்போது பரிசில்கள் பெற்றேன். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடைபெற்ற சித்திரக் கண்காட்சிகளில் எனது சித்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பரிசில்களும் கிடைக்கப்பெற்றன. மகாஜனாவில் எனக்குச் சித்திரம் கற்பித்த நிமால் மாஸ்டர் (சிங்கள ஆசிரியர்) எனது திறமையை மேலும் பெருக்கினார். 1955 ஆம் ஆண்டில் சித்திர ஆசிரியராக மகாஜன கல்லூரியில் சேர்ந்துகொண்ட குரும்பசிட்டி திரு.ஆ.தம்பித்துரை அவர்களின் பெரும் மதிப்பையும் பெற்றேன்.

திரு.இராசரட்ணம் ஆசிரியர் என்னைப் பல பாடசாலை நாடகங்களிலும் நடிக்க வைத்தார். 1951ஆம் ஆண்டு மூன்றாம் வகுப்பில் கல்விகற்றபோது நாடகத்தில் பங்கேற்ற பின்னர் எந்தவொரு நாடகத்திலும் பங்குகொள்ளவில்லையாயினும் சட்டக்கல்லூரியில் பயிலும்போது 1967ஆம் ஆண்டு சட்டக் கல்லூரித் தமிழ் மன்ற முத்தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்ட தந்தை செல்வாவின் தனையன் திரு.செ.சந்திரகாசன் தயாரித்தளித்த “இதுவும் ஒரு கல்யாணம்” என்ற நாடகத்திலும் 1968ஆம் ஆண்டில் சட்டத்தரணி செ.வே.விவேகானந்தன் தயாரித்தளித்த “நீதியே பதில் சொல்” என்ற நாடகத்திலும் பிரதம பாகமேற்று நடித்துப் பாராட்டுதலைப் பெற்றேன்.

அதேபோலப் பேச்சு வன்மையையும் திரு.இராசரட்ணம் ஆசிரியர் அவர்கள் வளர்த்தாராயினும் மகாஜனக் கல்லூரியில் எதுவித பேச்சுப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் 1965ஆம் ஆண்டு குரும்பசிட்டியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் காலம்சென்ற திரு.வே.வன்னியசிங்கம் அவர்களும் காலம்சென்ற திரு.அ.மாணிக்கவாசகர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்கச் சொற்பொழிவாற்றினேன். சட்டக் கல்லூரியிலும் ஆறு பேர்களைக்கொண்ட தமிழ் விவாதக் குழுவிற்கான தெரிவுப் போட்டியில் பங்குபற்றித் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் விவாதக் குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டேன். இவற்றைக் குறிப்பிடுவதற்குக் காரணமுண்டு. சிறார்களாக இருந்தபொழுதே ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு கொடுத்த முறையான பயிற்சியின் வெளிப்பாடாகும். உரிய சந்தர்ப்பம் இன்றியோ அல்லது எங்களது அசிரத்தை காரணமாகவோ தூங்கிக் கிடக்கும் ஆற்றலும் திறமையும் உரியநேரத்தில் வெளிப்படும் என்பதற்கு எனது அனுபவம் சிறந்த சான்றாகும்.

திரு.வைத்திலிங்கம் ஆசிரியர் கற்றுத்தந்த மனக்கணிதம் இன்றைய கணனியோடு ஓரளவு ஈடுகொடுக்க ஏதுவாக அமையுமென்று இம்மியளவும் நினைத் திருக்கவில்லை. திரு.வைத்திலிங்கம் ஆசிரியர் அவர்களின் தோற்றமும் உடலும் ஆரம்பத்தில் இலேசான பயத்தைத் தந்தது உண்மைதான். ஆனால் வெகு சீக்கிரத்தில் அந்த அச்சம் அறவே நீங்கிவிட்டது. காரணம் அவர் மாணவர்களுடன் ஏற்படுத்திய இறுக்கமான தொடர்பாகும். கடைசிப்பாட நேரம் ஓரிரு கணக்குகளைத் தந்துவிட்டு அவைகளைச் சரியாகச் செய்துகொடுத்துவிட்டால் உடனேயே வீடுசெல்ல அனுமதிப்பார். இதனால் அவரோடான தொடர்பு மிகவும் நெருக்கமானது.



படிப்பகம்

ஐயர் வாத்தியார் என்று அழைக்கப்படும் நா.சிவசாமி ஐயர் அவர்கள் சமயம் படிப்பித்த பாங்கு எங்களைச் சமயத்தில் ஈடுபாடுகொள்ள உந்துசக்தியாக அமைந்தது. 'சைவபோதம்'' என்னும் சமய பாடப்புத்தகத்தை விளங்கப்படுத்தும்போது அனேகமாக என்னை வாசிக்க வைப்பார். அவர் அன்று வலியுறுத்திக் கற்பித்த தமிழ் உச்சரிப்பு இன்றும் நினைவுகூர்ந்து பெருமைப்படவேண்டியது. குறிப்பாக "ல,ழ,ள" "ந,ன,ண" ஆகியவற்றின் உச்சரிப்பு வேறுபாடுகளை மிகத்தெளிவாக கற்றுத்தந்தார். தமிழைப் பிழையற எழுதவாசிக்க வைத்தவர் அவரே. 1948 ஆம் ஆண்டு பாலர் கீழ்ப்பிரிவில் சேர்ந்து படித்த நாங்கள் 1949 ஆம் ஆண்டு தை மாதம் பாடசாலை ஆரம்ப தினத்தன்று பாலர் கீழ் வகுப்பிலேயே திரும்பவும் போய் அமர்ந்துகொண்டோம். திரு.மு.இராமலிங்கம் ஆசிரியர் அவர்கள் எங்களிடம் சில கேள்விகளைக் கேட்டார். திருப்தியாகப் பதில் அளித்தவர்களை முதுகில் தட்டிக்கொடுத்து "வலு கெட்டிக்காரன் ஓடிப்போய் முதலாம் வகுப்பில் இருக்கலாம்" என்று கூறி அனுப்பினார். அவரது "தட்டிக் கொடுத்தல்" எனக்கும் கிடைத்தது. அன்று ஓடிப்போய் முதலாம் வகுப்பில் இருந்த நான் இன்றும் அவரது தட்டிக் கொடுத்தலினால் இயங்கிக்கொண்டிருக்கிறேன்.

திரு.பொன்.பரமானந்தர் அவர்கள் ஆசிரியர்களையும் நெறிப்படுத்தி நற் பண்பாளர்களாக ஆக்கினார். எல்லோரும் குடும்பமாகவே செயற்பட்டார்கள். மாணவர்களின் கல்வி முன்னேற்றம், ஒழுக்கம், கட்டுப்பாடு, விழுமியங்கள் ஆகியனவற்றிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். ''*கடமையைச் செய் பலனை எதிர்பாராதே*'' என்ற கீதையின் உபதேசத்திற்கமையச் செயலாற்றி ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்பினார்கள்.

திரு.பொன்.பரமானந்தர் அவர்கள் தன்மகன் மகாதேவா மீது கொண்ட பற்றினால் "மகாதேவா வித்தியசாலை" என தனது பாடசாலைக்குப் பெயரிட்டார். ஆனால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு எட்டாவது தசாப்த கால கட்டத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலம் சென்ற திரு,மு.க.சுப்பிரமணியம் அவர்களின் அயராத உழைப்பினாலும் காலம் சென்ற திரு.மகாதேவா அவர்களின் ஒத்துழைப்பாலும் பெற்றோர் ஆசிரியர் மாணவர்கள் ஆகியோரின் ஆதரவாலும் "பொன்.பரமானந்தர் வித்தியாலயம்" என பாடசாலையின் பெயர் மாற்றம்செய்யப்பட்டது.

நாம் கல்வியில் எவ்வளவு உயர்ந்தாலும் எப்பதவி வகித்தாலும் எமது ஆரம்பக் கல்வியைப் பெற்ற பாடசாலை நமது கல்விக் கருவறையாகும். அதற்கு என்றென்றும் நம் சிரம்தாழ்த்தி இரு கரம்கூப்பி நன்றியோடு வணக்கம் செலுத்துவோமாக. நூற்றாண்டுகளை வெற்றிப் பெருமிதத்தோடு கடந்துவந்துவிட்ட பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம் தொடர்ந்தும் வீறுநடைபோட்டு நற் பிரசைகளை உருவாக்க வாழ்த்துவோம், வழி பல வகுப்போம். மீண்டும் குரும்பசிட்டி மண்ணில் இயங்க ஒன்றுபட்டுழைப்போம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

www.padippakam.com

# எங்கள் ஆசிரியர்



திரு.ம.ரவீஸ்வரன்

# நினைவில் நிறைந்த ஆசிரியர்கள்



திரு.க.சுந்தரமூர்த்தி



திரு.கோ.நமசிவாயம்



திரு.வ.பொன்னுக்குமாரன்



திரு.வ.இராமலிங்கம்



திரு.த.நடராசா
(வயாவிளான்)



திரு.க.அருணாசலம்



திரு.நா.சிவசுப்பிமைணியஐயர்



திரு.க. செல்லையா



படிப்பகம்

www.padippakam.com



















படிப்பகம்

www.padippakam.com

# பரமானந்தர் வித்தியாலயத்துப் பசளை

சுவர்ணராஜா நிலக்ஷன்
சட்டத்தரணி
பத்திரிகை – பொது அலுவல்கள் அதிகாரி,
பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம்,
கொழும்பு.

நூற்றாண்டு விழாக்காணும் அறிவாலயம் ஒன்றின் புகழ்குறித்து விதந்துரைக்கும் திறமையோ சமூக அந்தஸ்தோ வயதிலும் அறிவிலும் சிறியேனான எனக்கு இல்லை என்பதில் எவ்வளவு சந்தேகமும் இல்லையாயினும், ஒரு சராசரி மனிதன் என்ற வகையில் என் ஆரம்பக் கல்விக்கு அடித்தளமிட்ட அறிவுக்கோயில் குறித்து ஓரிரு வாக்கியங்கள் எழுதும் உரிமை எனக்கு உண்டென்ற வகையில், பெரியோரின் அனுமதியுடன் என் மனத்தெழும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

1982ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரையான குறுகிய ஒரு காலப்பகுதிக்கே நான் பரமானந்தர் வித்தியாலயத்தில் பயின்றிருந்தாலும் அக் காலப்பகுதியே வாழ்வில் 'கல்வி' என்ற துறையிலான ஆர்வத்தை ஆழப்பதித்த காலமாகும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். அதேபோல் தான் இளைமையில் ஏற்படும் கல்வியார்வமும் நற்குணநாட்டமும் ஒருவனது வாழ்வு முழுமையும் தொடர்ந்து நிலைப்பதுடன் மேலும் வளரவும்செய்யும்.

பாலர் வகுப்பில் பாக்கியம் ரீச்சரிடம் பயின்ற பசுமையான நினைவுகளும் முதலாம் வகுப்பில் செல்வராணி ரீச்சரிடமும் இரண்டாம் வகுப்பில் அன்னம்மா ரீச்சரிடமும் மூன்றாம் வகுப்பில் செல்லம்மா ரீச்சரிடமும் நான் பெற்ற கல்வியும் போதனைகளும் இன்றும் என் மனதில் நிழலாடிக்கொண்டிருப்பதற்குக் காரணம் என் வாழ்வின் முக்கிமான வளர்ச்சிப்பருவத்தில் பதிந்த நினைவுகளாக அவை விளங்குவது தான்.

வடபுல யாழ்.குடாநாட்டின் ஓர் மூலையில் அமைதியான சூழலில் அடக்கத்துடன் அறிவூட்டற் திருப்பணியைச் செய்துகொண்டிருந்த குரும்பசிட்டிக் கிராமத்தின் அறிவு மையம் பரமானந்தர் வித்தியாலயம் இன்று தனது சொந்த அமைவிடத்தில் இயங்கமுடியாது இன்னல்களுக்கு மத்தியில் வேறிடஞ்சேர்ந்து வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் தன் சேவையை விடாதுதொடர்வது, தம் கல்விப் பாரம்பரியத்தைப் பேணவேண்டும் என்பதில் குரும்பசிட்டி மண்ணுக்கும் மக்களுக்கும் உள்ள மனவுறுதியின் வெளிப்பாடேயாகும். அதிலும் சிறிய அளவிலேனும் பாடசாலையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட எடுத்துள்ள உறுதியான முடிவு, அவ் உள் உறுதிப்பாட்டுக்கு மகுடஞ் சூட்டுவதாகும்.

பரமானந்தர் வித்தியாலயத்தில் எனது ஆரம்பக் கல்வியை முடித்து யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் நான் 1986ஆம் ஆண்டு இணைந்த போது நகர்ப்புற ஆங்கில அறிவு மிக்க மாணவர்களுடன் எவ்வித மனக்கிலேசமுமின்றி அவர்களுடன் கல்வி மற்றும் புறக்கிருத்திய நடவடிக்கைகளில் சமானமாக ஈடுபட்டுப் போட்டிபோடும்



படிப்பகம்

மனவலிமையை என்னுள் ஏற்றி அனுப்பியது பரமானந்தர் வித்தியாலயமே! பரி.யோவான் கல்லூரியில் வகுப்புப் பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாமிடம் பெறும் போதெல்லாம் ஏனைய மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து நான் எந்தப் பாடசாலையிலிருந்துவந்து புதிதாக இணைந்துள்ளேன் என விசாரித்துப் பாராட்டும் போதெல்லாம் ஏற்படும் என் உளமகிழ்வுக்கும் உவகைக்கும் உரித்துடையது எனக்கு உயர் வழிகாட்டிய எங்கள் வித்தியாலயமே!

ஒரு மாணவனுக்கு ஏட்டுக்கல்வி மட்டும் ஏற்றமளிக்காது. உலகின் சகல பரிமாணங்களுக்கும் முகங்கொடுக்கும் வகையில் அவன் வளர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட வசதி வாய்ப்புக்களின் மத்தியிலும் தன் சிறார்களைப் புறக்கிருத்திய நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்கமளித்தது பரமானந்தர் வித்தியாலயம். விளையாட்டு மற்றும் பேச்சு, ஆடல், பாடல், நாடகம் எனப் பல்துறை சார் விடயங்களிலும் தன் மாணாக்கர் ஈடுபட்டு பயனடையத் தன் எல்லைக்குட்பட்டுக் களமமைத்துக் கொடுத்து அக் கலைக்கோயில்.

எனக்கு இன்னும் நினைவில் நிலைத்திருக்கின்றது. சிவநெறிக் கழகம், கீரிமலை என்ற அமைப்பு வருடாவருடம் மாணவர்களின் பேச்சாற்றலையும் சமய அறிவையும் வளர்க்கும் முகமாகச் சிவராத்திரி தினத்தையொட்டிய பேச்சுப் போட்டிகளை நடத்தி வந்தது. இப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காகத் தனது மாணவர்களை நன்கு தயார்ப்படுத்தித் தவறாது கலந்துகொள்ளச் செய்து வந்தது பரமானந்தர் வித்தியாலயம்.

பின்னாளில் சட்டக் கல்லூரி இந்து மகாசபை மலரான ‘நக்கீரம்’ இதழுக்கென் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான பிரதம குருவான ஸ்ரீ நகுலேஸ் வரக் குருக்களை நான் செவ்விகாணச் சென்றிருந்தபோது, இதனைக் குறிப்பிட்டு எமது கல்விசார் நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிப்பதில் சிவநெறிக் கழகம் வகித்த அளப்பரும் பங்கைக் கூறி, குறிப்பாக என்னைப் பொறுத்தளவில் நான் முதலாம் வகுப்பில் படிக்கும் போது கலந்துகொண்ட எனது முதலாவது பேச்சுப் போட்டியாக சிவநெறிக் கழகத்தின் பேச்சுப்போட்டியே அமைந்தது என்பதைத் தெரிவித்தபோது, அவரும் அகமகிழ்ந்தார். இவ்வாறாக இப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக எம்மைத் தயார் படுத்துவதில் சிரமம்பாராது உழைத்த பரமானந்தர் வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கே இப் பெருமை முழுமையும் சாரும்.

இதனைவிட வட்டார, மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பல்வேறு போட்டி களுக்கும் மாணவர்களை ஏற்றவிதத்திற் பயிற்றுவித்துப் பங்குபெறச் செய்து பரிசில்களையும் தட்டிச் சென்றது பரமானந்தர் வித்தியாலயம். 1985ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டம் முழுமையிலும் கலந்துகொண்ட இரண்டாம் பிரிவுப் பாடசாலைகளில் ஆங்கில வாசிப்புப் போட்டியில் முதலாமிடத்தை நான் பெற்றுக்கொண்டபோது என்னிலும் மகிழ்ச்சியடைந்தது எனது ஆசிரியர்களே. - ஏனெனில் அவர்கள் அளித்த பயிற்சி என்ற உரத்தினால் பெற்ற

www.padippakam.com

விளைவே பாடசாலைக்கும் உவகையளித்த அவ் வெற்றியாகும். அன்று ஆங்கிலப் போட்டிகளில் பங்குகொள்ளப் பொதுவாகவே எமக்கும் தயக்கம் இருக்கும். ஆயினும் அப்பயத்தினைத் தெளிவித்து ஒரு கிராமப் பாடசாலையாயினும் யாழ்.நகர் வரை சென்று ஏனைய முன்னணிப் பிரதேச பாடசாலைகளுடன் போட்டியிடும் மனவலிமையை அளித்த ஆங்கில ஆசிரியர்களான திருமதி மங்களேஸ்வரி சின்னத்துரை, திரு பத்மகாந்தன் ஆகியோர் குறிப்பிடப்படவேண்டியவர்கள்.

எனது உயர்கல்வியைக் கொழும்பு றோயல் கல்லூரியில் தொடரும் காலையில் கல்லூரி விவாத அணியின் தலைவராகவும் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் மேடைக் கூச்சமின்றி விவாதிக்கும் போதும் உரையாற்றும்போதும் என் மனதில் நன்றியுடன் நினைவிற்கு வருவது, பரமானந்தர் வித்தியாலயம் வழங்கிய பயிற்சியே!

தன் கிராமத்துப் பாலர்கள் பயனடையவென ஆசிரியப் பெருந்தகை, பண்பாளர், பெரிய உபாத்தியார் பரமானந்தர் அவர்கள் செய்தபணி குரும்பசிட்டியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா அவர்கள் 'குரும்பசிட்டியின் இலக்கியப் பாரம்பரியம்' என்ற ஆய்வுக் கட்டுரை நூலில் குரும்பசிட்டி இலக்கியப் பாரம்பரியத்தின் முதல்வராக முதற் தலைமுறையின் ஊற்றுக்கண்ணாக உயர்திரு பரமானந்தர் அவர்களையே காண்கின்றார். நான் அவரது இல்லத்தில் ஏறத்தாள ஓராண்டு காலம் தங்கியிருந்தபோது அடிக்கடி அவர் குரும்பசிட்டியின் தவப் புதல்வர்களாக வலியுறுத்திக் குறிப்பிடுபவர்கள் பொன்.பரமானந்தர், ஈழகேசரி நா.பொன்னையா, கனக.செந்திநாதன் ஆகியோராவர். இவ்வாறான ஒரு இலக்கிய மரபை உருவாக்கிக் குரும்பசிட்டி மண்ணின் 'முதுசொம்' ஆக அதனை விட்டுச் செல்ல வழிவகுத்தவராக பொன் பரமானந்தர் அவர்களையே பெரிதும் போற்றிக் கூறுவார் பேராசிரியர் சிவராஜா.

எமது கிராமம் போரினாற் சிதைந்து பொலிவற்றுப் போனாலுங்கூட இன்னும் அதன் புகழும் பெருமையும் நிலைநிற்பதில் பெரும்பங்கு பெருமைப்பட வேண்டியவர் வித்தியாலய ஸ்தாபகர் பரமானந்தர் அவர்களே. குரும்பசிட்டியில் நாம் பிறந்தது எம் பூர்வபுண்ணிய பலனே என்று நினைக்குமளவுக்கு அந்த மண் எமக்குக் கைமாறு செய்துள்ளது. இன்றுங்கூட தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருக்கும் திரு,ஆ.சிவனேசச்செல்வன் அவர்கள் என்னை எவருக்காவது அறிமுகம் செய்யும்போது முதன்மைகொடுப்பது "இவர் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்" என்பதற்கே!

இவ்விதம் அன்று மாயெழுவில் பிறந்து, அச் செம்பாட்டு மண்ணில் குரும்பைத் தேரிழுத்து விளையாடி பின் யுத்தத்தால் இடம்பெயர்ந்து நகரடைந்து கொழும்பில் பிரபல கல்லூரியொன்றில் கல்விகற்று, சட்டக் கல்லூரி சேர்ந்து, சட்டத்தரணியாக வெளியேறி, இன்று பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் என் அலுவலக மேசையில் அமர்ந்து என் கடந்தகாலத்தை அசைபோட்டுப் பார்க்கையில் என் மனக்கண்முன் மலரும் நினைவு வேறொன்றுமல்ல - "இந்தப் பயிர் இன்று தழைத்து நிற்கப் பசளையிட்டது பரமானந்தர் வித்தியாலயமல்லவா!" என்பது தான்! வாழிய எம் பரமானந்தர் வித்தியாலயம் பல்லாண்டு! வளர்க எம் பாடசாலையின் கல்விப் பணி!! ஓங்குக எம் ஸ்தாபகர் உயர்திரு பொன்.பரமானந்தர் புகழ்!!!



படிப்பகம்



# நானும் திரும்பிப் பார்க்கிறேன்

த.ஐங்கரன்
-குரும்பையூர்

என்னைப் போலவே மண்ணையும், பொன்.பரமானந்தர் வித்தியாலயத்தையும் நினைத்துக் கண்ணீர் சொரியும் கண்களை ஆற்றுப்படுத்தும் நோக்குடன் நான் பேனா எடுக்கிறேன். எம்மைப் பொறுத்தவரை நிம்மதி தேடும்போதெல்லாம் எம் மண்ணின் நினைவுகளே சாந்தி தருகின்றன.

கனவுகளை அரங்கேற்றக் களமில்லாமல் அலைகின்ற மனது இந்தக் கடதாசி தாள்களிலேயே கண்ணீர்விடுகின்றது, ஒப்பீட்டு வாழ்வின் ஒவ்வோர் அங்கமும் வேதனைகளையே விதைக்கின்றது. அதனாற்றான் நான் திரும்பிப் பார்க்கிறேன். இன்று நான் திரும்பிய பக்கம் என் பழைய பாடசாலைக்காலத்தின் அந்தப் பவ்வியமான நினைவுகளின் பக்கமே.

எமதூரின் எந்தவொரு மனிதரும் பொன்.பரமானந்தரிற் தவழாமல் இருந்திருக்க முடியாது. அவரின் அரவணைப்பே எமக்கு ஆரம்பம். அந்த வகையிலே நானும் கற்றிருக்கிறேன். அந்த நாட்கள்தான் இன்னும் தொலைந்த நாட்களாகவும் நான் அவாவுடன் தேடும் நாட்களாகவும் இருக்கின்றன. அதுதான் வாழ்க்கை என்று அப்போதே வரைவிலக்கணம் கூறியிருந்தால் நான் சந்தோசம் அடைந்திருப்பேன். ஆனால் இன்று வாழ்க்கையின் எல்லாப்பாகங்களையும் உணர்ந்து எதுவும் நிரந்தரமில்லை என்பதை அனுபவித்து நிகழ்கால நிம்மதிக்காக இறந்தகாலத்தை இழக்கின்ற துர்ப்பாக்கிய நிலையிலே துவண்டுகொண்டிருக்கின்றேன்.

எப்படியோ? இது நியதி என நினைத்தே மனதினைத் தேற்றுவோம். (என் நினைவுகளோக்குவோம்.) என் நினைவுகளைக் கவிதைகளாக்கி வார்த்தைகளால் அழுகின்றேன். தேற்றுவதற்கும் தேவைக்குமாய்.

## நானும் திரும்பிப் பார்க்கிறேன்

பொன்.பரமானந்தரில்....
நான்
பெடியள்
பெட்டைகள்
மாடியின் ஒருபகுதிதான்

பாடிப்படித்த எம் வகுப்பறை
இப்போ போல்
இன்னும்
அப்போதைய நினைவுகள்...
சின்னத்தம்பி வாத்தியார்
எம்முடைய வகுப்பு வாத்தியார்

www.padippakam.com

இன்னும்
சிவதாசன் வாத்தியார்
அய்யா வாத்தியார்
மங்களேஸ் ரீச்சர்
மணிலா ரீச்சர்
செல்லம்மா ரீச்சர்
செல்வராணி ரீச்சர்
தையல் ரீச்சர்
விமலா ரீச்சர்
யோகா ரீச்சர்
பாக்கியம் ரீச்சர்
தேவி ரீச்சர்
அன்னம்மா ரீச்சர்....

வில்லங்கமாக நினைவுபடுத்தவில்லை
எல்லாம் மனதினிலே
மானசீகமாகப் பதிந்தவைகள்

வெள்ளி காலையில்
வெளி மண்டபத்தில்
“தொல்லையிரும் பிறவி....”
என்று தொடங்கும் சிவபுராணம்

தள்ளித் தள்ளி வரிசையாக
அள்ளிக் கூப்பிய கைகள் இரண்டுடன்
கிள்ளி நுள்ளி இடையிடையே
சேட்டைகள் செய்வோம்
கள்ள
என்பது கேட்டால்
மெல்ல விளங்கும்
முடியுது புராணம்
அப்போ கொஞ்சம் அலேட் ஆகி
பக்தியாய் நிற்போம்
பள்ளிக் குறும்புகள்

அப்போ அதிபர் கனகசுந்தரம் சேர்
எப்போதும் பிரம்பு இருக்கும்
தப்புச் செய்தால் தப்ப முடியாது
எப்போதாவது வகுப்புக்கு வருவார்
வந்து பார்த்து பாடங்கள் எடுப்பார்
பயத்தால்
நாங்கள் படங்கள் எடுப்போம்
சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றேன்
சாரதா ரீச்சர் இருந்ததாலே
எங்கள் பாடல் ஒலிக்குமிடங்கள்
எப்போதுமே மாமர அடியில்
நடுவில் ரீச்சர் இருந்து பாட
நாங்கள் சுற்றி தொடர்ந்து பாட
இதயம் தொட்ட பாடல் எத்தனை
போட்டியில் வென்ற சாதனை எத்தனை

பரிசளிப்பு விழாவின் போது
பரிசுகள் பெற்றேன் மேடையில் நான்
ஒருமுறை எனக்கு நினைவிருக்கு
பிரகலாதன் நாடகம் பார்த்தேன்
நடித்தது கூட நிலக்ஷன் தான்

அடுத்தது ஒன்று அவசியம் அப்போ
ஆறுமுகம் கொண்ட பிஸ்கற் உண்டு
பெரிய வகுப்புப் பெடியள் சேர்ந்து
சிறிய அளவு தருகின்ற போது
அடிபட்டு உண்டது உண்டு

அழகாய் நாங்கள் பிஸ்கற் சிலதை
உமிழ்நீர் கொண்டு சேர்த்தொட்டி
விளையாடியது மறப்போமா?

இன்னோர் தடவை என் மூக்கு
மெல்ல தட்டி ரத்தம் வர
சாரதா ரீச்சர் சாயச் சொல்லி
மெல்ல மூக்கில் ஐஸ் வைத்து
அன்புத் தாயாய் கண் துடைத்த
அந்த நாட்கள் மறந்திடுமோ?
மங்களேஸ் ரீச்சர்
இங்கிலீஸை
படிப்பித்தாலே பசியும் வரா
என்ன அன்பாய் கற்பிப்பார்
எமக்கு அவரே அறிவுத் தாய்



படிப்பகம்

www.padippakam.com

என் அம்மா அண்ணா அனைவருக்கும்
அவரே குருவாய் இருந்தாராம்
ஐங்கரன் என்று அழைத்தென்னை
அக்கறையாகக் கற்பிப்பார்.

செல்லம்மா ரீச்சரினை
எல்லா நாளும் நினைத்திடுவேன்
நல்ல கணிதம் நான் பெறவே
நல்ல முறையில் வழங்கியவர்
பலமுறை நான் அடிவாங்கி
அழுது படித்தது அவரிடம் தான்
கணிதம் பிளஸ் கண்டிப்பு
அதனால் அடிக்கடி தண்டிப்பு

செல்வராணி ரீச்சருக்கும்
கடமை கண்ணியம் தான் தேவை
பிழைகள் ஏதும் அவர் கண்டால்
மொளியில் அடிப்பார் மட்டத்தால்
அழுதால் அவர் பொறுக்கமாட்டார்
அன்பால் பின்னர் அரவணைப்பார்

அன்னம்மா ரீச்சரும்
எனக்கு சமயபாடம் சொல்லியவர்
என்றைக்கும் சிரித்தபடி
எம்மையும் சிரிக்க வைப்பார்
தம் கல்விச் சேவையினை
தன் மனையதிலும் எனக்குத் தந்தார்

இன்னும் இன்னும் எத்தனை பேர்
சின்னத்தம்பி ஆசிரியர்
சீறிச் சினந்து பார்த்ததில்லை
தன் கல்வித் திறமையால்
எம் மனதில் நிலைத்தாரே
பத்மநாதன் ஆசிரியர்
வெத்தலை போட்டபடி தினமும்
மெத்தக் கவனமாகவே தான்
ஆங்கிலம் சொல்லித் தந்தாரே

அய்யா வாத்தியாரென்றால்
யாரும் மறவார் அவர் தோற்றம்
நல்ல வெள்ளை நாசனலுடன்
மனம் போல வெள்ளை நீறு பூசி
எல்லா நாளும் சுறுசுறுப்பாய்
சுற்றி சுற்றி வருவார்
நகைச்சுவை கலந்த ஒரு
நல்ல மனிதரவர்

சிவதாசன் ஆசிரியர்
சிலகாலம் என் வகுப்பு வாத்தியார்
சினந்து பார்த்ததில்லை
கணிதம் அவர் பாடம்
கனிவாகக் கற்பிப்பார்
சிரிப்புக் கதை சொல்லிச்
சிந்திக்க வைத்த மனிதர்

இப்படி இப்படி எனக்கு
படிப்பித்தவர் பலர்
எப்படியும் எங்கள் எல்லோரதும்
முதற்படி பொன்.பரமானந்தரே

விளையாட்டுப் போட்டியென்ன
விசேட விழாக்களென்ன
அப்பப்பா எத்தனைகள்
அருகிலேயே ஆலயங்கள்
திருவிழாக் காலங்கள்
தெருவெங்கும் பக்திமயம்
வீதிவலம் வருகின்ற இறையழகை
மதிலோரம் நின்று வணங்கிடுவோம்
கடவுளை சேரவே கற்கிறோம்
என்பதை
கருத்துடன் உணர்த்தவே
ஆலயம் அருகில்
கல்விச்சாலை அமைந்ததோ?
காலையில் மணி ஒலி
கணபதி துணையுடன்
கல்வியும் தொடங்கும்
ஒருமுறை எனக்கு நல்ல ஞாபகம்



படிப்பகம்

www.padippakam.com

நவராத்திரி நந்நாளில்
நமது சாலையின் நடு மண்டபத்தில்
சரஸ்வதி சபதம் படம் பார்த்தோம்
நந்நாள் இறுதியில் மானம்பூர்

நடுவிலே வாழை கட்டி
நாங்கள் எல்லாம் சூழ்ந்து நிற்க
குருக்கள் வந்து வாழை வெட்டி
குங்குமம் இடையில் பூசி
ஏடு தொடக்கம் எத்தனை மகிழ்ச்சி
எனக்கும் ஒருநாள் இப்படித்தானே
ஏடு தொடக்கி ஏற்றுக்கொண்டது
இப் பொன்.பரமானந்தர்
ஆம்
பாடசாலை வளவினிலே
பக்குவமாய் பார்த்தவைகள்
பசுமரத்து ஆணியாய் மனதினிலே
இறைவா

விடியலின் விலாசமென்ன?
கண்ணான எம் கல்விச்சாலை
மண்ணாகிப் போகும்போது
மனம் பொறுக்குமா?
போர்ச் சூழலால்
எம் கல்விச் சாலைகள்
காணாது போவதா?
கண்ணை மூடுறேன்
இறைவா!
உன்னை நினைக்கவே
முடியவில்லை
முன்னைய நினைவுகளே
முன்னாடி மூச்சு விடுகின்றன
பிஞ்சுக் கால்களால்
கொஞ்சி விளையாடிய மண்
எம் நெஞ்சிலே
கல்வியை வித்திட்ட மண்
இது தான் வேண்டும்

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயற்குழு

## 2000-2001

| | |
|---|---|
| தலைவர்:- | திரு.க.சிவதாசன் |
| செயலாளர்:- | திருமதி ச. மதிவேனில் |
| பொருளாளர்:- | திரு.ம.ரவீஸ்வரன் |
| உறுப்பினர்கள்:- | திருமதி:- த. ரதிமலர் |
| | திருமதி:- செ. மகேஸ்வரி |
| | திருமதி:- வே. தவமலர் |
| | திருமதி. லோ.யோகேஸ்வரி |
| | திருமதி. கா.இந்திரா |
| | திருமதி.க.ஸ்ரீபாலா |
| | திருமதி.வே.பேரின்பநாதன் |
| | திரு.கா.றூபவரன் |



படிப்பகம்

www.padippakam.com

# குரும்பசிட்டியின் வரலாற்றில் பொன். பரமானந்தர் மகாவித்தியாலயத்தின் இடம்



கலாநிதி.அம்பலவாணர் சிவராஜா,

இணைப் பேராசிரியர்,

அரசறிவியற் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

குரும்பசிட்டியின் வரலாற்றினைச் சரியாக அறிந்துகொள்ள வேண்டுமாயின் முதலில் யாழ்ப்பாணத்தின் வரலாற்றினைச் சுருக்கமாக விளங்கிக்கொள்ளுதல் அவசியமாகும். யாழ்ப்பாணத்தின் வரலாறுபற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்கள் உள்ளன. அவற்றிற் திரு.மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையினை கவனத்துட்கொண்டு பின்னர் குரும்பசிட்டியின் வரலாற்றுக்கு வரலாம்.

யாழ்ப்பாண வைபவ மாலையின்படி சாலிவாகன சகாப்தத்தில் (கி.பி 795) விஜய மகாராசனின் மரபிற்பிறந்த உக்கிரசிங்கன் என்னும் அரசன் நகுலேசர் கோ விலைத் தரிசிக்கக் கீரிமலைக்கு வந்தான். இவ்விஜயத்தின் எட்டாம் வருடத்தில் சோழ தேசாதிபதியாகிய திசையுக்கிர சோழன் மகள் தனது வியாதிக்குத் தீர்வுகாண தீர்த்தயாத்திரை செய்து இலங்கையின் வடமுனையிலே கீரிமலையில் தீர்த்தமாடியபின் அவளது குதிரைமுகம் நீங்கிய காரணத்தால் கோவிற் கடவை என்னும் குறிச்சிக்கு மாவிட்டபுரம் எனப்பெயர் சூட்டி, அவ்விடத்தில் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவிக்க ஆரம்பித்தாள். இதற்கு உதவிவேண்டுமெனத் தனது தந்தையாருக்கு வேண்டுகோள் விடுத்தாள். அதற்கிணங்கிச் சோழராசன் சிவாலயத் தலைவன் பெரியமனத்துளார் எனும் தீட்சிதரைச் சகல தளபாடங்களுடனும் அனுப்பிவைத்தார். *தீட்சிகர் அவற்றைக் கொண்டு கசாத்துறை என்னும் துறையில் வந்திறங்கினார். கந்தசாமிக்கு விக்கிரகம் வந்திறங்கிய காரணத்தால் அத்துறைக்குக் காங்கேசன்துறை என்று பெயராயிற்று.* அக்காலத்தில் சோழநாட்டிலிருந்து இரண்டு கண்ணும் குருடனாகிய கவிவீரராகவன் என்னும் யாழ்ப்பாணன் செங்கடக நகரிலிருந்து அரசாட்சிசெலுத்திய பாலசிங்க மகாராசன் பேரிற் பிரபந்தம் பாடிக்கொண்டுபோய் யாழ் வாசித்துப் பாடினான். அதைக்கேட்டு மகாசந்தோசமாய் அவற்றுக்குப் பதிலாக இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டைக் கொடுத்தான்.

யாழ்ப்பாணன் இதற்கு யாழ்ப்பாணம் என்று பெயரிட்டு இவ்விடத்தில் வந்திருந்து வடதிசையிற் சில தமிழ்க்குடிகளை அழைப்பித்துக் குடியேற்றி இவ்விடத்திலிருந்த சிங்களவர்களையும் அவர்களையும் ஆண்டு இறந்துபோனான். அக்காலத்தில் சிங்களவரும் பிறரும் இந்நாட்டை அரசாளக் கருதி தமிழ்க்குடிகளை ஒடுக்கியதால் அவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்குப் போய்விட்டார்கள்.

இந்த நிலபரத்தில் யாழ்ப்பாணம் கொஞ்சக்காலம் தளம்பிக் கொண்டிருக்கையில் சிங்களவர்களின் கலகத்துக்கு எடுபடாமல் இருந்த வேளாளன் பொன் பற்றியூர் வேளாளன்



படிப்பகம்

www.padippakam.com

பாண்டி என்னும் பிரபு மதுரைக்குப் போய் அங்கு சோழ நாட்டிலிருந்து வந்து கல்விகற்றுக் கொண்டிருந்த சிங்கையாரியன் என்னும் சூரியவம்ச இராசகுமாரனைக் கண்டு யாழ்ப்பாணத்தை அரசாட்சிசெய்ய வேண்டுமென்றுகோர அவனும் பாண்டிராசன் வழியனுப்பி வைக்க யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி நல்லூர்ப் பகுதியிலே யாசிகையைக் கட்டுவித்தான்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் புவனேகபாகுவுடன் ஆலோசித்து சிங்கையாரிய மகாராசன் தமிழ்க்குடிகளை அவ்விடம் அனுப்பிவைக்க வேண்டுமென்று தமிழ் நாட்டரசர்களுக்குத் திருமுகங்கள் எழுதி அனுப்பினான். அவ்வரசர்கள் சில குடிகளை அனுப்பிவைக்க அவர்கள் வந்துசேர்ந்தார்கள். அவர்களுள் ஐந்து குடிகளுடன் வந்த பொன் பற்றியூர் வேளாளன் பாண்டிமழவனையும் அவன் தம்பியையும் சிங்கையாரிய மகாராசன் திரு.நெல்வேலியிலே குடியிருத்தினான். காவிரியூர்ப் புரவலாதிதேவனின் மூத்த மகனாகிய நரசிங்க தேவனை மயிலிட்டியிலிருத்தினான். உண்மையில் குரும்பசிட்டியின் வரலாறு நரசிங்கதேவனோடு தான் ஆரம்பிக்கின்றது எனலாம். ஏனெனில் குரும்பசிட்டி ஊர் நீண்டகாலமாக மயிலிட்டியின் ஒரு பகுதியாகவே இருந்துவந்தது.

**1900 த்தில் குரும்பசிட்டி**

அக்காலத்திற் "குரும்பசிட்டி எப்படி இருந்தது; பல குச்சொழுங்கைகளும் வைரவர் கோவில்களும் வற்றாத பேய்க் கிணறும் அரிதான கல்வீடுகளும், குளிர்ச்சியான மண்திண்ணைகளும், கேணியும் பின்னேரச் சந்தையும், அண்ணமார் கோவில் ஆலமரமும் காளி கோவில் அரசமரமும் கொண்டதாய் இருந்தது. நாகதாளியும் கற்றாளையும் குரும்பசிட்டியின் அடையாளம். நாயுருவியும், குதிரைவாலியும், எருக்கலையும், ஆமணக்கும் ஊரை அழகூட்டின. எழுபத்தைந்துக்கு முன்பு "சின்னர்" என அழைக்கப்பட்ட பெரியார் சின்னத்தம்பி விநாயகர் கோயிலைக்கட்டுவித்தார். அதன் தெற்கேயுள்ள மடப்பள்ளியில் வேதாரணியத்திலிருந்து ஒரு குருக்கள் ஐயாவைக் கூட்டி வந்து குடியிருத்தினார். குரும்பசிட்டியில் முப்பது வருடங்களுக்கு முன்பு கூட கூட்டிறைப்பு நடைமுறையிலிருந்தது. நான்கு பேர் சேர்ந்து இறைப்பதாகும். இருவர் துலா மிதிப்பார்கள். 'ஒருவர் பட்டை பிடித்து துலாக்கொடியால் இறைப்பார்;' இன்னொருவர் தண்ணீர் கட்டுவார்."என்கிறார் .ரசிகமணி கனக செந்திநாதன்.

**பொன் பரமானந்தர் வித்தியாசாலையும் குரும்பசிட்டியின் வரலாற்றில் அதன் இடமும்**

திரு. பொன். பரமானந்தர் அவர்கள். 1900ஆம் ஆண்டு குரும்பசிட்டியில் ஒரு சைவப் பள்ளிக் கூடத்தைத் தானே கட்டுவித்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்தார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட மகாதேவ வித்தியாசாலை அக்காலத்தில் வெகு பிரசித்தி பெற்றிருந்தது. அக்காலத்தில் முதலாம் வகுப்புத் தொடக்கம் மாணவ ஆசிரியர் வகுப்புவரை பாடசாலையில் வகுப்புகள் இருந்தன. அயலூர்களிலும் மட்டுவில் போன்ற தூர இடங்களிலுமிருந்து மாணவர்கள் வந்துபடித்தனர். ஓர் உயர்தரக் கலாசாலை போன்று அது விளங்கியது.



படிப்பகம்

## III.பொதுவியல்



# யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம்

பேராசிரியர் வ.ஆறுமுகம்
வாழ்நாட் பேராசிரியர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒன்றித்து வாழும் மக்களிடையே அவர்களின் வாழ்வின் பரிணாம வளர்ச்சியில் பொதுவான நடைமுறைகளும் இயல்புகளும் காணப்படுவது இயற்கையின் நியதியாகும். கலை, கலாசாரம், சமயம், கல்வி ஆகிய வாழ்வின் துறைகளில் அம் மக்களுடைய வளர்ச்சி தமக்கெனத் தனித்துவமான அடித்தளங்களைக் கொண்டமைகின்றன. காலத்துக்கூடான வளர்ச்சியின் அந்தத் தோற்றம் பாரம்பரியம் எனப் பொலிவுபெறுகின்றது. யாழ்ப்பாணத்து மக்களுடைய வளர்ச்சி இப் பாரம்பரியங்களின் வழியில் வலுப்பெற்ற ஒன்றாகும். இத்தகைய பெருமை வாய்ந்த பாரம்பரியங்களுள் யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம் பிரத்தியேகமான குறிப்புக்குரியதாகும்.

யாழ்ப்பாணத்தின் நெடுங்கால வரலாற்றில் கல்விக்குத் தனியிடம் என்றும் நிலைத்துள்ளது. அன்றைய தமிழ்ச் சான்றோர் "கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே." என்று புகழ்வதற்கு இலக்கணமாக விளங்கும்வகையில் யாழ்ப்பாண மக்களிடையே கல்வி உருவெடுத்துக் காலத்துக்கூடாக கற்போர் - கற்பிப்போர் ஆகிய இரு சாராரிடையே நிலைபெற்றுவிளங்கிய அயராத உழைப்பும் ஆழ்ந்த அர்ப்பணிப்பும் எமது கல்விப் பாரம்பரியத்தின் சுடராகத் திகழ்ந்துள்ளன. அந்த அத்திவாரத்தில் எழுந்த யாழ்ப்பாணத்துக் கல்வி பாரம்பரியத்திற்கு நீண்ட வரலாறு உண்டு.அந்த வரலாற்றை நோக்குவதன் மூலம் அதன் அம்சங்களையும் அவற்றின் ஆளுமையினையும் கண்டுகொள்ளலாம்.

முதலில் எமது கவனத்தை ஈர்ப்பது யாழ்ப்பாணத்தின் பூர்வீக கல்விநிலமை. வரலாற்று ஆசிரியரின் கருத்துப்படி இலங்கையின் பூர்வீகக் குடிகள் இயக்கர் நாகர் என்ற இனத்தவர். இயக்கர் தென்னிலங்கையிலும் நாகர், வடஇலங்கையிலும் வாழ்ந்தனர் எனப்படுகிறது. நாகர் திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்பது தொல்லியலாளர்களின் துணிவு. அவர்களைப் பற்றிய தகவல்கள் இலக்கியங்களிலே காணப்பட்டாலும் திட்டவட்டமான சான்றுகள் கிடைக்காமை துரஷ்டமே ஆகும். எனிலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பரவிய பௌத்த இந்துமரபுகளில் இந்துமரபின் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் பரவியிருந்தது. சிங்கள மன்னர்களுடைய அரசசபைகளில் பிராமணர்களாகிய புரோகிதர்கள் விளங்கியமையும் அவர்கள் அரசர்களுக்கு ஆலோசகர்களாகவும் அரச குடும்பத்தினருக்கு ஆசான்களாகவும் செயற்பட்டமையும் ஏற்றுக் கொள்ளப்படும் செய்திகளாகும். அவ்விதம் இந்தியாவிலிருந்து வந்த இந்து மரபு வளர்த்த குரு - சிஷ்ய உறவும் தொழிற்பாடும் அதன் கல்விக் கருவூல மெனலாம்.

காலத்துக்குக் காலம் இடம்பெற்ற தென்னிந்தியப் படையெடுப்புக்கள், தனிநபர் குடியேற்றங்கள் என்பவை எல்லாம் சேர்ந்து விளங்கிய சைவ மரபிலான பின்னணியில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு அளவில் இருந்து யாழ்ப்பாண இராச்சியம் உருப்பெற்றுத் தனி அரசாக்கியது. ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்ட அம்மன்னர்கள் சைவத் தமிழ்க் கல்விக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்கினர். அவர்களுடைய ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அதில்

www.padippakam.com

சமஸ்கிருத நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படும் பணியும் இடம்பெற்றதுடன் வைத்திய சோதிட நூல்களும் தமிழில் எழுதப்பட்டன. அக்காலத்திலேயே இந்துக்கோயில்கள் மடங்களில் புராணபடன மரபுக்கான அத்திவாரக் கல்வியும் இடம்பெற்றது. மன்னர்களே பாண்டித்தியம்பெற்று நூல்களை இயற்றும் வல்லமையுடையோராகத் திகழ்ந்தனர். செகராசசேகரன், பரராஜசேகரன் என்ற இரு மன்னர்களாலும் இயற்றப்பட்ட செகராசசேகரம், பரராஜசேகரம் என்ற நூல்கள் இங்கு குறிப்பிடக்கூடியன. அக்காலத்தில் 'சரஸ்வதி மகால்' என்ற நூல் நிலையம் உருவாக்கப்பட்டு சைவ, தமிழ் நூல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன. சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றிய யாழ்ப்பாணத்து மன்னர்களுடைய செயற்பாட்டின் வழியில் யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்பம்சமான சைவத்தமிழ்க் கல்வி மரபு கால்கொண்டது. அதன் செழிப்பையும் பரப்பையும் பின்னர் நாவலர் சேவையில் நாம் காண்கின்றோம்.

யாழ்ப்பாண அரசின் ஆதரவில் வளர்ந்த சைவத்தமிழ்க் கல்விப் பாரம்பரியம் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர், அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர், பிரித்தானியர் ஆகியோரின் ஆட்சிக்காலமாகிய 450 ஆண்டு காலத்தில் பல்வகைப்பட்ட நெருக்கடிகளுக்கும் உள்ளானது. அத்தகைய பின்னணியில் சைவத்தமிழ்க் கல்வியை வளர்க்கும் நிறுவனங்களாகப் பொலிவுடன்விளங்கிய திண்ணைப் பள்ளிக்கூடங்களும் அவை தோற்றுவித்தமரபும் யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தின் இன்னோர் அம்சமெனலாம். ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் பன்முனைத் தாக்கங்களுக்குட்பட்டிருந்த சைவத்தமிழ்க் கல்விக்குக் கைகொடுத்து அம்மரபு அழிந்துவிடாமல் பாதுகாத்த பெருமை திண்ணைப் பள்ளிக்கூடங்களுக்கே உரித்து.

திண்ணைப் பள்ளிக்கூடமென்பது கல்வி போதித்த ஆசிரியரின் வீட்டின் வெளிப்புறத்தில் அமைந்திருந்த திண்ணை, அல்லது அவ்வூர்ப் பெரியவரின் வீட்டின் வெளிப்புறத்தில் அமைந்திருந்த திண்ணை அல்லது அந்த ஊர்க்கோயில் மடம் அல்லது அண்டிய மர நிழலில் அமைந்திருக்கும். அக்காலச் சமூகத்தின் தேவை, நடைமுறை என்பவற்றுக்கேற்ப அப்பள்ளிக்கூடங்களில் உயர் சாதியினரின் பிள்ளைகளே கல்வி கற்றனர். ஆசிரியர் பாய் அல்லது பலகை அல்லது மான் தோலில் திண்ணையில் இருக்க அவரைச் சுற்றி அல்லது அவருக்கு முன்பாக மாணவர்கள் நிலத்தில் இருப்பர். அக்காலக் கற்றல் - கற்பித்தல் வழக்கில் மேற்கொள்ளப்பட்ட நெட்டுரு முறை பயனளிப்பதற்கு அந்த ஒழுங்கு வாய்ப்பளித்தது.

நூல்கள் அச்சுருவில் இல்லாதிருந்த அக்காலத்தில் அருமையாக ஏட்டுச் சுவடிகள் கிடைப்பினும் ஆசிரியர் கூறுவதை மனப்பாடமாக்கி மீட்டு ஆசிரியருக்கு ஒப்புவித்து அதனடிப்படையில் கற்கும் நடைமுறையே நெட்டுரு முறையாகும். பிற்காலங்களில் இடம்பெற்ற சாதன வளர்ச்சிகள் உளவியல் நுணுக்கங்கள்



படிப்பகம்

ஆகியவற்றின் பின்னணியில் நெட்டுரு முறை உகந்ததல்ல என நிராகரிக்கப்பட்டாலும், திண்ணைப் பள்ளிக்கூட மரபில் அதன் இன்றியமையாமை மறுக்க முடியாததாகும்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்றல் பின்வரும் படிமுறைகளில் இடம்பெற்றது
1. தமிழ் நெடுங்கணக்கினை மனப்பாடஞ் செய்தல்
2. நிலத்தில் மணல் பரப்பி எழுத்துகளை எழுதிப் பழகுதல்
3. எழுத்தின் ஒலிவடிவை அறிந்து அதனை உச்சரித்து எழுதுதல்
4. மணலில் நன்கு எழுதப் பழகியபின்னர் ஏடுகளில் எழுத்தாணிகொண்டு எழுதிப் பயன்படுத்தல். எழுதிப் பழகியவன் உயர்ந்தவனாகக் கணிக்கப்பட்டான் என்பது "எழுத்தறியத்தீரும் இழிதகைமை" என்னும் பழமொழி மூலம் அறியக் கிடக்கின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒன்றாகப் பள்ளிகள் அமைந்திருந்தன. அவற்றின் முக்கிய நோக்கு தமிழ்க் கல்வி வளர்த்தலும், எழுத வாசிக்கப் பழக்குதலும், தமிழ் இலக்கிண இலக்கிய அறிவையும் இரசனையையும் ஏற்படுத்துதலும், மாணவர்களை இறைபக்தி உள்ளவர்களாக ஆக்குதலுமாக அமைந்தது. கல்வியானது மதத்துடன் இணைந்து நீதிநெறிகளைப் படித்துச் செம்மையான வாழ்க்கையை வாழச் செய்யும் நோக்கையும் கொண்டிருந்தது.செய்யுள் இலக்கியங்களை இயற்றுதல், பொருள் கூறுதல், வைத்தியம் சோதிடம் படித்தல் என்பனவும் அம்மரபில் இடம் பெற்றன.

திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியானது பெருமளவில் உயர்சாதியினருக்கு உரியதாகவே கருதப்பட்டது. அதில் தமிழ்க் கல்வி, தமிழ்ப்புலமை யாவும் முதுசொத்து, பரம்பரை என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே அடக்கப்பட்டிருந்தது. பல்வேறு அறிஞர் பெருமக்களது வரலாற்றினூடே அதை அறிய முடிகின்றது. கணிப்பீட்டில் அதுவே திண்ணைப் பள்ளிக்கூடத்தின் பலமாகவும் பலவீனமாகவும் கருதப்படுகின்றது. அக் கல்வி மரபில் மாணவன் ஆசிரியனுக்கு "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்" கல்விச் செல்வத்தைப் பெற்றுக் கொண்டான். அன்றைய சமூக அமைப்பில், கூட்டுப் பொருளாதார அடிப்படையில் ஆசிரியரின் வயல், தோட்டங்களில் மாணவன், அவனது பெற்றோர் வேலைசெய்தும், ஆசிரியருக்கு வேண்டிய தொண்டுகள் செய்து மகிழ்விப்பதும் வழக்கமாயிற்று. இவ் வழக்கு பிராமணக் கல்வி மரபின் குரு, சிஷ்ய முறையினை நினைவூட்டுவதாகும்.

யாழ்ப்பாணத்தில் மாடுகளுக்குப் பனையோலைகளைக் கிழித்து உணவாகக் கொடுப்பது வழக்கம். அன்றைய சமூக அமைப்பில் மாடுகளின் உபயோகம் பன்னெறிப்பட்டிருந்தது. ஆசிரியர்களும் தமது விவசாயம் மற்றும் தேவைகளுக்காக மாடுகளை வளர்த்தனர். அவற்றுக்கு உணவான பனையோலையைக் கிழிப்பது இரவில்/ மாலையில் நடைபெறும்போது ஆசிரியர்களைச் சுற்றி மாணவர்கள் இருந்து பனையோலையைக் கிழிப்பர். அக்தகைய சந்தர்ப்பங்களில் புராண இதிகாசங்கள் பற்றிய உரையாடல்கள் நடைபெறும். அவ்விதமான நடைமுறைகள் இராப் பள்ளிகள், நிலாப்பள்ளிகள் எனப் பெயர்பெற்றன. காலப் போக்கில் மாணவர் தொகை பெருக இந்த வகையிலான இராப் பள்ளிகள், மாலைப் பள்ளிகள், நிலாப் பள்ளிகள் என்பன வளர்ந்தன. இடையிட்ட காலப்பகுதியில் இவ்வகைகள் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தைப் பேணி நிலைபெறச் செய்தன.

www.padippakam.com

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களை வகுப்புக்களாகப் பிரிக்கும் போது தொகை அடிப்படை கருத்திற் கொள்ளப்படாது அறிவுத் தரத்திற் கேற்பப் பிரிக்கும் வழக்கம் இருந்தது. உயர் வகுப்பில் கற்கும் மாணவன் ஆசிரியருக்கு உதவியாளனாகக் கீழ் வகுப்புக்களில் கற்பிக்கும் நிலைமைகளும் காணப்பட்டன. அந்த மாணவர்கள் மாணவ உபாத்தியாயர்கள் அல்லது சட்டாம்பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டார்கள். ஆசிரியர்களைக் 'சட்டம்பியார்' என்று அழைக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் நிலவியமை ஈண்டு நினைவு கூரல் பொருத்தமாகும்.

இத்திண்ணைப் பள்ளிக்கூடங்கள் போர்த்துக்கேயர் காலத்திலிருந்து பிரித்தானியர் காலம் உட்பட யாழ்ப்பாண மக்களின் மண்ணுக்கான கல்விப் பாரம்பரியத்தை அந்நியத் தாக்குதலிலிருந்து பாதுகாத்தன. அவற்றின் செயற்பாட்டின் வழியில் தான் சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் தப்பிப் பிழைத்துப் பின்னர் செழிக்கக்கூடியதாயிருந்தது. அவை இல்லாதிருந்தால் நாவலர் பின்னர் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அடிப்படை நிலைத்திருக்குமா? என்ற வினா சிந்திக்கத் தக்கது. அம்மரபில் தோன்றிய பெரியார்கள் பலருடைய புகழ் இன்றும் நிலைத்து நிற்கிறது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இருபாலைச் சேனாதிராய முதலியார், உடுப்பிட்டி அருளம்பல முதலியார் ஆகியோர். நல்லைநகர் ஆறுமுக நாவலரும் இம்மரபினரே.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் காத்து வளர்த்த சைவத் தமிழ்க் கல்வி மரபினை நிறுவனப்படுத்தி யாழ்ப்பாணம் முழுவதும் சைவப் பள்ளிகளின் எழுச்சிக்கும் அதன் தோற்றமாகிய சைவக்கல்விப் பாரம்பரியத்தின் தோற்றத்திற்கும் ஆறுமுகநாவலரும் அவரது பரம்பரையினரும் காரணமாவர். போர்த்துக்கேயர் முதல் பிரித்தானியர் உள்ளிட்ட மேற்கத்திய ஆட்சியாளர்களின் கீழ் அவர்களுடைய மதங்களான கத்தோலிக்கமும் புரட்டஸ்தாந்தமும் பெற்ற எழுச்சி சுதேசிய மதங்களுக்கு நாடு முழுவதும் அச்சுறுத்தலாக விளங்கியது. கிறீத்தவ மிஷனரிமார்களுடைய மதப்பரப்பல் முயற்சிகளும் அதற்குத் துணைபோன அரசின் செயற்பாடுகளும். சுதேசியப் பாரம்பரியத்தைப் பாதிப்புள்ளாக்கின. மக்கள், குறிப்பாக இளந் தலைமுறையினர் தமது சொந்தப் பண்பாட்டையே மறந்து அதிலிருந்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளவர்களாக விளங்கினர். அந்த அவலநிலையைக் கண்டு அதனைப் போக்கிட வீறுகொண்டெழுந்த வேங்கையாகினார் நாவலர். சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றிய நாவலர் அவ்விரண்டையும் மீண்டும் பொலிவுறச்செய்ய முனைந்ததன் விளைவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் வடஇலங்கையில் எழுச்சிபெற்ற சைவ மறுமலர்ச்சி.


சைவத்துக்குப் புத்துயிர் கொடுக்கும் அந்த முயற்சியில் நாவலர் நான்கு முக்கிய அறைகூவல்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அவையாவன:-

1) மதமாற்றத்தைத் தடுத்தல்
2) மக்களிடையே சைவசமயக் கருத்துக்களையும் மேம்பாட்டையும் நிலை நாட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3) சைவசமய அறிவைப் பெருக்குதல்
4) சைவ மரபிலான கல்விக்கு வித்திடுதல்



படிப்பகம்

# குரும்பசிட்டிக் கிராமம்



www.padippakam.com

# பழையமாணவர் சங்கச் செயற்குழு



**முன்வரிசை. (இடமிருந்து)** திரு.சு. சிவபாதம் (உபதலைவர்), திரு.க.சிவதாசன்(தலைவர்)அதிபர் திரு.T.V.கிருஷ்ணசாமி (உபதலைவர்), திரு.சி.இரத்தினம் (செயலாளர்) **பின்வரிசை. (இடமிருந்து)** திரு.அ.யோகநாதன் (உறுப்பினர்), திரு.பொ.தங்கராசா (பொருளாளர்) திரு.பா.செந்தூரன் (உபசெயலாளர்) திரு.க.பரிபூரணாநந்தன் (உறுப்பினர்)

## கொழும்பு பிரதிநிதிகள



திரு.ம.ஸ்ரீதரன்,



திரு.க.இராமநாதன்,



திரு.ந.ஜீவகுமார் J.P

## மலர்க்குழுவினர்



திரு.ஆ.சி.நடராஜா



கலைப்பேரரசு.ஏ.ரி.பொன்னுத்துரை



திரு.ஆ.மகாதேவன்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

## IV.குரும்பசிட்டியியல்



# குரும்பசிட்டியின் வரலாற்றுப் பின்புலம்

யாழ் மாவட்டத்தில் வலிகாமம் வடக்கும் பிரதேச சபைப் பிரிவில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் குரும்பசிட்டி, சுமார் $1\frac{1}{2}$ சதுரக் கிலோமீற்றர் பரப்புடையது. வடக்கே பலாலி விமானத் தளமும், கிழக்கே வயாவிளான், தென்கிழக்கே புன்னாலைக்கட்டுவன், தெற்கே குப்பிளான், மேற்கே கட்டுவன் ஆகிய கிராமங்களும் எல்லைகளாகவுள்ளன. இப்பகுதி தொன்றுதொட்டு மயிலிட்டி தெற்கு என வழங்கப்பட்டது.

விநாயகர் ஆலயம் சார்ந்த ஒரு சிறு காணி குரும்பசிட்டி எனப்பெயர் பெற்றிருந்தது. இங்கு குறும்பர் என்று ஒரு இனத்தவர் பாளையம் அமைத்து வாழ்ந்தனர் என்றும், அதனாலேயே இப்பெயர் வந்ததென்றும் கர்ணபரம்பரைக் கதையொன்று உண்டு, *குறுப்பயிட்டி, குறும்பசிட்டி, குரும்பசிட்டி* என்று இப்பெயர் மருவிவந்ததாகவும் சொல்லப்படுகிறது. இன்று குரும்பசிட்டியிலுள்ள ஏனைய குறிச்சிப் பெயர்கள் வவுணத்தம்பை, வளப்புலம், மயிலியாகலட்டி, மாயெழு,பயிற்றிகலட்டி, சத்தியகலட்டி, தேவசூரி, கொக்கன், வள்ளுவன்காடு, பரத்தைப்புலம், வேளாண்புலம், இடையாம்புலம் போன்றனவாகும். இப்பெயர்கள் ஆரம்பகாலக்குடியிருப்பாளர்களால் வழங்கப்பட்டவை எனலாம்.

செம்மண்ணின் செழுமையும் கிணற்று நீரும் இங்கு விவசாயக்குடியிருப்புகள் தோன்றக் காரணமாயின. இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம் வரையும் ஏன் அதற்குப் பின்பும் விவசாயமே முக்கிய தொழிலாக விளங்கிவந்தது. இவ் விவசாயிகளுக்குப் 19ஆம் நூற்றாண்டுவரை கல்வியறிவு கிட்டவில்லை என்று தெரிகின்றது. குன்றுங்குழிகளும் நிரம்பிய கல் ஒழுங்கைகளும் பற்றைக் காடுகளும், மண்குடிசைகளும் கொண்ட ஒரு பின்தங்கிய கிராமமாக எமது ஊர் விளங்கிவந்தது. சமூக அமைப்பை நோக்கின் காணிகளினதும், விவசாய நிலங்களினதும் உடைமையாளர்களாக உயர்வகுப்பினர் விளங்க, அவர்களது குடிமக்களாக நிலபுலமற்ற, அடிப்படை வாழ்க்கைவசதிகளற்ற நாளாந்தக் கூலிகளாகச் சிறுபான்மை மக்கள் வாழ்ந்துவந்தனர்.

யாழ்ப்பாண அரசுக்காலத்திலிருந்து கிராமிய மட்டத்தில் நிர்வாகப்பணிகளை மேற்கொள்ள உடையார், முதலியார் போன்ற பதவிகள் இருந்து வந்தன. போத்துக்கேயர். ஒல்லாந்தர்கள் இக்கிராமிய நிர்வாக அமைப்பை ஏற்றுச் சுதேச மொழிகள் மூலம் நிர்வாகம் நடத்தினர். இந்நிர்வாகபரம்பரைகள் தொடர்ந்தன. 1796இல் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபோதும் உடையார், முதலியார் பரம்பரையினர் காணப்பட்டனர். சமூகத்தில் மேற்தட்டு வர்க்கத்தினராக வாழ்ந்த இவர்களது குடும்பஉறவுகள் பெரும்பாலும் ஏனைய கிராமங்களில் உள்ள இவ்வர்க்கங்களுடனேயே இருந்துள்ளன எனலாம். இறுக்கமான வர்ணப் பாகுபாட்டின் வெளிப்பாடு இதுவாகும்.

இம்மேற்தட்டு வர்க்கத்தினர் சைவசமயப்பற்றுமிக்கவர்களாக விளங்கினர். திண்ணைப்பள்ளிகளை அமைத்தோ அல்லது அவற்றுக்கு ஆதரவளித்தோ நிர்வாகக் கடமைகளைச் செய்யக்கூடிய அளவுக்குக் கல்வியறிவு உடையவர்களானார்கள், இவ்வாறான ஒரு முதலியார் பரம்பரை குரும்பசிட்டியிலும் காணப்பட்டுவந்துள்ளது.

www.padippakam.com

சன்மார்க்க நாடகமன்றம்
சன்மார்க்க மாதர் சபை
சன்மார்க்க மாதர் ஐக்கிய நாணய சங்கம்
இந்து வாலிபர் சங்கம் என்பனவாகும்.

1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தது. அதன் விளைவாகத் தமிழ்ப் பிரதேசம் எங்கும் அரசியல் சமூக சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றின் பிரதிபலிப்புக்கள் குரும்பசிட்டியிலும் எதிரொலித்தன. இங்கு பொதுப்பணிகளில் ஏற்பட்டுவந்த கருத்து மோதல்களுக்கு இச்சூழல் அழுத்தம்கொடுத்தது. இதனால் சுமார் 20 ஆண்டுகளாக ஒரே நிறுவனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வந்த சமூகப்பணிகள் பலமுனைப்பட்டன.

24-09-1957 இல் சன்மார்க்க கிராம முன்னேற்றச் சங்கம் அரசாங்கத் தொடர்பை நீக்கியது. அதனால் ஊர்மக்கள் வேறோர் இடத்தில் அவ்வமைப்பை ஏற்படுத்தி அச்சங்கத்துக்குரிய பணிகளை மேற்கொள்ளலாயினர். 1958 இல் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து **'உதய தாரகை மன்றம்'** என்ற அமைப்பை உருவாக்கி விளையாட்டுத் துறையை முன்னெடுத்தனர். கலை, கலாச்சாரப்பணிகளிலும் ஈடுபட்டனர். 1960 களில் **உதயதாரகை சனசமூகநிலையம்** உருவாக்கப்பட்டது. இவ்விரண்டு சங்கங்களும் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திற் செயற்பட்டுவந்தன.1965 களில் **'சன்மார்க்க இளைஞர் மன்றம்'** என்ற அமைப்பு உருவாகியது. பிள்ளையார் கோவில் மேற்கு வீதிக்கப்பால் உள்ள காணியில் தனியான ஒரு மண்டபத்தை அமைத்துச் செயற்படத் தொடங்கியது. **வளர்மதி சனசமூகநிலையமும்** உருவாக்கப்பட்டு அம்மண்டபத்திற் செயற்பட்டது. கிழக்கே அண்ணமார் கோவிற் சூழலில் **கலைவாணி மன்றம்** என்ற அமைப்புச் செயற்பட்டது.

1980 களின் ஆரம்பத்தில் கிராம முன்னேற்றச் சங்கம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கோடு கிராமத்தின் மத்தியாக அமைந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டது. 1981 இல் இந்த மண்டபத்தில் குரும்பசிட்டி **பொதுசனநூல் நிலையம்** என்ற அமைப்பு ஒரு தனியார் குழுவால் ஏற்படுத்தப்பட்டது.

1956- 1986 ஆண்டுகளுக்குட்பட்ட 30 ஆண்டுக்காலம் குரும்பசிட்டியின் சமூகப்பணிகள் உன்னத நிலையை அடைந்த காலமாகும். காரணம் மேற்கண்டவாறு தோன்றிய சமூக நிறுவனங்கள் சமூகப்பணிகளில் ஆரோக்கியமான போட்டி மனப்பாங்குடன் செயற்பட்டமையமாகும். ஒரு அமைப்புச் செய்ததைவிட மேலான பணியைச் சாதிக்க வேண்டும் என்று மறு அமைப்புச் செயற்படும். அழிவுப் போட்டிகளாக இல்லாது ஆக்கபூர்வமான சாதனைகளை அவாவும் போட்டிகளாக அவை அமைந்தன. இதனால் ஏனைய கிராமத்தவர்கள் பிரமிப்புடனும் வியப்புடனும் நோக்கும் வகையில் கலை, கலாச்சார விளையாட்டு விழாக்கள், சிரமதானப் பணிகள், பொதுத் தேவைகளை நிறைவேற்றும் பணிகள் இங்கு நிகழ்ந்து வந்தன.

வீட்டை மறந்து, குடும்ப உறவுகளைத் துறந்து, மக்கள் தத்தம் நிறுவனங்களுக்காகத் தமது மேலதிக நேரத்தைச் செலவிட்ட காலம் இதுவாகும். இந்நிலைமையால் எமதுமக்கள் பேசுவதெல்லாம் சமூகம் பற்றியதாகவே இருக்கும். சமூக மனப்பாங்குடைய சமூக சிந்தனையுடைய, பொதுச் சேவையில் நாட்டமுடைய ஒரு மக்கள் கூட்டமாகக் குரும்பசிட்டி மக்களை ஏனைய கிராமத்தவர் இனங்காண வைத்தவை இச் சிந்தனையின் பாற்பட்ட செயற்பாடுகளே ஆகும்.



படிப்பகம்

நாட்டில் அரசியற்கட்சிகள் இயங்கும் பாங்கில் சமூகப் பணிகளில் ஈடுபட்ட எமது பொதுப்பணி மன்றங்கள், கருத்துக்கணிப்புக்கு நடைபெறும் தேர்தல்கள் போலக் கிராமச் சங்கத் தேர்தல்களைச் கொள்ளலாயின- நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்ற கிராம சபைத் தேர்தலில், எந்த அமைப்பின் பக்கம் ஊர் மக்கள் நிற்கிறார்கள் என்று பரீட்சிக்கப்பட்டுவந்தது.

1960 களில் கொழும்பில் வாழ்ந்த குரும்பசிட்டி மக்கள், **குரும்பசிட்டி நலன்புரிச்சபை** என்ற அமைப்பை ஏற்படுத்தினர். கிராமத்தின் சமூக உணர்வின் வெளிப்பாடே அதுவாகும். ஆனால் கிராமத்து அரசியல் அதனைச் செயலிழக்க வைத்துவிட்டது.

1985ஆம் ஆண்டளவில் போர்ச்சூழலில் கிராமத்தில் கொள்ளைகள் களவுகள் அதிகரித்தன. எனவே அனைத்து மக்களும் ஒனறு சேர்ந்து '**விழிப்புக்குழு**' என்ற அமைப்பினை உருவாக்கி இராக்காவலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து 1986 இல் மக்கள் ஊரைவிட்டு முழுமையாகவே வெளியேறிய போது, '**பிரஜைகள் குழு**' என்ற அமைப்பின் கீழ் ஒன்றுபட்டுப் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டனர். மீளக்குடியமர்வுப் பணிகள் இவ்வமைப்பால் முன்னெடுக்கப்பட்டன.

1990 இல் இரண்டாவது இடப்பெயர்வு நிகழ்ந்து இன்று 11 ஆண்டுகள் ஆகின்றன. பொதுப் பணி மன்றங்கள் செயலிழந்துள்ளன. எனினும் தமது கட்டமைப்பைக்காப்பாற்றும் வகையில் கிராம அபிவிருத்திச் சங்கம், **சன்மார்க்கசபை வளர்மதி சனசமூக நிலையம்** என்பன சில பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சன்மார்க்க சபை இணுவிலில் நிலை கொண்டுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கமும் வளர்மதி சனசமூக நிலையமும் உரும்பிராயில் இயங்கும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் தளமாகக் கொண்டு இயங்குகின்றன.

தற்போதைய இடப் பெயர்வால் துன்புறும் முதியவர்கள், வலுவிழந்தவர்களுக்கு உதவும் வகையில் குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம் என்ற அமைப்பு 1995 இல் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

பொதுப் பணி மன்றங்களால் வளர்க்கப்பட்ட சமூக உணர்வு காரணமாக, கிராம அபிமானம் காரணமாக ஒவ்வொரு மகனும் எமது கிராமத்தை நேசிப்பவனாகக் காணப்படுகின்றான். இன்றும் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் ஊரின் செய்திகளை, பொதுப்பணி மன்றகளின் செயற்பாடுகளை ஊர் உடன்பிறப்புகளின் நிலைமைகளை அறியும் அவாவில் இருக்கின்றான். தான் கெட்டாலும் தன் ஊர்சிறக்க வேண்டும். என்று ஆசைப்படுகின்றான். பொதுப்பணி மன்றங்கள், ஊர்மீது ஏற்படுத்திய பற்றினதும் பாசத்தினதும் விளைவு இதுவன்றோ. இதன் வெளிப்பாடுகள் பலவாகும். 1999 இல் கொழும்பு வாழ் குரும்பசிட்டி மக்கள் '**குரும்பசிட்டி இடம்பெயர்ந்தோர் நலன்காக்கும் கழகம்**' என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்பட்டு வருகின்றனர். கனடா வாழ் குரும்பசிட்டி மக்கள் '**குரும்பசிட்டி நலன்புரிசபை, கனடா**' என்ற அமைப்பை ஏற்படுத்தி ஊர்பற்றிய நலன்களில் அக்கறை காட்டுகின்றனர்.

கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் ஊரிலே கலைகலாச்சார மண்டபம் ஒன்றைத் தகுந்த முறையில் நிறுவவேண்டும் எனும் நோக்கோடு, **மாமனிதர் கலைஞானி கலாலயம்** என்ற அமைப்பின் பெயரில் தனக்குச்சொந்தமான குரும்பசிட்டிக் காணி மூன்றரைப் பரப்பினை 15.05.2000 அன்று அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. திருவாளர்கள் ஆ.சி.நடராஜா, வ.கிருஷ்ணசாமி, பொ.பாலசுப்பிரமணியம், அ.யோகநாதன், க.பரிபூரணானந்தன் ஆகியோர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் இது வழங்கப்பட்டுள்ளது.

திருமதி.ஜெயநிதி ஜெயந்தன், செல்வி.சி.சோபிதா, வயலின் பயின்ற திருமதி. உமா கிருபாகரன், திருமதி. தயாபரி தர்மரத்தினம் போன்றவர்கள் குறிப்பிடக்கூடியவர்களாவர். இன்று தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் சிறந்தமுறையில் பாடும் இளம் கலைஞர்களான திரு. வி. ஜெகதீஸ்வரன், திருமதி. துளசி பிரபாகரன் ஆகியோரும் குரும்பசிட்டியைச் சேர்ந்தவர்களே. வைத்தியத்துறையில் தொழில் புரிந்தாலும் திரு.சின்னத்துரை பிரபாகரன் அவர்கள் மிருதங்கம் வாசிப்பதில் பயிற்சிபெற்று பல கச்சேரிகளில் திறமையாக வாசித்துள்ளார். அதே போன்றே வைத்தியத்துறை மாணவனாக இருந்தபோதிலும் ஆரம்பத்தில் திரு. ய. தொம்மைக்குட்டி ஆசிரியர் அவர்களிடம் வயலின் பயிற்சிபெற்றுத் தற்பொழுது புகழ்பெற்ற இந்தியக் கலைஞர் லால்குடி ஜெயராமனிடம் பயிற்சிபெறும். திரு. நடராஜா, திருமதி. சாரதாதேவி ஆகியோரின் மகன் மனோரமணன் குரும்பசிட்டி மண்ணில் தவழ்ந்தராவார்.

**கல்வி, இலக்கியம்:**
இலக்கியத்துறையிற் துறைபோன இலக்கிய விற்பன்னர்கள், எழுத்தாளர்கள் தோன்றிய வாழ்ந்த கிராமம் குரும்பசிட்டி ஆகும். இரசிகமணி கனக. செந்திநாதன், பண்டிதர். வ. நடராசா. திரு.ஏ.ரி.பொன்னுத்துரை, திரு. மு. திருநாவுக்கரசு, கவிஞர் வி. கந்தவனம், திரு. வி. எஸ். சுப்பிரமணியம், திரு. இளையதம்பி ஆசிரியர் (இதம்) இன்னும் பலர் இலக்கியத்துறை வளர்ச்சிக்குத் தம் பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். சிறந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், சிறந்த நிர்வாகிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கடமையுணர்வு கொண்ட ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் எனப் பல்வேறுதுறை சேர்ந்த கல்விமான்களையும் அம் மண் உருவாக்கியுள்ளது.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட பல்வேறுதுறை வளர்ச்சிக்கும் அவை சார்ந்த மக்களின் வளர்ச்சிக்கும் ஆரம்பத்தில் அடியெடுத்துக் கொடுத்தது குரும்பசிட்டியின் கல்விக்கூடமான பொன். பரமானந்தர் வித்தியாலயம் ஆகும். அதன் பின்னர் இம் மக்களின் ஆளுமை வளர்ச்சிக்குக் குரும்பசிட்டியில் நிலைபெற்றிருந்த பல்வேறு அமைப்புக்களும் வழிகாட்டின. குறிப்பாகச் சன்மார்க்க சபை, கிராம முன்னேற்ற சங்கம், உதயதாரகை மன்றம், வளர்மதி சனசமூக நிலையம், சன்மார்க்க இளைஞர் மன்றம் ஆகியவை குறிப்பிடக்கூடியவையாகும். ஒரு நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டிருக்கும் பொன். பரமானந்தர் வித்தியாலயம் இன்று அதன் நூற்றாண்டு விழாவைத் தன் சொந்தமண்ணிலே தன் சொந்த மைந்தர்களுடன் கொண்டாட முடியாத அவலநிலைக்கு ஆளாகியிருப்பது வேதனைதரும் விடயமாகும். இருப்பினும் இம்மண்ணிலே விளைந்த முத்துக்கள் மீண்டும் இத்தாபனம் தன் சொந்த மண்ணில் நிலைபெறுவதற்கு இவ்வேளையில் ஆக்கமும் ஊக்கமும் பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**முக்கிய குறிப்பு**

**இக்கட்டுரையில் நான் குறிப்பிட்ட தகவல்கள் பெயர்கள் யாவும் என் நினைவுக்கும் அறிவுக்கும் எட்டியவையும் என் மூதாதையரிடம் வாய்மொழி மூலமும், செவிவழியும் கேட்டுப் பெற்றவையாகும். குறிப்பிட்ட கட்டுரையில் சில பெயர்கள் தவறவிடப்பட்டுருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.**

www.padippakam.com

# நூற்றாண்டை அணி செய்த ஆன்றோர்கள் பன்னிருவர்


திரு.ந.சின்னத்தம்பி


திரு.பொன்.பரமானந்தர்


திரு.சீ.கணபதிப்பிள்ளை


ஈழகேசரி.நா.பொன்னையா


திரு.R.R.நல்லையா


இரசிகமணி.கனக.செந்திநாதன்.


பண்டிதர்.வ.நடராஜா


திரு.P.S. நடராசா


திரு.த.இராசரத்தினம்


கலாகேசரி..ஆ.தம்பித்துரை


திரு.நா.பத்மநாதன்


திரு.பொ.சிவசுப்பிரமணியம்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# திரு.ந.சின்னத்தம்பி அவர்கள்

**(சின்னார்ச் சட்டம்பியார்)**

-திரு.நா.பொன்னையா அவர்கள்

நீர்வள நிலங்களாற் சிறந்ததும், தேவாலய மடாலயங்களாற் பொலிந்ததும், அரசகேசரி, ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், குமாரசாமிப் புலவர் முதலிய புலவர் பெருமக்களின் உறைவிடமாயதுமான யாழ்ப்பாணத்தின் வடபாங்கர், திருவுங் கல்வியு முருமெனத் திகழ்தரூஉம் செந்தமிழ் வாணரும், பைந்தமிழ்க் கழகமும், பன்மரக்காவும், தண்மலர்ச்சோலையும் பாங்குடனமைந்து, பார்ப்போர் மனது பரவசம் கொள்ளும் பரமனாலயமுதற் பல்லாலயங்களும் சீர்பெறவமைந்து திகழ்வதூஉம் சீரானமைந்த ஏராளுவோரும், சிற்பர், ஓவியர், கைவினையாளர், கவின் பெறு வணிகர், அற்பக நிறைந்த அருந்தனவான்கள் பொற்புற அமைந்த நற்பெரும் பதியெனத் திகழ்வதூஉம் நன்னயம் படைத்த மின்னனையார்கள் சொன்னயம் பயிலும் மன்னிய சிறப்பின் தென்மயிலைப் பதி தொன்னெறிவழாது மன்னுக வென்றே பன்னருந் தவத்தான் சோமநாத முதலியார் வழிவரூஉ நன்னித்தம்பியும் தெய்வானையம்மையும் பன்னிய தவத்தால் துன்மதி ஆண்டு ஆவணித் திங்கள் உத்தரட்டாதியில் மன்னிய சிறப்பின் சின்னத்தம்பியார் மாண்புறவுதித்தனர்.

இவர்: மாப்பாணர், கனகர், தாமோதரம், சீனிக்குட்டியார் என்னும் நால்வரையும் சகோதரர்களாகவும், ஆசைப்பிள்ளை என்பவரைச் சகோதரியாகவும் பெற்றுள்ளார். தக்க வயதிலே கல்வி பயிற்றப்பெற்று பிறதேச சஞ்சாரியாய்ப் பல துறைகளிலு மனுபவம்பெற்று, இயற்கையறிவிற் சிறந்தவராய்ச் சிறிதுகாலம் ஓர் தமிழாசிரியராய் விளங்கினார்.

ஆண்டு இருபத்தைந்தாயதும், இவரது குலத்திற்கும் நலத்திற்கும் ஒப்பவாய்ந்த நாவற்குழி சங்கரப்பிள்ளை யென்பவரின் திருமகளார் தெய்வானைப்பிள்ளை யென்பவரை மணந்து, இல்லறம் நடத்துவான். தமது சொந்த ஊராகும் மயிலிட்டி தெற்கிலமர்ந்து வியாபாரத்துறையிற் புகுந்து பெரும்பொருள் திரட்டலாயினர்.

இவர் சமயபக்தி, தேசபக்தி, முதலியவற்றிற் சிறந்து அறநெறி வழாது ஒழுகியமையாற், கிராமவாசிகளாலும் ஏனையோராலும் நன்கு மதிக்கப்பெற்றவராய்க் கிராமவாசிகளுக்கு வேண்டிய காலங்களில் பெரும்பொருள் கொடுத்து வாங்கியும், மக்களிடையே உண்டாகும் பிணக்கு முதலியவற்றை நீதி வழுவாது நடுவுரைத்தும் கிராமத் தலைவராய் விளங்கினதுமன்றி, கிராமசங்கந் தோன்றிய காலம் முதல் சங்க அங்கத்தவராயும் விளங்கினார்.

இவர் சமயபக்தி மேலீட்டினாலே தலயாத்திரை செய்வான் விரும்பி, தமது வாழ்க்கைத் துணைவியாரையு முடன்கொண்டு சேது முதற் காசியீறாகவுள்ள பல தலங்களையும் தரிசித்த பின், இந்தியாவிலே சிறந்த தலமாகிய வேதாரணிய மென்னும்



படிப்பகம்

# நல்லையா சகோதரர்கள்

ஈழத்திலும் யாழ்ப்பாணத்திலும் எமது ஊரை முதன்முதற் பிரகாசிக்கச் செய்தவர்களில் முதல்வைத்து எண்ணத்தக்கவர்கள் நல்லையா சகோதரர்கள். அவர்களில் மூத்தவர் திரு.T.R.நல்லையா (துரைரத்தினம்) இளையவர் திரு.R.R. நல்லையா (இராசரத்தினம்) இவர்கள் பாடசாலைப் பருவத்திலேயே விளையாட்டுத்துறையிற் சாதனை படைத்தவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கல்லூரிகளுக்கிடையில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிறந்து விளங்கியது. 1898இல் அதனை முறியடித்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு வெற்றி விருதை வாங்கிக் கொடுத்தவர்கள் நல்லையா சகோதரர்கள் என அக்கல்லூரியின் பதிவேடுகள் மிகவும் புகழ்ந்திருக்கின்றன. திரு.T.R.நல்லையா விளையாட்டு வீரர்களுள் தொடர்ந்து மூன்று வருடங்கள் சாம்பியன் ஆகி வெற்றிக் கிண்ணத்தை நிரந்தரமாக மத்திய கல்லூரிக்கே கிடைக்கச் செய்திருந்தார் என்றும் தெரிகிறது.

இருவரும் நியாய துரந்தர்களாகி அதன்மூலம் பெரும்புகழீட்டினர். திரு.R.R.நல்லையா அப்பரீட்சையில் புலமைப்பரிசிலும் பெற்றிருந்தார். அக்கால யாழ்ப்பாண நீதிமன்றம் இவர்களின் ஏகபோக உரிமையாய் இருந்தது. பிரபல வழக்குகளில் எல்லாம் வெற்றிபெற்று சாதனை படைத்தனர். அரசியல் ஈடுபாடே பெரும் புகழைச் சேர்த்தது; 1921முதல் யாழ்ப்பாண நகர சபையின் உறுப்பினராகிப் பல்லாண்டுகள் தொடர்ந்திருந்து பின்னாட்களில் அதன் தலைவராகவும் விளங்கினார். அரசியல் வானில் ஒளிகாலும் நிரந்தர நட்சத்திரமாகக் காணப்பட்டார்.

நல்லையா சகோதரர்கள் பொன்.பரமானந்தரினதும் பிறப்பு, இறப்பு பதிவுகாரராக விளங்கிய மு.சின்னையா (திரு மனோரஞ்சிதம் அவர்களின் தகப்பனார்) ஆகியோர்களதும் உறவினர்கள் ஆவர். குரும்பசிட்டி மகாதேவா வித்தியா சாலையின் முகாமையாளர்களாக இருவரும் கடமையாற்றினர். கிராமத்தில் ஏற்படும் சிறு பிணக்குகளைத் தீர்த்து வைத்தனர். குரும்பசிட்டி மக்கள் எத் தேவைக்கும் அவர்களை அணுகும்போது மகிழ்ச்சியோடு உதவி வந்தனர்.

R.R.நல்லையா அவர்கள் யாழ்ப்பாண நகரசபையின் தலைவராக இருந்த போது மிகச்சிறந்த ஒரு நகரசபை மண்டபத்தை நிர்மாணித்திருந்தார். 1986இல் வெடித்த கொடிய போர்ச்சூழலால் அது முற்றாகவே தகர்க்கப்பட்டுவிட்டது.

www.padippakam.com

# இரசிகமணி கனக செந்திநாதன்

'ஈழத்து இலக்கியவானில் இணையற்ற பிரகாசத்துடன் விளங்கிய ஒரு நட்சத்திர எழுத்தாளர் திரு.கனக செந்திநாதன். ஈழநாடு, ஈழத்து எழுத்தாளர், ஈழத்துப் படைப்பாளிகள் என்று சிந்தித்துச் செயற்பட்டவர் அவர். 1916 இல் குரும்பசிட்டி கனகசபை பொன்னம்மா தம்பதிகளின் புத்திரராய் பிறந்த இவரது இயற்பெயர் திருச்செவ்வேள் என்பதாகும். தனது எழுத்துலகப் பெயராகக் கனக. செந்திநாதன் என இவர் மாற்றிக்கொண்டார். முதலில் குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலையிலும் பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் கற்றார்; 1937 - 38 இல் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்று வெளியேறினார்; பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் முதன்மையான மாணவர் என்ற பெருமைக்குரியவராகக் காணப்பட்டார்.

'கிராமச் சூழலில் பிறந்து, இளமையிற் தந்தையை இழந்து, வறுமையில் வாடிக் கடின உழைப்பில் ஆசிரியராக வந்த ஒருவர் தானுண்டு தன் குடும்பமுண்டு என்று இருப்பாரா அல்லது எவ்வித ஊதியமுமில்லாத எழுத்துத் துறைக்கு வருவாரா, இந்த இடத்திலேதான் இரசிகமணியை வாசகர்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும்.' 'எழுத்துலகில் சில காரியங்களைத் தமிழை மட்டும் கற்ற தன்னாலும் சாதிக்க முடியும் என்று துணிந்தார். அதற்காக அவர் தன் சிறிய ஊதியத்தின் பெரும் பங்கைப் புத்தகங்கள், பத்திரிகைகள், விசேட மலர்கள் என்பவற்றை வாங்குவதிற் செலவிட்டார். ஓயாது வாசித்துக் கொண்டேயிருப்பார். 'சிறுகதை, நாவல், நாடகம், விமரிசனம், கட்டுரை முதலான பல்துறை ஆற்றல்கொண்ட படைப்பாளியாக எழுச்சிகொண்டார். தன்னைப்போல் ஈழத்து எழுத்தாளர் பலரை எழுச்சிபெறவைத்தார். தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு ஈழத்து எழுத்தாளர்கள் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்லர் என்ற தன்னம்பிக்கையை ஊட்டி, அவர்களை உற்சாகப்படுத்திய பெருமைக்குரியவர். ஏராளமான நூல்களை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டார். யாழ் இலக்கிய வட்டத்தை உருவாக்கி வளர்ப்பதில் பெரும் பங்கு ஆற்றினார்.

இவர் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல சிறந்த சமூக சேவகராகவும் விளங்கினார். குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் முக்கிய பதவிகளை வகித்துப் பல சேவைகளையும் செய்துள்ளார். அம்பாள் ஆலய உற்சவகாலங்களில் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றினார். தமது இறுதிக்காலம்வரை எழுத்துலகை மறவாதிருந்தார். ஈழகேசரிப் பத்திரிகை இவரது எழுத்துலகப் பயிற்சிக்கு களமமைத்துக் கொடுத்தது. திருமகள் அழுத்தகத்தின் மூலம் வெளியிடப்பட்ட பாடநூல்கள் பலவற்றையும் எழுதினார். ஈழகேசரி நா.பொன்னையாவிடம் நீங்காத பற்றுடைய இவர் என்றும் கிராமாபிமானம் உடையவராக விளங்கினார். இரசிகமணி இருபத்தைந்து சிறுகதைகளையும் நான்கு நாவல்களையும் பன்னிரண்டு நாடகங்களையும எழுதியுள்ளார். அவற்றோடு அறிஞர்கள் பற்றிய நான்கு வரலாற்று நூல்கள், மூன்று விமர்சன நூல்கள், பல கட்டுரை நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. 'ஒரு பிடி சோறு' என்ற இவரது சிறுகதை ருஷ்யமொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. 1964இல் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் '**இரசிகமணி**' என்ற பட்டத்தையும், 1969 இல் அம்பனை கலைப் பெருமன்றம் '**இலக்கியச் செல்வர்**' என்ற பட்டத்தையும் இவருக்கு வழங்கிக் கௌரவித்தன.



படிப்பகம்

www.padippakam.com

# கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள்

'கவின்கலைக்கோர் கலாகேசரி' என்று போற்றப்பட்ட கலைஞர் ஆ.தம்பித்துரை அவர்கள் திருநெல்வேலியில் 1932ஆம் ஆண்டில் பிரபல சிற்பாசிரியர் வி.ஆறுமுகத்தின் மூத்த புதல்வராகப் பிறந்தார். தந்தையாரிடமே சிற்பத் தொழில் நுட்பங்களைக் கற்றவர். எஸ்.ஆர்.கனகசபையின் 'வின்சர் ஆட் கிளப்'பில் சித்திரம் பயின்று 1954இல் சித்திர ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார். 1955இல் மகாஜனக் கல்லூரியில் சித்திர ஆசிரியர் நியமனம் பெற்றார். காலகேசரி அவர்கள் 1955 இலிருந்து 1994இல் காலமாகும் வரை 39 ஆண்டுகள் குரும்பசிட்டி வாசியாகவே வாழ்ந்தவர்; தனது சொந்த இடமாகக் குரும்பசிட்டியைக் கருதினார்; குரும்பசிட்டியின் பொது வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டார்; குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவராகவிருந்து இலக்கிய, சமய, கலைப் பணிகளைச் செய்தார்.

1968ஆம் ஆண்டு சித்திர வித்தியாதிகாரியாக நியமனம் பெற்ற தம்பித்துரை அவர்கள் மாவட்டம் முழுவதுமே ஓவியக்கலையை முன்னெடுக்க முயன்றுழைத்தார்; இலவசமாகத் தானே கற்பித்து ஊக்குவிப்புச் செய்ததுடன் சித்திரத்தைப் பல்கலைக் கழகப் பாடநெறியாக்க வேண்டுமென்று குரல் கொடுத்து வந்தார். அது இன்று வெற்றி தந்துள்ளது. 1964இல் தனது தந்தையாரின் பெயரால் ஆறுமுகம் சிற்பாலயம் என்ற நிறுவனத்தைப் பதிவுசெய்து சிற்பக்கலையை முன்னெடுத்தார். குரும்பசிட்டி அம்மன், நந்தாவில் அம்மன், பண்ணாகம் முருகமூர்த்தி, வண்ணார்பண்ணை விசுவேச விநாயகர் - ஐயனார் ஆலயங்களின் சித்திரத்தேர்களை நிர்மாணித்தார். நந்தாவில் அம்மன் தேர் நிறுவிய புதுமையைப் பாராட்டிக் '**கலாகேசரி**' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

1970களின் ஆரம்பத்தில் 'குரும்பசிட்டி கலாகேசரி கலாலயம்' என்ற நிறுவனத்தை அமைத்து அதன்பேரில் சுதுமலை அம்மன், குப்பிளான் கற்பக விநாயகர், மாத்தளை முத்துமாரி அம்மன், தெல்லிப்பழை துர்க்கை அம்மன், புற்றளை விநாயகர், கொக்குவில் சிவசுப்பிரமணியர், கோண்டாவில் சிவபூதராயர், சுன்னாகம் சிவன், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயங்கள் முதலானவற்றில் தனித்தனி கலை அம்சங்கள் நுணுக்கங்களோடு தேர்களை நிர்மாணித்தார். இவற்றோடு மஞ்சம், சப்பரம், கேடகம், வாகனம் போன்றவற்றையும் வகைதொகையாகச் செய்து ஆலயங்களுக்கு வழங்கினார். பாடசாலையில் சிறுவர் சித்திரத்தை ஊக்குவித்ததுடன், வர்ணக் காகித ஒட்டுவேலைகள், களிமண், மணல், பசை, மரம், சுளகுச் சித்திரங்களை ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்தார். பரம்பரை சிற்ப ஓவியக் கலைஞராகத் திகழ்ந்ததால் கல்வியுலகில் தன்னிகரற்றவராக விளங்கினார்.

இவருக்கு வழங்கப்பட்ட விருதுகள் கலாகேசரி, கலாபூசணம், இராஜஸ்தபதி, இரதச் சக்கரவர்த்தி, சிற்பகலாதிலகம் போன்றனவாகும். சிற்பம், சித்திரம், சம்பந்தமாக பல நூல்களையும் எழுதியுள்ளார். இரசிகமணி கனக.செந்திநாதன் இவரைப் பற்றிக் 'கவின் கலைக்கோர் கலாகேசரி' என்னும் நூலை எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# திரு.நா.பத்மநாதன்

குரும்பசிட்டி நாகலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் புத்திரரான இவர் 1935இல் பிறந்தவர்; ஆரம்பக் கல்வியை மகாதேவா வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை மகாஜனக் கல்லூரிகளிலும் பெற்றவர்; எமது கிராமத்தில் விளையாட்டுத் துறையில் சரித்திரம் படைத்தவர்;. வாழ்நாள் முழுவதையும் விளையாட்டுத் துறைக்கே அர்ப்பணித்தவர்; ஒரு விளையாட்டு வீரனுக்குரிய உயர் பண்புகள் அனைத்தையுமே பெற்ற, அனைவராலும் விரும்பப் பெற்ற ஒரு மனித நேயனாக விளங்கினார்.

மகாஜனக் கல்லூரியில் கற்றபோது உதைபந்தாட்ட அணியில் பல்லாண்டு களாக முதன்மையான வீரர்களில் ஒருவராக விளங்கினார். கிராமத்தில் அனைத்து விளையாட்டுக்களையும் முன்னெடுத்துப் பல இளம் வீரர்களை உருவாக்கினார். 1958ஆம் ஆண்டு உதய தாரகை மன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் தலைவராக விளங்கினார். சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகக் குடாநாட்டில் வேறு எந்தக் கழகங்களும் விளையாட்டுத் துறையில் ஏற்படுத்தாத சாதனைகளை உதய தாரகை மன்றம் செய்ததென்றால் அதற்கு ஆதார சக்தியாக இருந்து வழியமைத்தவர் பத்மநாதன் எனலாம்.

தென் இந்தியா சென்று வை.எம்.சி.ஏ. நிறுவனத்தில் உடற்கல்விப் போதனா சிரியர் தகைமையைப் பெற்றுவந்து பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர் நியமனம் பெற்றார்; பதுளையில் மட்டுமல்ல மலையகம் முழுவதுமே ஒரு விளையாட்டுத் துறைத் தாரகையாக விளங்கினார். மலையகத்தில் எங்கு கேட்டாலும் பத்மநாதனைத் தெரியாத விளையாட்டுத் துறையினர் இல்லை என்றே கூறலாம். உதய தாரகை மன்றத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் அங்கு அவருக்குப் பேருதவி புரிந்தன. உதை பந்தாட்டம், கரபந்தாட்டம், கிறிகட், மெய்வல்லுநர் சுற்றுப் போட்டிகளை வருடந் தவறாது அங்கு நடத்திக் காட்டினார். பாடசாலைகளில் மட்டுமன்றி மலையகத்தில் கழகங்களை உருவாகச் செய்து அவற்றை வழி நடத்தினார். கரபந்தாட்டக் குழுவை அங்கிருந்து யாழ்ப்பாணம் கூட்டிவந்து வெற்றிகளைப் பெற்றதுடன் அவ் விளையாட்டில் யாழ்ப்பாணம் முன்னேற வேண்டிய அவசியத்தையும் உணர்த்தினார்.

அனைத்து விளையாட்டுகளிலும் திறமை பெற்றிருந்த பத்மநாதனின் தன்னலமற்ற சேவைகளைக் கண்ட கல்வித் திணைக்களம் அவரை முதலில் பண்டாரவளை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பின் தலவாக்கொல்லை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் விளையாட்டுத்துறைப் போதனாசிரியராக்கியது. சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக மலையகத்தின் விளையாட்டுத்துறையுடன் பத்மநாதன் இரண்டறக் கலந்திருந்தார். இத்துறைக்கு அங்கு உழைத்துவந்தவர்களுள் முதன்மையானவராகக் கருதப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# திரு.பொ.சிவசுப்பிரமணியம் அவர்கள்

1928 தாவடியூரிற் பிறந்து திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் பரமேஸ்வராக்கல்லூரியிலும், பயின்று, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதவியேற்ற சிவசுப்பிரமணியம் அவர்கள், 1958 ஆம் ஆண்டு குரும்பசிட்டியின் புகழ்பூத்த ஆசிரியப் பெருந்தகையாக விளங்கிய மா. சின்னப்பு அவர்களது கனிஷ்ட புதல்வி இராஜேஸ்வரியைக் கரம்பிடித்தவர்.

குரும்பசிட்டியின் மருமகனாக வந்த நாளிலிருந்து எமது ஊரவர்கள் அனை வரையுமே தனது உடன்பிறப்புக்களாகக் கொண்டு உற்றுழி உதவி உறுதுயர் துடைக்கும் உத்தமராக அன்னார் விளங்கிவந்தார்; குரும்பசிட்டியின் பொது வாழ்வில் தன்னை ஒரு தன்னிகரில்லாத் தொண்டனாக இணைத்துக்கொண்டார். இந்த வகையில் கடந்த நாற்பது ஆண்டுகளில் அவர் செய்த அரும்பணிகள் பலப்பலவாகும்.

குரும்பசிட்டி நலன்புரிசபை - கொழும்பு, குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம், குரும்பசிட்டி பிரஜைகள்குழு, குரும்பசிட்டி இடம்பெயர்ந்தோர் நலன்காப்புக்கழகம் என்பவற்றின் தலைவராக அவ்வப்போது விளங்கிய சிவா, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சேவையாற்றினார்.

1986முதல் எமது பிரதேசத்தில் உள்நாட்டு யுத்தம் கூர்மையடைந்தபோது எமது மக்கள் ஏதிலிகளாக மாறியபோது அவர்களது துயர்துடைக்க அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்தவர். அப்போது எத்தனையோ அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் ஏற்பட்டன. அந்நேரத்தில் அஞ்சி ஒதுங்காது நெஞ்சுரத்தோடு அவற்றை எதிர்கொண்டார்.

சிவாவின் பங்களிப்பு இல்லாதிருந்தால் இந்த நூற்றாண்டு மலர் வெளிவந் திருக்காது. நீங்காத நோய்வாய்ப்பட்டிருந்தாலும் இப்பணியின் மகத்துவத்தை உணர்ந்து தனது இல்லத்தையே களமாகக் கொண்டு ஊர் அபிமானிகளை அழைத்து ஆவன செய்யமுற்பட்டார். குரும்பசிட்டி இடம் பெயர்ந்தோர் நலன்காப்புக் கழகத்தின் தலைவராக இருந்து இப்பணிக்கு முதன்மைதந்து ஊக்குவித்தார்.

இலங்கை அறிவு இயக்கம், கமலாலயம், வலிவடக்கு இடம் பெயர்ந்தோர் நலன்காப்புக்கழகம் போன்றவற்றிலும் சிவா முக்கியபங்காளராக விளங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# எங்கள் மத்தியில் ஏந்தல்கள் ஐவர்.



கவிஞர் வி.கந்தவனம்



கலைப்பேரரசு.ஏ.ரி.பொன்னுத்துரை



கலைஞானி.அ.செல்வரத்தினம்



ஆவணஞானி.இரா.கனகரத்தினம்



திருமதி.ரேலங்கி செல்வராஜா



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# கவிஞர் வி.கந்தவனம் அவர்கள்

ஈழத்துத் தமிழ்கவிதையுலகில் தனக்கொரு தனியிடத்தையும், இரசிகர்கள் கூட்டத்தையும் கொண்டிருந்தவர் கவிஞர் வி.கந்தவனம் அவர்கள். நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சென்னை கிறீஸ்தவக் கல்லூரியில் கற்று பீ.ஏ பட்டதாரியானவர். இலங்கையில் கல்வி, நாடகம், ஆங்கிலம் ஆகியவற்றில் டிப்ளோமா பட்டம்பெற்றவர்.

மாத்தலை சென் தோமஸ் கல்லூரியிலும் பின் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் ஆசிரியப் பணிசெய்த கந்தவனம் அவர்கள் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் சிலகாலம் அதிபராக இருந்து பின் நைஜீரியா சென்று தற்போது கனடாவில் வசிக்கின்றார். குரும்பசிட்டியில் தனது வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொண்ட கவிஞர் அவர்கள் இங்கு வாழ்ந்த காலத்திலேயே ஒரு தனித்துவமான கவிஞராக எழுச்சிகொண்டு இக்கிராமத்துக்குப் பெரும்புகழைத் தேடித்தந்தார். அவரது சொந்த இடம் குரும்பசிட்டி என்றே பலரும் கருதியதுண்டு.

இங்கு வாழ்ந்த காலத்தில் கந்தவனம் இன்றிக் கவிஅரங்குகள் இல்லை என்று சொல்லுமளவுக்குச் செயற்பட்டு எல்லாஅரங்குகளையும் ஆக்கிரமித்தார். சிறந்த சொற்கட்டும், பொருள் பொதிந்த சந்தச் சுவையும் ஆழமான கருத்துக்களும் கொண்ட அவரது கவிதைகள் சாமானியரையும் களிப்புறவைத்தன, அறிஞர்களின் சிந்தனையைக் கிழறின. கவிதை எழுதுவதில் மட்டுமல்ல சிறுகதை, நாடகம், ஆய்வுக்கட்டுரைகள், பாடநூல்கள் எழுதுவதிலும் வல்லவராகக் காணப்பட்டார். இதுவரை 23 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

கந்தவனம் அவர்கள் கவி அரங்குகளில் மட்டுமல்ல, விவாத அரங்குகளிலும், சமயச்சொற்பொழிவுகளிலும் தனிமுத்திரைபொறித்தவர்; சிறந்த நடிகரும் ஆவர். குரும்பசிட்டியின் பொதுவாழ்வில் தன்னை இணைத்துக் கொண்ட இவர் பலவழிகளிலும் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். யாழ். இலக்கிய வட்டத்தின் தலைவராக இவர் விளங்கியபோது அவ் அமைப்பு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பச் செய்ததனை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது.

தற்போது கனடாவில் வாழும் கந்தவனம் அவர்கள் அங்கும் சளைக்காது தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டுகளை ஆற்றிவருகின்றார். தமிழ் மொழியின் செழுமைக்கும் வலிமைக்கும் பங்களிப்புச்செய்து வரும் அன்னாரது பணிகள் என்றும் நிலைக்கக் கூடியவை. அவர் எழுதிய நூல்கள் இம் மலரின் பிறிதோர் இடத்தில் காண்க.



படிப்பகம்

www.padippakam.com

# கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரை அவர்கள்

ஈழத்தமிழகத்தில் இன்று வாழும் முதுபெரும் நாடகக் கலைஞர்களுள் ஒருவர் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள். இவரது கலைச்சேவையைப் பாராட்டி 1999 இல் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் **கலாபூசணம்** விருது வழங்கிக் கௌரவித்தது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தின் நாடகத்துறை வளர்ச்சியில் இவர் இரண்டறக் கலந்துவந்துள்ளார்.

நாடகப்பிரதி எழுதுதல், நாடகங்களைத் தயாரித்தல், இயக்குதல், நடித்தல், நாடகம் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்த்துதல், கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதுதல், நவீன நாடக முறைகளை உள்வாங்குதல் நடிப்புத்துறையிற் புதிய உத்திகளை ஏற்படுத்துதல் களப்பயிற்சிகளை நடத்துதல் முதலான சகல துறைகளிலும் கலைப்பேரரசு பங்களிப்புச் செய்துவருகின்றார், பிரபலமான நடிகர்களோடு சேர்ந்து நடித்ததுமன்றி பன்னூற்றுக்கணக்கான புதிய நடிகர்களையும் உருவாக்கியுள்ளார். 1928 இல் பிறந்த இவர் மகாதேவா வித்தியாசாலை, வயாவிளான் ம.ம.வி.,திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்றவர். பாடசாலை வாழ்க்கையிலே கலையார்வம் மிக்கவராகக் காணப்பட்ட இவர் மகாதேவா வித்தியாசாலையில் 1945இல் 'அல்லி அருச்சுனா' என்ற இசை நாடகத்தில் நடித்தவர். வயாவிளான் ம.ம.வியில் 'பக்த துருவன்' பரமேஸ்வராக் கல்லூரியில் 'லோபியின் காதல்' போன்ற நாடகங்களில் நடித்திருந்தார்.

1951-55 இல் சென்னை கிறீஸ்தவக் கல்லூரியில் பீ. ஏ. பட்டப்படிப்பை மேற்கொண்டகாலத்தில் இவரது நாடகப்பயில்வு மெருகூட்டம் பெற்றது. தமிழகத்தின் தலைசிறந்த நாடகக் கலைஞர்களது ஆக்கங்களைக் கண்டு அனுபவிக்கமுடிந்தது. கிறீஸ்தவக் கல்லூரியில் 'முதலாளி தொழிலாளி', 'குவேனி','ராகி மைடியர்' போன்ற நாடகங்களதைத் தயாரித்து நடித்துப் பெரும் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டார். சன்மார்க்க சபை இவரது நாடக ஆர்வத்துக்கு ஏற்ற தளமாக அமைந்தது. 1951இல் இங்கு தனது கன்னிப்படைப்பான 'விதியின் சதி' என்ற நாடகத்தை எழுதி, தயாரித்து, நடித்து மேடையேற்றினார், பின்பு 'தாகம்' 'இருமனம்' என்பவற்றை மேடையேற்றினார். 1961 ஆம் ஆண்டில் இங்கு அரங்கேறிய 'நிறைகுடம்' நாடகம் நாட்டின் பல பகுதிகளிலும் 25 தடவைகள் மேடையேறியது. 'அண்டல் ஆறுமுகம்' 20 தடவைகள் மேடையேறியது.

தான் கற்பித்த பாடசாலைகளான நடேஸ்வராக் கல்லூரி, கல்கின்ன முஸ்லீம் மகாவித்தியாலயம், இராகலை தமிழ் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் மற்றும் மாவை முத்தமிழ் மன்றம் போன்றவற்றிலும், பல நாடகங்களைத் தயாரித்தும், களப்பயிற்சிகள் வழங்கியும் புதிய நடிகர்களை உருவாக்கியும் சென்ற இடமெல்லாம் கலை எழுச்சியை ஏற்படுத்திவந்தார். நாடகக்கலைக்கு நன் மதிப்பைப் பெற்றுக் கொடுத்தார். மரபுவழி நாடகங்களில் மட்டுமன்றி நவீன நாடகங்களிலும் மிகுந்த ஈடுபாடுகாட்டிய கலைப்பேரரசு அவர்கள் கலாநிதி மௌனகுருவின் 'சங்காரம்', திரு. தாஸீஸியசின் 'பொறுத்தது போதும்' மகாகவியின் 'கோடை' போன்ற நாடகங்களிலும் பங்குபற்றி நல்ல நடிகராகக் கணிக்கப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்கள்

ஈழத்தமிழர்களின் வரலாற்றுச் சுவடுகளைத் தேடிப்பெற்றுப் பாதுகாக்கவேண்டு மென்று தன் வாழ்நாளையே அதற்காக அர்ப்பணித்து வருபவர் திரு.அ.செல்வரத்தினம் அவர்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் காடு கரம்பையெல்லாம் அலைந்து திரிந்து பல அரும்பொருள்களைக் கண்டெடுத்துப் பாதுகாக்க முற்பட்டவர்; இப்பணிக் காகப் பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு தனது சொத்துசுகங்களை எல்லாம் முழுமையாக அர்ப்பணித்து வருபவர்.

1933 ஆம் ஆண்டில் குரும்பசிட்டி அரியகுட்டி தம்பதிகளின் மகனாகப்பிறந்த இவர் முதலில் மகாதேவா வித்தியாசாலையிலும் பின் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்றவர். 1947 இல் தமது வீட்டுவளவில் கண்டெடுத்த மூன்று பழைய நாணயங்களையும் சங்கு ஒன்றையும் யூனியன் கல்லூரியில் நடந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தியதாகவும் அதற்குக் கிடைத்த அதிபரின் பாராட்டும் பரிசாக வழங்கப்பட்ட வெள்ளிப்பதக்கமுமே இப்பணியில் தன்னை ஈடுபடத்தூண்டியதாகவும் கூறுகின்றார்.

வேறு எந்த நிறுவனமோ தனிமனிதனோ செய்யாத, செய்யத்துணியாத இவ் வேலையை, தமிழரின் வரலாற்றுப் பொக்கிஷங்களைத் தேடிப்பாதுகாக்கும் பணியைத் தள்ளாத வயதிலும் தனியே நின்று கலைஞானி செய்துவருகின்றார். பண்டைய நாணயங்கள், கலைப்பொருள்கள், தொல்பொருள்கள் பழைய ஏட்டுச்சுவடிகள் கையெழுத்துப் படிகள் (பிரதிகள்) என்பவற்றையெல்லாம் தனது ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப்பாதுகாத்து வருகின்றார்.

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் போது சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் கலைஞானியின் அரும்பொருட் கண்காட்சி அனைவரையும் வியக்கவைத்தது. இலங்கையில் வேறு எந்த நூதனசாலையிலும் இல்லாத பொருள்கள் அவரிடமிருந்தன. 1975இல் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் கண்காட்சியில் இவரது அரும் பொருள்களும் இடம்பெற்று ஊரவர்களை அதிசயிக்க வைத்தன. 1991 இல் யாழ்.பல்கலைக்கழகத்தில் இவரது மாபெரும் அரும்பொருட் கண்காட்சி தொடர்ந்து 12 நாட்கள் நடந்தது. 1992இல் நாவலர் கலாச்சார மண்டபத்திலும் 1993 இல் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திலும் 1994இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் இது காட்சிப்படுத்தப்பட்டது.

1994 இல் தமிழ்ச் சமுதாயம் எடுத்த முத்தமிழ் விழாவில் கலைஞானி அவர்கள் **'மாமனிதர்'** என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1986 இல் எமது பிரதேசத்தில் வெடித்த உள்நாட்டு யுத்தம் காரணமாகப் பலபோதும் இவரது அருட்பொருட்களில் பெரும்பகுதி அழிக்கப்பட்டும், களவாடப்பட்டும் இழக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பொருள்களைப் பேணும் வகை அறியாது பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதியிலுள்ள தனியார் வீடொன்றில் இன்று பாதுகாத்து வருகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# ஆவணஞானி இரா. கனகரத்தினம் அவர்கள்

உலகளாவிய ரீதியில் தமிழர்களது கலைகள் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படவேண்டும், அவர்கள் தம் வரலாற்றுச் செய்திகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு செயற்பட்டுவருபவர் இரா கனகரத்தினம் அவர்கள். மாணவனாய் இருந்தபோது 'தமிழர்கள் தமது வரலாற்றை ஒழுங்காகப் பதிவு செய்யாததால் வரலாறற்ற இனமாக மாறிவிட்டனர் என்று வரலாற்றாசிரியர் செய்த போதனை, தனது மனதில் ஆழப்பதிந்ததால் நிகழ்காலச் செய்திகளையாவது செவ்வனே பதிவு செய்து எதிர்கால சந்ததிக்கு வழங்கத் தன்னாலானதைச் செய்ய வேண்டும் என்ற சிந்தனையை ஏற்படுத்தியதாக இவர் கூறுகின்றார்.

தொழில் நிமித்தம் கண்டியில் வாழ்ந்துவருவதால் அங்கிருந்தே அவரது செயற்பாடுகள் நிகழ்கின்றன. 1956இல் இருந்து பத்திரிகைச் செய்திகளை வெட்டுத் துண்டுகளாகப் பெயர்த்து ஒட்டுப்புத்தகங்களாகச் சேகரிக்கத் தொடங்கினார். அவ்வாறு 45 வருடங்களாகச் சேகரித்த செய்திகளை, சேமிப்புகளை நோறாட்(Norad) அமைப்பினர் அவரது சேவையை வியந்து அன்பளிப்புச் செய்த 15லட்ச ரூபா பெறுமதியான துண்டுச் சுருள் வாசிப்பு - பிரதியாக்கற் கருவி (Micro Film Reader - Printer) மூலம் துண்டுப் சுருள்களாக இன்று பதிவுசெய்து வருகிறார். இதனால் சேகரிக்கும் செய்திகளை 100 வருடங்களுக்காவது பாதுகாத்து உலகத் தமிழ் அமைப்புகளுக்கோ பல்கலைக்கழகங்களுக்குகோ எளிதாக வழங்க முடியும்.

**உலகத் தமிழன் ஆவணக்காப்பகம்**, என்ற பெயர் தாங்கி அவர் துண்டுப்படச்சுருள் ஆக்கிய செய்திகள் 1996 ஆம் ஆண்டு கனடாவிலுள்ள குரும்பசிட்டி நலன்புரிசபையினரால் காட்சிப்படுத்தப்பட்டன. அக்கண்காட்சியின் போது '**ஆவணஞானி**' என்றபட்டம் கனகரத்தினம் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவரது தமிழ் மொழி கலை கலாச்சார, வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்தும் இம்முயற்சி தந்தை செல்வா, அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர், தனிநாயகம் அடிகளார் போன்றோரால் விதந்து பாராட்டப்பட்டது.

1974 இல் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் போது யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இவர் நடத்திய கண்காட்சி அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. அந்த உந்துதலால் '**உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்**' என்ற அமைப்பை ஏற்படுத்தஉழைத்து அதன்மூலம் உலகநாடுகள் பலவற்றில் வாழும் தமிழர் தம் தனித்துவ அடையாளங்கள் இழக்கப்படுவதைக் கவனயீர்ப்புச் செய்தார். இப்பணிக்கென 'உலகத்தமிழன் குரல்' என்ற மாதப்பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் அனுப்பிவந்தார். அவரது அரும்பணியைப் பாராட்டி மொறிசியஸ், மலேசியா, சிங்கப்பூர் முதலான நாட்டினர் அழைத்துக் கௌரவித்துள்ளனர். சுமார் நூறு வருடங்கள் பழைமையான பத்திரிகைகள், சஞ்சிகைகளை, செய்திக் குறிப்புகளைச் செவ்வனெ தரம்பிரித்துக் கத்தரித்து ஒட்டி வரலாற்றுப் பதிவுகளைச் சுமந்து நிற்கும் இவர் பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் 'குரும்பசிட்டி இரா. கனகரத்தினம்' என்றே தன்னை அறிமுகம் செய்கின்றார், பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.



படிப்பகம்

# 'நாட்டியதாரகை' திருமதி.செ.ரேலங்கி அவர்கள்

கலைஞர். கே.கே.வி. செல்லையா அவர்களின் மகளான ரேலங்கி அவர்கள் குரும்பசிட்டியின் முதல் நடன தாரகை என்ற பெருமைக்குரியவர். புகழ்பூத்த நடனஆசான்களான கொக்குவில் கலாபவனம் ஏரம்பு சுப்பையா அவர்களிடத்தும் கலைஞர் வேல்ஆனந்தன் இடத்தும் நடனம் பயின்றவர்; மேலும் தனது புலமையை வளர்த்துக்கொள்ளத் தமிழகம் சென்று அடையாறு 'கலாசேத்திராவில் சிலகாலம் நடனம் பயின்றார்.

தந்தையார் தயாரித்த **வாக்குறுதி** என்னும் நாடகத்தில் தனது 13வது வயதில் நடனமாடி நடித்ததிறமையை வியந்து கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் **'நாட்டிய தாரகை'** என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. வேம்படி மகளிர் கல்லூரியிற் கல்வி கற்றபோது இவரது நடனப்பயில்பு மேற்கிளர்ந்து இவரை நடன ஆசிரியை ஆக்கியது. நடன ஆசிரியருக்கான நான்கு வருடப்பயிற்சி பெற்று **'டிப்ளோமா'**பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

ரேலங்கி அவர்கள் கொக்குவில் கலைக்கோயில் அமர கலா நாட்டியலயம் என்ற அமைப்பை உருவாக்கியதுடன் அதன் கிளைகளை குரும்பசிட்டி, மாவிட்டபுரம், கரைநகர், சாவகச்சேரி, மீசாலை ஆகிய இடங்களில் அமைத்துப் பலரை நாட்டிய மணிகளாக உருவாக்கினார். கொக்குவில் நாமகள் வித்தியாசாலை, ராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடன அசிரியராகப் பணிபுரிந்தபோது மாவட்டமட்டம் தேசிய மட்டத்தில் பல பிள்ளைகளைப் பங்கு பற்றச் செய்து பலமுறையும் பரிசில்கள் பெறச் செய்தார்.

1972இல் கொழும்பில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாடு நடைபெற்றபோது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உள்படப் பன்நாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் நடனமாடிப் பெரும் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். **'தெய்வம் தந்த வீடு** என்னும் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்தபெருமையும் இவருக்கு உண்டு.

நாட்டியப் பேரொளியாகத் துலங்கிய ரேலங்கி அவர்கள் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திலும் ரூபாவாகினி தொலைக்காட்சி சேவையிலும் சிறந்த அறிவிப்பாளராக விளங்குகின்றார்.



# எழுத்துலகில் எம்மவர்கள்



பொன் பரமானந்தர் அவர்கள் குரும்பசிட்டிக்கு ஆற்றிய அளப்பரிய பணி ஒரு கல்விப்பரம்பரையை உருவாக்கியமையாகும். மேற்தட்டு வர்க்கத்தினர் ஒரு சிலரின் சொத்தாகவிருந்த கல்வியை மக்கள் மயப்படுத்தினார். இதனால் தேசியப் பற்றும் விடுதலைப்விருப்பும் கிராமிய உணர்வும் கொண்ட மக்கள் இங்கு உருவாகினர்; பலர் கலை இலக்கிய ஆர்வலர்களாக மேற்கிளர்ந்தனர்,

ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றிய பணியினைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். தேசிய சோக்குடைய சமூக சீர்திருத்தவாதியாகவிருந்து அவர் செயற்பட்டார் பத்திரிகைகள், பாடநூல்கள், நூல்களை வெளியீடு செய்து எழுத்துலகை புதிய பரிமாணங்களுக்கு இட்டுச்சென்றார். குரும்பசிட்டியின் ஆரம்ப காலச் எழுத்தாளர்கள் அவரின் பண்ணையில் உதயமானவர் என்றால் மிகையாகாது. இந்தச்சூழல் குரும்பசிட்டியின் எழுத்துத்துறைக்குப் பெரும் உந்துசக்தியாகியது.

மூத்த எழுத்தாளர்களாக இங்கு விளங்கிய இரசிகமணி கனக.செந்திநாதன், பண்டிதர்.வ. நடராஜா, கவிமணி.வி.கந்தவனம், கலைப்பேரரசு.A.T. பொன்னுத்துரை போன்றோர் ஈழத்திற் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் ஆவர். அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பலர் ஆக்க இலக்கிய கர்த்தாக்களாக, பாடநூலாசிரியர்களாக இங்கு காணப்பட்டனர். குரும்பசிட்டியின் எழுத்தாளர்களது வெளியீடுகள்

| பத்திரிகைகள் | வெளியீட்டாளர்கள் |
|---|---|
| ஈழகேசரி | திரு.நா.பொன்னையா |
| வெற்றிமணி | திரு.மு.க.சுப்பிரமணியம் |
| உலகத்தமிழன்குரல் | திரு.இரா.கனகரத்தினம் |

சன்மார்க்க சபையின் வெளியீடுகள் :- அப்பர் புகழ்மாலை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, சிவபுராணம், தோத்திரத்திரட்டு, பாராயணத் தோத்திரத்திரட்டு, கோளாறுபதிகம், திருமுருகாற்றுப்படை, சைவசமயபோதினி (2முதல் 6ம் வகுப்புவரை) சைவநற்சிந்தனைகள்,

**இரசிகமணி கனகசெந்திநாதன்:-**

வெண்சங்கு, ஒருபிடிசோறு, விதியின்கை, கவிதைவானில் ஓர் வளர்பிறை, மூன்றாவது கண், ஈழத்துக்கவிமலர்கள்,நாவலர் அறிவுரைகள், ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி, கவின்கலைக்கோர் கலாசேகரி, என்கதை, ஈழம் தந்த கேசரி, ஈழத்து இலக்கிய வளர்ச்சி,

**பண்டிதர் வ.நடராஜா** :- சகுந்தலை சரிதை, மணிமேகலை, இலக்கியமஞ்சரி, இறைவன் ஒருவர்,

www.padippakam.com

**கலாகேசரி ஆ.தம்பித்துரை**:- சிறுவர் சித்திரம், ஓவியக்கலை, யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள்.

**கவிஞர் வி.கந்தவனம் :-** இலக்கிய உலகம், ஏனிந்தப் பெருமூச்சு , கீரிமலையினிலே , பாடுமனமே, கவியரங்கிற் கந்தவனம், ஓன்றரை ரூபா, நுணாவிலூர்ப் பூச்சரம், கூனியின் சாதனை, முறிகண்டிப்பத்து, குரும்பசிட்டி விநாயகர்பத்து, தங்கம்மா நான்மணிமாலை, ஆசிரியத் தொழில்,

**கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை** :- இறுதிப்பரிசு, நாடகம், கூப்பிய கரங்கள், பக்தி வெள்ளம், அரங்கு கண்ட துணைவேந்தர், கலையுலகிற் கால் நூற்றாண்டு, அரங்கக் கலைஞர் ஐவர், இவர் எழுதிய (தயாரித்து நடித்த) நாடகங்கள் 1.விதியின்சதி, 2.முதலாளி தொழிலாளி, 3.குவேனி, 4.ராகி மை டியர், 5.இருமனம், 6.பகையும் பாசமும்7.நிறைகுடம், 8.பண்பின் சிகரம் 9.பாசக்குரல் 10. செங்கோல் சரிந்தது 11.அண்டல் ஆறுமுகம் 12. பிற்பகலிலே 13.இறுதிப்பரிசு 14. நாடகம் 15. பஞ்சபூதங்கள் 16.காதல் கை நட்டம் 17.ஆயிரத்தில் ஒருவர் 18.தாளக்காவடி இவற்றைவிடப் பல வானொலி நாடகங்களையும் எழுதி நடித்துள்ளார். காதல் கை நட்டம், வருஷம் பிறந்து முன்னம் முன்னம், பஞ்சபூதங்கள், தாளக்காவடி என்பன இவ்வாறானவை. தாளக் காவடி வானொலி நாடகப்போட்டியில் முதற்பரிசு பெற்றது. அது மேடை நாடகமாக்கப்பட்டு நடிக்கப்பட்டபோது பெரும் பாராட்டுதல்களைப் பெற்றது.

**திரு.இரா.கனகரத்தினம்** :- சீசரின் தியாகம், அலைகடலுக்கப்பால் தமிழர், உலகத்தமிழர்,ஐக்கியத்தை நோக்கி, றியூனியன் தீவில் எங்கள் தமிழர், மொறூஸியஸ் தீவில் எங்கள் தமிழர்,

**திரு.வேல்.அமுதன்** :- அறுவடை, வைகறை , மாரீசம்,(சாகித்திய மண்டலப்பரிசு) வாழும் வழி,

**திரு.மு.திருநாவுக்கரசு** :- இவர்களும் மனிதர்கள் (சாகித்திய மண்டலப்பரிசு)இவர் எழுதியநாடகங்கள், பொறுத்தது போதும், இலச்சிய வேட்கை, இதயஒளி, குடும்பம் ஒருகோயில், காதலும் மோதலும், கௌரவம், நெஞ்சு பொறுக்குதில்லை, அன்பின் எல்லை, என்னதான் முடிவு, அடிபட்ட புலிகள்.

**திரு.நிலக்ஷன் சுவர்ணராஜா** :- ஏழுகுரல்கள், பத்திரிகைக்கான கட்டுரைகள் இவர்களைவிட பத்திரிகைகள் சஞ்சிகைகளில் திரு.வி.எஸ்.சுப்பிரமணியம் சிறுகதைகள் நாவல், நாடகங்களையும் திரு.எம்.கே.எஸ்.சிவகுமார் சிறுகதை குருநாவல்களையும் திரு.ஆ.மகாதேவன் கவிதைகளையும் எழுதிவந்துள்ளனர்.

| **பாடநூல்கள் எழுதியோர்** | **துறை** |
|---|---|
| திரு.கனக. செந்திநாதன் | தமிழ் |
| பண்டிதர் வ.நடராஜா | தமிழ் |
| கவிஞர். வி. கந்தவனம் | புவியியல் |
| திரு.V.S.சுப்பிரமணியம் | கணிதம் |
| திரு.ஆ.சி.நடராஜா | சமூகக்கல்வி |
| திரு.ஆ.மகாதேவன் | இரசாயனம். |



படிப்பகம்

www.padippakam.com

# அருள் சுரக்கும் ஆலயங்கள்

குரும்பசிட்டி தனிச் சைவக் கிராமமாக விளங்கிவந்தது. இங்கு சித்தி விநாயகர் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகிய இரு பேராலயங்களும் பத்துக்கு மேற்பட்ட சிறிய ஆலயங்களும் இருந்து வந்தன. சிறிய ஆலயங்களில் ஒன்றிரண்டு தவிர ஏனையவை வைரவர் ஆலயங்கள். பேராலயங்கள் இரண்டும் ஒரே வட்டகையில் அமைந்ததுடன் காளியம்மன் இரு வைரவர் ஆலயங்கள் என்பனவும் சேர்ந்து அமைந்து ஓர் ஆலயச் சூழலாக விளங்கின. பொன். பரமானந்தர் அவர்கள் அந்த ஆலயச் சூழலிற் பாடசாலையை நடத்திவந்தார். மேற்படி ஆலயச் சூழலில் பாடசாலையை அவர் அமைத்துக் கொண்டமை கவனிக்கத்தக்கது. ஆலயங்களில் புராணப்படிப்புக்களையும் அவர் மேற்கொண்டு வந்தார். மாணவர்கள் பலரைத்தூய சமய நெறியில் வளர்த்துவந்தார். அவர்களும் புராணப்படிப்பு, சமயச்சொற்பொழிவு, கதாப்பிரசங்கங்களை ஆலயங்களில்நிகழ்த்தி வந்தனர். திருவாளர்கள் சீ.கணபதிப்பிள்ளை, மு.இராமலிங்கம், கனக. செந்திநாதன், போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். காலத்துக்குக் காலம் ஆலயங்களில் மட்டுமல்ல இங்குள்ள பொது நிறுவனங்களிலும் உள்நாட்டு வெளிநாட்டுச் சமயப் பெரியார்கள் வரவழைக்கப்பட்டுச் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு வந்தன.

அம்பாள் ஆலயத்தில் மார்கழி மகோற்சவ காலத்தில் பத்து நாட்களும் தொடர்ச்சியாகச் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து சன்மார்க்கசபை சிறப்பாக நடாத்திவந்தது. சமயப் பிரசுரங்களையும் இச்சபையினரும் தனிப்பட்டோரும் வெளியிட்டு வழங்கினர். இரு பேராலயங்களிலும் பூசகர்கள் பக்திசிரத்தையோடு அதிகாலை முதற் செயற்பட்டு வந்தனர். இவ்வாலயங்களின் அதிகாலை மணியோசைகள் ஊர்முழுவதும் வியாபித்து மக்களைத் துயிலெழுப்பும். கண் விழிக்கும் போதே கடவுள் நினைவோடெழுந்து தத்தம் கடமைகளைத் தொடங்குவது நாளாந்த நிகழ்வாகும். அயர்ந்து தூங்கியோர் விரைந்து எழுந்ததும் 'அம்பாள் ஆலயமணி கேட்டதா?' என்றே முதலில் வினவுவர். தினமும் நிகழும் மூன்று நேரப் பூசைகளுக்கும் செல்லும் பக்தர்கள் பலர் இருந்தனர். வருடாந்த மகோற்சவ காலங்களில் ஊரே திரண்டுவிடும். வைகாசி விசாகத் திருநாளில் பிள்ளையார் ஆலயத்திலும் மார்கழித் திருவாதிரை நாளில் அம்பாள் ஆலயத்திலும் மகோற்சவம் நிறைவெய்தும். அம்பாள் ஆலய மகோற்சவ காலத்தில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எமது மக்கள் தவறாது வந்து கூடுவர். எமது மக்களைவிட இன்னும் அதிகமாக அயற்கிராம மக்களும் வந்து கூடுவர். சித்திரத் தேரில் அம்பாள் பவனிவரும் திருக்கோலக் காட்சியைக் கண்டுகளிக்கும் திருநாளில் பலநூறு மக்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் காட்சி பக்திபூர்வமாக இருக்கும் கடந்த நூற்றாண்டு ஆரம்பத்தின் முன் பின்னாக சின்னச் சட்டம்பியார் என ஊர்மக்களால் அழைக்கப்பட்ட திரு.ந.சின்னத்தம்பி அவர்கள் பிள்ளையார் ஆலயத்தை இன்றுள்ளவாறு நிறுவினார் எனப்படுகின்றது. இந்திய சிற்பிகளை அழைத்து அதனைச் செய்ததுடன் மூலவிக்கிரகத்தையும் இந்தியாவிலிருந்தே பெற்றிருந்தார் எனப்படுகின்றது. அம்பாள் ஆலயத்தின் தோற்றம் சுமார் 150, 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனப்படுகின்றது. அது தோன்றியமை பற்றிய ஐதீகக்கதை ஒன்று உண்டு. மன்னாருக்குச் சென்று நெற்செய்கையில் ஈடுபட்ட குப்பிளான் மக்களால் மூலவிக்கிரகம் அங்கிருந்து கொண்டுவரப்பட்டது எனப்படுகின்றது. மன்னாரில் விக்கிரகம் நிலத்தில் புதைத்திருந்ததென்றும், அப்படியல்ல ஒரு மரப்பொந்தில் வேற்று மதத்தினருக்கு அஞ்சி மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பெறப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டதென்றும் கூறப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# வளம் பெருக்கிய வணிகச் செல்வர்கள்



எமது கிராமம் விவசாய வளம் மிக்க செம்மண் பூமியே ஆயினும் கடந்த நூற்றாண்டை ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்ற பொழுது வணிகக் குழுமத்தினரின் வருவாயே கிராமத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கினை வகித்தது என்று தெரிகிறது. கடந்த நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலிருந்தே குடாநாட்டைவிட்டு வெளியே சென்று நாட்டின் பல்வேறு இடங்களிலும் எமது மக்கள் வர்த்தக நிலையங்களை ஏற்படுத்தினர்.

1912இல் கெக்கிராவையில் திரு.பூ.சுப்பிரமணியம், சகோதரர் பூ.நாகமுத்து அவர்களுடன் நிறுவிய 'சுப்பிரமணிய மஹால்' பின்பு திருவாளர்கள் பூ.சு.நடராசா, நா.சிவப்பிரகாசம் பூ.வே.கந்தையா ஆகியோரால் நடாத்தப்பட்டு வந்தது. அதே நகரில் திரு.ஆ.சோமசுந்தரம் ஆரம்பித்த சோமசுந்தரம் அன் கொம்பனி பின்பு திருவாளர்கள் மு.குணரத்தினம் மு.சிங்கராசா, ஆ.இளையதம்பி, நா.சின்னத்தம்பி, இ,சிவமூர்த்தி ஆகியோரால் நடத்தப்பட்டது. வவுனியாவிலும் இக் கம்பனியின் கிளை செயற்பட்டது. கெக்கிராவையில் திரு.ச.செல்லத்துரை - செல்வம் ஸ்ரோர்ஸ், திரு.எஸ்.இராசரத்தினம்- இராசா ஸ்ரோர்ஸ் என்னும் நிறுவனங்களை முறையே சில காலம் நடத்திவந்தனர். களுத்துறையில் திரு.த.வைத்திலிங்கம் பின்பு அவரது மகன் திரு.வை.கதிர் காமத்தம்பி, திருவாளர்கள் ஆ.சுப்பிரமணியம், செ.செல்லையா, நா.பொன்னையா என்போரும் வட்டக்கொடையில் திருவாளர்கள் க.அருணாசலம், அ.வைரமுத்து, க.இளையதம்பி, தா.கந்தையா என்போரும் தலவாக்கொல்லையில் திரு.இ.குணரத் தினமும் வர்த்தக நிலையங்களை வைத்திருந்தனர்.

பூண்டுலோயாவில் திருவாளர்கள் பொ.வைத்திலிங்கம் பூ.துரையப்பா, வ.சிவப் பிரகாசம், ச.குமாரசாமி, ச.சச்சிதானந்தம் என்போர் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். நீர்கொழும்பில் திருவாளர்கள் க.சண்முகநாதன் க.விசுவநாதன், த.செல்லத்துரை, இ.இராசரத்தினம் ஆகியோரும் கொழும்பில் திரு.அ.அம்பலவாணர் அவர்களும் வவுனியாவில் திரு.தா.இராசேந்திரம் ம.கதாகரன் என்போரும் பள்ளப்பளையில் திரு.வ.பாலசுந்தரமும் ஏறாவூரில் திரு.செ.மனோகரனும் பிரபல வர்த்தகர்களாக விளங்கினர். தாம் சென்றடைந்த இடங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளாது கிராம அபி மானத்துடன் செயற்பட்ட இவ் வர்த்தகப் பிரமுகர்கள் ஊரின் பொதுவாழ்விலும் அக்கறை செலுத்திவந்தனர். சுமார் 50, 60 ஆண்டு காலம் குரும்பசிட்டியின் பொருளாதாரம் மேலோங்க இந்த வர்த்தகர்கள் பெரிதும் காரணமாயினர். கிராமத்தைச் சேர்ந்த பலருக்கும் தமது நிலையங்களில் வேலைவாய்ப்பும் வழங்கினர். 1958, 1977, 1980, 1983ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது இவ்வர்த்தக நிலையங்கள் பேரழிவுக்கு உட்பட்டன. எரியூட்டப்பட்டும் சூறையாடப் பட்டும் முற்றாகவே அழிவடைந்தன. இதனால் ஓர் இரு நிறுவனங்கள் தவிர ஏனையவை முற்றாகவே கைவிடப்பட்டுவிட்டன. இந்த வகையில் 1975இன் பின் கிராமம் பாரிய பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்தது.

இன்று குடாநாட்டுக்கு வெளியே வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர்

| | | |
|---|---|---|
| கொழும்பு | திரு.த.ஜெயசுப்பிரமணியம் -கருமாரி ஸ்ரோர்ஸ் , திரு.வ.சிவப்பிரகாசம் | |
| வவுனியா | திரு.சி.கௌரிபாலன், திரு.பா.பகீரதன் K.T.R.M.Compuler Centre | |
| | திரு.செ.விஜயகுமார் - சுகந்தனஸ் ஸ்ரோர்ஸ், திரு.கி.விமலராஜா | |
| தர்மபுரம் | திரு.கி.சத்தியநாதன் | - நியூ அன்னை ஸ்ரோர்ஸ் |
| | திரு.அ.ஈஸ்வரபாலன் | - செல்வம் களஞ்சியம் |
| | திரு.து.இராசரத்தினம் | - தேவி ஸ்ரோர்ஸ் |



படிப்பகம்

# நலிவுற்றோர் நலனோம்பு நிலையம்

1996ம் ஆண்டில் இந்நிலையம் உருவாக்கப்பட்டது. திரு.T.V.கிருஷ்ணசாமி தலைமையில் 11பேர் கொண்ட இயக்குநர் சபை இதனைச் செயற்படுத்துகின்றது. இதன் நோக்கங்கள் நலிவுற்றவர்களென வரையறுக்கப்படும் ஆதரவற்ற முதியவர்கள், அனாதைகள், விதவைகள், ஊனமுற்றவர்கள், உடல், உளத் தாக்குதல்களுக்கு உட்பட்டவர்கள் ஆகியோரின் உடல் உள ரீதியாகச் சமூகத்தில் ஏனைய உறுப்பினர்களுக்குச் சமானமான நிலைக்கு உயர்த்துவதற்குப் பாடுபடுதல். நலிவுற்றோர் பால் மனித நேயத்தை வளர்ப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றனவாகும்.

**இவ்வாறாக உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

- முதியோர் பராமரிப்பு நலன்பேணல்
- சுயதொழில் ஊக்குவிப்பு
- கல்வி ஊக்குவிப்புக்கள்
- மருத்துவ சுகாதார சேவைகள்
- பயனுறு கருத்தரங்குகள்
- ஆலோசனை வழிகாட்டற் சேவைகள்
- ஆதரவற்றவர்களது அந்திமகால சேவைகள்
- ஏனைய கிராமப் பொது நல அமைப்புக்களுடன் பரஸ்பர ஒத்துழைப்புக்கள் முதலானவையாகும்.

# குரும்பசிட்டி நலன்புரிசபை - கனடா

ஆகஸ்ட் 7 ஆம் திகதி 1993ஆம் ஆண்டு கிறீன் கபின் உணவுச் சாலையில் திரு. வி. கந்தவனம் தலைமையில் இச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பொழுது ஏகோபித்த வரவேற்புக் கிடைத்தது. ஈழத்தில் அல்லற்படும் நம்மவருக்காக, அவர்களுடன் பலதடவைகள் தொடர்பு கொண்டு, நிதி சேகரித்து அங்குள்ள நட்பு மன்றங்களுக்கு அனுப்பட்டது. 1996ஆம் ஆண்டு நவெம்பர் 2 ஆம் 3ஆம் திகதி ஆகிய இரண்டு நாட்கள் குரும்பசிட்டி இரா.கனகரத்தினதும், திருமதி பவளராணியினதும் 40 வருட உழைப்பின் வரலாற்றுச் சேகரிப்புகளைக் கௌரவிக்கும்பொருட்டு இலவசமாக மாபெரும் உலகத் தமிழரின் ஆவணக்காட்சியும் பாராட்டு விழாவும் வேபன் கல்லூரியில் கோலாகலமாக நடத்தியதுடன் அவர்களுக்கு (ஆவணி ஞானி) எனும் பட்டம் வழங்கியும் கௌரவித்தது. உள்ளாட்டு யுத்தத்தில் இன்னுயிரை இழந்த எமது கிராமத்து இளைஞர்களை நினைவு கூரும் முகமாக செஞ்சோலை நிறுவனத்துக்கு நிதியுதவி செய்யப்பட்டது. புதிய நிர்வாகசபை 1997ஆம் ஆண்டு 3ஆம் திகதி ஐ. ஜெயதீஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து இன்றுவரை இயங்கிவருகிறது.

ஜேர்மனியிலிருந்து வருகைதந்த வெற்றிமணி ஆசிரியரும் பிரபல சிற்ப, ஓவியக் கலைஞருமான திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களைக் கௌரவிப்பதற்காக பெப்பிரவரி 14-1999ல் பாராட்டுக்கூட்டமும் இராப்போசன விருந்தும் நடத்தியது. எமது சங்கம் ஒரு இலாபநோக்கற்ற கலாச்சார நிறுவனமாக யூன் 4, 1999ல் பதிவு செய்யப்பட்டுள்ளது தற்பொழுது கலைவிழா நடத்தியதுடன் நின்றுவிடாது ஓர் மலரும் வெளியிடப் படுகின்றது. மேலும் 1993 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் குரும்பசிட்டி மக்களின் ஒன்றுகூடல் ஒழுங்குசெய்யப்பட்டு சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடாத்திப் பரிசில்களும் வழங்கி ஊக்குவித்துவருகிறது.

www.padippakam.com

# வற்றாத நீர்ச்சுனை

திரு.க.நடனசபாபதி

(ஓய்வுபெற்ற நிலநீர் ஆய்வாளர், நீர்ப்பாசனத்திணைக்களம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜீவ நதிகள் எதுவுமில்லை. தேவைகளுக்கு வேண்டிய நீரைத் தருவது நில நீரே. இதனை நாம் கிணறுகள் வாயிலாகவே பெறுகின்றோம். பெய்கின்ற மழைநீர் உட்கசிகின்றதன் காரணமாக நிலவடிநீர் பெறப்படுகின்றது. மழைநீர் வளியூடாகப் பெய்யும்போது காபனீரொக்சைட்டுடன் கலக்கிறது. இதன் காரணமாக மழைநீர் காபோனிக் அமிலமாகிறது. யாழ்ப்பாணக்குடாநாடு மயோசின் காலப் பாறைகளாலானது. மயோசின் சுண்ணப் பாறைகள் கல்சியம் காபனேற் இரசாயன சேர்வையாகும். கல்சியம் காபனேற்றை காபோனிக்கமிலம் கரைக்கக் கூடியது. இதன் காரணமாகவே சுண்ணப்பாறைகள் கரைந்து நிலத்தடியை அடைந்து தேங்கி இருக்கிறது. பாறைகள் கரையும்போது சில இடங்களில் பெரிய பள்ளங்கள் ஏற்படுகின்றன. இப்பள்ளங்களில் பெரும் அளவு நீர் தேங்குகிறது. இப்பகுதிகளை வற்றாக் கிணறுகள் என்பர். இப்படியான வற்றாக் கிணறுகள் குடாநாட்டின் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

வற்றாக் கிணறுகள் மானிப்பாயில் இடிகுண்டு புத்தூர் நிலாவரையில் பெருங்கிணறு, வேம்பிராயில் வேம்பிராய்க்கிணறு , கரவெட்டியில் அத்துளுக்கிணறு மாயக் கையில் சின்னக் கந்தன் கிணறு ஊரெழுவில் பொக்கணை குரும்பசிட்டியில் பேய்க்கிணறு போன்றனவாகும். இக்கிணற்று நீரைக் கொண்டு குரும்பசிட்டி வாழ் மக்களின் தண்ணீரத் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று கருதிய இக்கிராமத்துப் பெரியோர் 1966ம் ஆண்டு இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த பிரதமர் டட்லி சேனநாயகவிடம் பேய்க்கிணறு திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி வேண்டகோள் சமர்ப்பித்தனர். பிரதமர் இந்த விண்ணப்பத்தை நீர்ப்பாசனப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தார். அக்காலகட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலநீர் ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டிருந்தது. அப்பிரிவு இந்த ஆய்வை மேற்கொண் டிருந்தது. இதற்குப் பொறுப்பாக நிலஆய்வாளர் திரு.CHL சிறிமானே என்பவர் நீர் ஆய்வைமேற்கொண்டார். அவருடைய ஆராய்ச்சிக்கான வழிமுறைகள் வருமாறு:- முதலில் இறைப்புச் சோதனை (Pumbing Test) நடத்த வேண்டும்.அது எப்படி எனில் முதல் மூன்று தினங்களுக்கு முதலில் நிமிடத்துக்கு 610 கலன் நீரை மின்பொறிமூலம் கிணற்றிலிருந்து இறைத்துக் கொண்டிருக்க வேண்டும். நீரை 30 நிமிடங்களுக்கு ஒரு முறை இரசாயனப் பரிசோதனை செய்து உப்பின் (குளோ ரைட்டின்) அளவைக் கணிக்க வேண்டும். மூன்று தினங்களும் நீரின் தன்மையில் மாறுதல் ஒன்றும் தென்படாவிட்டால் இறைப்பின் அளவைக் கூட்டித் தொடர்ந்தும் மூன்று தினங்களுக்கு கண்காணிக்க வேண்டும். இக்கணிப்புக்களின் பெறுபேறாக இந்நீரைக்கொண்டு சுமார் 15 ஏக்கர் நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாம். நீரை வழங்குவதாயின் தரைமட்டம் தாழ்வாக உள்ள பகுதிக்கே செலுத்தலாம் என்று ஆய்வாளர் தமது முடிவைத் தெரிவித்தார். இந்தத் தீர்ப்பு மேட்டுக்குடி மக்களைத் திருப்தி செய்யாத காரணத்தால் கைவிடும்படி முடிவு செய்தனர். இத்தோடு பேய்க்கிணறு ஆய்வு முடிவுக்கு வந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# எமது நன்றிகள்

- இம்மலருக்கு ஆசிச் செய்திகளை வழங்கிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் கல்விஅதிகாரிகள்

- கட்டுரைகள் தந்துதவிய பேராசிரியர்கள் மற்றும் எமது இனிய பழைய மாணவர்கள் முன்னாள் ஆசிரியர்கள்,

- நிறுவுநரின் திருவுருவப்படத்தை வரைந்து தந்த யாழ். வலய முதன்மை ஆசிரியர் ஓவியமணி செ.வரதராஜன் அவர்கள்.

- அட்டைப்படத்தை வரைந்து வழங்கிய எமது பழைய மாணவன் திரு. வ. பாலமுருகன் அவர்கள்.

- பயன்மிகு ஆலோசனைகள் வழங்கிய எமது ஊர் முதியவர்கள்.

- மனமுவந்து விளம்பரங்களைத் தந்து உற்சாகப்படுத்திய வர்த்தகப் பெருமக்கள்.

- இவ்வரும் பணியை நிறைவேற்றுவதற்கு நிதியுதவி வழங்கி ஊக்குவித்த ஊர் உடன்பிறப்புக்கள்.

- வேண்டிய உதவிகளை வேண்டும் போதெல்லாம் செய்துதவிய குரும்பசிட்டி இடம்பெயர்ந்தோர் நலன்காப்புக் கழகத்தினர்.

- மலரினை சிறந்த முறையில் கணனிப்பதிப்புச் செய்துதந்த நல்லூர் பிள்ளையார் அச்சகத்தினர்

- அனைவருக்கும் எமது இதயபூர்வமானநன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**மலர்க்குழுவினர்**



படிப்பகம்

குரும்பசிட்டி
பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம்
வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க.

# லக்சுமி புத்தக நிலையம்

# LAKSHME BOOK CENTRE

இந்தியப் புத்தகங்கள்
காகிதாதிகள்
எழுது கருவிகள்
பாடசாலை அலுவலகஉபகரணங்கள்
விநியோகஸ்தர்கள்

# லக்சுமி புத்தக நிலையம்

உரிமையாளர்
திரு.பொ.பாலசுப்பிரமணியம்
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

இல.312 (224), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஆயிரம் காலத்துப் பயிராக எங்கள் அறிவாலயம்
குரும்பசிட்டி
பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயம்
சிறந்தோங்க எங்கள் வாழ்த்துக்கள்

நவீன வீடியோ (Mixzer) கமரா
மூலம்படம் பிடித்துக் கொள்வதற்கும்



சிறந்த கலர்ப் படங்களைப்
பிடித்துக் கொள்வதற்கும்
கம்பியூட்டர் வீடியோ மிக்சிங்
செய்து
கொள்வதற்கும்
நாடுங்கள்:-

போட்டோ ஶ்ரீ
PHOTO SREE

குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

*தற்போதைய முகவரி:*

குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

www.padippakam.com


பொன்பரமானந்தர் மகாவித்தியாலயம்
பல்லாண்டு வாழ்க ! வளமுடன் எழுக !

⌘ 'கூட்டுறவே நாட்டுயர்வு' ⌘

❖ நுகர்ச்சிப்பொருட்கள்
❖ கட்டிடப்பொருட்கள்
❖ பாடசாலை உபகரணங்கள்
❖ விவசாய உபகரணங்கள்
❖ கிருமிநாசினிகள்
❖ புடைவை வகைகள்

முதலானவற்றை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

↓

# தெல்லிப்பழை

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

தெல்லிப்பழை

www.padippakam.com


*With Best Compliments*
*From*

# CHAMPION THREAD MANUFACTURING COMPANY

**SPEED MASTER & EVEREST**

**Brand Polyester Sewing Thread,**

**RABBIT**

**Brand Cotton Sewing Thread and Wool Knitting Yarn,**

**DAM & LADY BIRD**

**Brands Embroidery Thread,**

**In various shades on TUBES, CONES, SKEINS and Balls**
**For Domentic and Industrial use.**

No.100, New Moor Street,
Colombo 12.

Tel : 435034, 451528
Fax : 335622, 341550
E.Mail:champtrd@sltnet.lk

www.padippakam.com


GAYTHANA

Jewellers & Pawn Brokers

202, SEA STREET, COLOMBO - 11.
Phone: 472425, 437984, 438708.

காயதனா ஜுவல்லர்ஸ்

அடவு பிடிக்கப்படும்

202, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 472425, 437984, 438708





S. Jeyakanthan
proprietor

JENA HANDICRAFT


Wooden Handicrafts
Manufacturers and Exporters

Phone: 522956
Fax : 527820

284-285, Modera Street,
Colombo - 15
Sri Lanka


படிப்பகம்

www.padippakam.com

BEST COMPLIMENTS
OF

MEDITEST

MEDICAL
LABORATORY
SERVICES



118, VIVEKANADA HILL,
COLOMBO - 13.
PHONE - 01-459580.


படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் வங்கி

## உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல் உங்களைத் தொடர்ந்துவரும் "மக்கள் வங்கி" மக்கள் சேவையில் 40 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது.

- 60 இலட்சம் வாடிக்கையாளர்கள்!!
- 400 ற்கும் மேற்பட்ட கிளைகள்!!

இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில் நீங்களும் சேருங்கள்!!
வங்கியின் வழமையான சேவைகளுடன்

- பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத் திட்டம் "மாணவர் மலர்ச்சி"
- மகளிருக்கான திட்டம் "மகளிர் அதிர்ஷ்ட்டக் கணக்கு"
- ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "குருசெத"
- சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "சுவசெவன"
- தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கான திட்டம் "சுயதொழில் ஊக்குவிப்புக்கடன்"
- முதியோருக்கான திட்டம் "மூத்த பிரஜைகள் யாத்திரைக்கணக்கு"
- வருடந்தோரும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்டலாபப் பரிசு வழங்கும் திட்டம்
- இன்னும் பலப்பல திட்டங்கள் அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே!!!

- இலட்சோப லட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின் வாடிக்கையாளராகி நலம் பல பெறுவீர்!!

மக்கள் மனமறிந்த வங்கி "மக்கள் வங்கி"

பிரதேச தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்

படிப்பகம்

www.padippakam.com


# என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
# அண்ணா தயாரிப்புகளே

- ❋ அண்ணா கோப்பி
- ❋ அண்ணா பற்பொடி
- ❋ அண்ணா பத்தி
- ❋ அண்ணா ரொபி வகை
- ❋ குரக்கன் மா
- ❋ ஆட்டா மா
- ❋ வறுத்த அரிசி மா
- ❋ உழுந்து மா
- ❋ பச்சை அரிசி மா

மற்றும்

## கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்துமா

# "ஜீவா காரம்"

எம்மிடம் :

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைமை அலுவலகம் :**

**அண்ணா தொழிலகம்**

துரைவீதி,
இணுவில்
தொலைபேசி : 3565

**கிளை :**

4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2380


படிப்பகம்